442

ATLAS GEOGRAPHY
OF THE
MADRAS PRESIDENCY

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: :: MADRAS

சென்னை இராஜதானி பூகோளம்

915 4824

நன்னிலம்
போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்
என். ஆர். சுப்பிரமணிய அய்யர், பி. ஏ., எல். டி.,
அவர்கள் எழுதியது

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
மதுரை :: :: சென்னை
1938

ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 8.

First Edition:—1938.

முகவுரை.

சென்னை இராஜதானி பூகோளம் தற்காலம் வித்தியா இலாகா அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதியை அனுசரித்து எளிய இனிய தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது.

பூமியிலுள்ள வஸ்துக்களை ஒருவன் ஆராய்வதற்கு முன் அவ் வஸ்துக்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள பூமியைப்பற்றி முதலில் ஆராய்ந்தறிய வேண்டியது முக்கிய கடமையாயிருக்கிறது.

இக்காரணம் பற்றியே பாடசாலை மாணவர்களுக் கேற்பட்டுள்ள முக்கிய பாடங்களில் பூகோள சாஸ்திரம் முன்னிலையிற் கருதப்பட்டு வருகிறது. பூகோள சம்பந்தமான விபரங்களை இளைஞர்கள் இலகுவில் உணர்வது சிரமமாதலால் அவர்களை நேரில் அழைத்துச் சென்று காண்பிப்பது போலப் போக்குவரவு மார்க்கங்களைப்பற்றி மாணவர்களுக்கு உள்ளக் கிளர்ச்சியும் உற்சாகமும் உண்டாகும் வண்ணம் புதிய முறையில் வர்ணனைகள் அனுசரிக்கப்பெற் றிருக்கிறது.

தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்பிப்பதே போதிக்கும் முறையாதலால் ஆங்காங்கே தேச படங்களின் உதவியைக் கொண்டும், சித்திரப்படங்களின் உதவியைக்கொண்டும் மாணவர்கள் மகிழ்ச்சியோடு குறிப்பாயறிந்துணர்ந்து கொள்ளுதற் கேதுவாக விளக்கப் பெற்றிருக்கிறது.

படித்த பாடங்களைத் தாமே சிந்தித்துப் பாடம் பண்ணிக்கொள்ளத்தக்க முறையில் ஒவ்வொரு பாட இறுதியிலும் அப்பாடங்களுக்குரிய முக்கியமான பயிற்சிக் கேள்விகளும் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

இதைக் கண்ணுறும் ஆசிரியர்கள் இனிது ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

என். ஆர். சுப்பிரமணிய அய்யர்.

பொருள் அடக்கம்.

எண்.			பக்கம்.
1.	பொது விஷயங்கள்	....	5
2.	இந்தியாவின் இயற்கை அமைப்பு	....	6
3.	சென்னை இராஜதானியின் இயற்கை அமைப்பு	....	9
4.	மலைகள்	....	12
5.	நதிகள்	...	13
	(1) வங்காளக்குடாக்கடலில் விழும் ஆறுகள்	....	15
	(2) அரபிக்கடலில் விழும் ஆறுகள்	....	17
6.	சீதோஷ்ணம்	....	18
7.	பருவக்காற்றுகளும், மழையும்	....	22
8.	நீர்ப் பாசனம்	...	27
	(1) ஆற்றுப் பாசனம்	....	28
	(2) ஏரிப் பாசனம்	....	29
	(3) கிணற்றுப் பாசனம்	...	,,
9.	பூசாரங்களும், பயிர்களும்	....	31
10.	தாதுப்பொருள்கள்	....	35
11.	பிராணி வர்க்கங்கள்	....	36
12.	ஜனங்களும், பாஷைகளும்	....	37
13.	ஜனங்களின் தொழில்	...	41
14.	போக்கு வரவு சாதனங்கள்	....	44
15.	ஏற்றுமதி இறக்குமதிகள்	....	49
16.	நமது இராஜதானியின் ஜில்லாக்கள்	...	51
17.	சுற்றுப்பிரயாணம்	....	69
18.	சுற்றுப்பிரயாணத் தொடர்ச்சி	....	77
19.	சுற்றுப்பிரயாணம் கடல் மார்க்கம்	....	79
20.	நமது இராஜதானியைச் சேர்ந்த இந்திய அரசாங்கங்கள்		83
21.	உலக விஷயங்கள்.	...	86

படங்கள்.

எண்.		பக்கம்.	எண்.		பக்கம்.
1.	இந்தியா, சென்னைமாகாணம்	4	10.	பிராணிகளும், தாதுப்பொருள்களும்	34
2.	பூகோள சாஸ்திர அடையாளங்கள்	,,	11.	ஜனங்கள், பாஷை	38
3.	இந்தியா இயற்கை அமைப்பு	6	12.	கைத்தொழில்	40
4.	சென்னைமாகாணம் மலைகள், ஆறுகள், ஏரிகள்	8	13.	ரஸ்தாக்கள், கால்வாய்கள்	46
5.	நதிகள்	14	14.	வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி	48
6.	கோடைகால மழை	24	15.	ஜில்லாக்களும், முக்கிய பட்டணங்களும்	50
7.	குளிர்கால மழை	,,	16.	இருப்புப்பாதைகள்	70
8.	நீர்ப்பாசனம்	26	17.	துறைமுகங்கள், கடல் மார்க்கங்கள்	80
9.	முக்கிய விளைபொருள்கள்	30	18.	உலகப்படம்.	85

சித்திரப்படங்கள்.

1.	கொடைக்கானல் மலை	13	26.	திருச்செங்கோடு மலை	59
2.	பெஜவாடா கால்வாய்	15	27.	ஸ்ரீரங்கம்	,,
3.	சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி	16	28.	திருச்சி மலைக்கோட்டை	,,
4.	சீதோஷ்ணம்	18	29.	சேர்வராயன் மலை: ஏர்க்காடு	60
5.	நிலக்காற்று	20	30.	கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலை	61
6.	கடல் காற்று	,,	31.	கூனூர் பஜார்	62
7.	உஷ்ணமானி	,,	32.	நீலகிரி இருப்புப்பாதை	,,
8.	ஜலமானி	23	33.	தஞ்சாவூர் கோவில்	64
9.	நீர்ப்பாசனம்	27	34.	கும்பகோணம் மகாமகக்குளம்	65
10.	பெரியாற்று அணை	28	35.	மதுரைக் கோவில்	,,
11.	ஏரிப்பாசனம்	29	36.	மஹால்	,,
12.	கிணற்றுப்பாசனம்	,,	37.	இராமேசுவரம் கோவில்	66
13.	யானைகள் மரங்களைத் தூக்கிவருதல்	33	38.	தனுஷ்கோடி துறைமுகம்	,,
14.	நெசவு	41	39.	தூத்துக்குடி துறைமுகம்	,,
15.	கை ராட்டினம்	,,	40.	உப்பங்கழி	67
16.	நூல் நூற்கும் யந்திரசாலை	42	41.	எழும்பூர் ஸ்டேஷன்	71
17.	பக்கிங்ஹாம் மில்	,,	42.	கிண்டி எலெக்ட்ரிக் ரயில்வே ஸ்டேஷன்	,,
18.	விசாகப்பட்டணம் துறைமுகம்	51	43.	திருக்கழுக்குன்றம்	72
19.	வேலூர்	55	44.	நாகூர் பள்ளிவாசல்	73
20.	திருவண்ணாமலை	56	45.	திருச்செந்தூர் கோவில்	74
21.	சிதம்பரம் கோவில்	,,	46.	பாபநாசம் மில்	75
22.	அண்ணாமலை யூனிவர்ஸிடி	,,	47.	திருக்குற்றாலம் நீர்வீழ்ச்சி	,,
23.	மகாபலிபுரம்	57	48.	ஸ்டீமர்	79
24.	காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில்	,,	49.	புதுச்சேரித் துறைமுகம்	82
25.	சென்னை ஹைகோர்ட்டு	58			



இந்தியா
சென்னை மாகாணம்
சென்னை இராஜதானி
சுதேச இராஜ்யங்கள்.
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
சென்னை
இந்து மகா சமுத்திரம்



எரிமலை
சிகரம்
கணவாய்
மலை
முனை
ஓடை
பீடபூமி
ஏரி
நீர்வீழ்ச்சி
சமவெளி
தீபகற்பம்
பூசந்தி
குன்று
ஆறு
உபநதி
விரிகுடா
காடு
டெல்டா
வளைகுடா
ஜலசந்தி
தீவு
தீவுகளின் கூட்டம்
துறைமுகம்
கடல்

சென்னை இராஜதானி பூகோளம்

அத்தியாயம்—1.

பொது விஷயங்கள்.

குழந்தைகளே! இப்பொழுது நாம் படிக்கப்புகுவது சென்னை இராஜதானியின் பூகோளமாகும். சென்ற வருஷத்தில் நமது ஜில்லாவின் பூகோளத்தை ஆராய்ச்சி செய்தோம். அதிலிருந்து நாம் தெரிந்துகொண்டது என்னவென்றால் நமது ஜில்லாவின் அமைப்பு, அதிலுள்ள பலவிதமான பூபாகங்கள், ஆறுகள், விளை பொருள்கள், கைத்தொழில்கள், முக்கியமான பட்டணங்கள், ஏற்றுமதி இறக்குமதிகள், ஜனங்களின் வாழ்க்கை, சீதோஷ்ண நிலைமை முதலியவைகளாகும்.

இப்பொழுது நாம் அறிந்துகொள்ள விரும்பும் பூகோளமானது, நமது ஜில்லாவைப்போல் சுமார் இருபது பங்கு அதிகமான பூபாகத்தின் விஷயங்களைக் கொண்டதாகும். நாம்வசிக்கும் இராஜதானிக்குச் சென்னை ராஜதானி என்று பெயர். அது நமது தேசமாகிய இந்தியாவின் ஒரு பாகமாகும். படத்தில் பார்த்தால், அவ்விந்தியாதேசமானது ஆசியா கண்டமென்று சொல்லப்படும் மிகப் பெரிய பூபாகத்தின், ஒரு பகுதியாகுமென்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆசியாவைப்போல் இன்னும் பல கண்டங்கள் அடங்கியது நாம் வசிக்கும் பூமியாகும்.

நமது இராஜதானிக்குச் சென்னை மாகாணம் என்று ஏன் பெயர் வழங்குகிறது என்பதைச் சற்று ஆராய்வோம். இப்பெயர் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்யவந்த காலத்திற்குப் பிறகுதான் ஏற்பட்டது. அவர்கள் பண்டகசாலை கட்டுவதற்காகக் கடலோரங்களில் அநேக இடங்களை வாங்கிக்கொண்டார்கள். அவைகளில் ஒன்றிற்குச் சென்ன புரி அல்லது சென்னைப்பட்டணம் என்று பெயர். அதற்கு மதராஸ் என்ற மற்றொரு பெயருமுண்டு. படத்தில் பார்த்தால் அது நமது ராஜதானியின் சற்றேறக்குறைய மத்திய பாகத்தில் வங்காளக் குடாக்கரையில் அமைந்திருப்பதைக் காணலாம். அது ஆதியில் ஒரு சிறு கிராமமாக இருந்தது. சந்திரகிரியை ஆண்டு வந்த ஒரு அரசனிடமிருந்து ஆங்கிலேயர் சுமார் 300 வருஷங்களுக்கு முன் அவ்வூரைப்பெற்றார்கள். அவன் வேண்டுகோளுக்கு இணங்க அதற்குச் சென்னப்பன் ஊர் என்று பெயரிட்டார்கள். நாளடைவில் அது பெரியபட்டணமாக ஆக்கப்பட்டது. ஆகையால் அதற்குச் **சென்னபட்டணம்** என்று பெயர் வழங்கலாயிற்று. அதன் மற்றொரு பெயர் **மதராஸ்.** இப்பெயர் எப்படி ஏற்பட்டதென்று கேட்பீர்கள். அக்காலத்தில் மகமதியர்களால் மதராஸா என்ற ஒரு பள்ளிக்கூடம் வைத்து நடத்தப்பட்டதால் உச்சரிப்புக்கு எளிதான இச்சிறு பெயர் சில ஆங்கிலேயர்களால் அளிக்கப்பட்டு, அது முதல் இதற்கு மதராஸ் என்று பெயர் வழங்கி வருகிறது.

பயிற்சி.

(1) நீ வசிக்கும் ஜில்லாவின் பெயர் என்ன?

(2) அது சென்னை இராஜதானியின் எப்பாகத்தில் அமைந்துள்ளது?

(3) சென்னைஇராஜதானியானது நமதுஇந்து தேசத்தில் எவ்விடத்தில் இருக்கிறது?

(4) இந்தியா தேசம் எந்தக் கண்டத்தின் பிரிவாகும்?

(5) அது அந்தக் கண்டத்தின் எப்பாகத் தில் இருக்கிறது?

(6) இந்தியாவின் படம் வரைந்து அதில் சென்னை இராஜதானி இருக்கும் இடத்தைக் குறிக்கவும்.



அத்தியாயம் 2.

இந்தியாவின் இயற்கை அமைப்பு.

பிள்ளைகளே! இந்தியாவின் படத் தைப் பாருங்கள்! அதைப்பார்த்தால் அதன் இயற்கை அமைப்பைத் தெரிந்துகொள்ளலாம். அது உருவத்தில் ஒரு முக்கோணம்போல் தோன்று கிறது. அதன் அடிப்பாகம் வடக்கே யும், நுனிப்பாகம் தெற்கேயும் இருக் கிறது. அதன் வடக்கெல்லையில் ஒரு பெரும் மலைத்தொடர்ச்சி இருப்பதைக் கவனியுங்கள். இம்மலைத்தொடர்ச்சி பூமி யிலுள்ள எல்லாமலைகளைக் காட்டிலும் மிகவும் உயரமானது. அதுவே இந்தி யாவுக்கு இயற்கையாக அமைந்த வடக் கெல்லையாகும். இதன் பெயர் **இமய மலையாகும்**. இம்மலையின் மேற்குக்கோடி

யிலிருந்து தென்புறமாகச் சிறுமலைத் தொடர்கள் தெற்குச் சமுத்திரக்கரையில் செல்லுகின்றன. அவ்வாறே கிழ்ப் புறத்திலும் சிறு மலைத்தொடர்கள் கடலோரம் வரையில் செல்லுகின்றன. மற்ற பாகங்களில் நமது தேசமானது ஜலத்தினால் சூழப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலப்பகுதிக்குத் **தீபகற்பம்** என்று பெயர். அதனால் இந்தியாவானது ஒரு தீபகற்பமாகும்.

மேற்சொன்ன மலைத்தொடர்கள் இந்தியாவை வடக்கே **திபேத்** என்னும் பீடபூமியிலிருந்தும், மேற்கே **ஆப்கானிஸ்தானம்**, **பெலுஜிஸ்தானம்**, என்னும் தேசங்களிலிருந்தும், கிழக்கே **பர்மா** தேசத்திலிருந்தும் பிரிக்கின்றன. இப்பெரும் மலைத்தொடர்களினால் நமது தேசமானது ஆசியாவின் மற்றபாகங்களிலிருந்து பிரிக்கப் பட்டிருப்பதால் இதற்கும், மற்ற இடங்களுக்கும்தாராளமாகப் போக்கு வரவில்லாமல் தடைப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் வடமேற்கு மலைத்தொடரில் சில கணவாய்கள் இருப்பதால், அதன் வழியாக அடிக்கடி அயல் நாட்டினர், வியாபாரத்துக்கு வந்திருக்கின்றனர். உள்நாட்டுச் சண்டையினால் பலவீனமடைந்த காலங்களில், இதர ஜாதியார்கள் மேற்கு ஆசியாவிலிருந்து இக்கணவாய்களின் வழியாக இந்தியாவில் படையெடுத்திருக்கிறார்கள். அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதனால் நமது தேசத்தின் ராஜ்யம் மாறுவதும், பிற சாதியினர் இங்கே குடியேறுவதுமாக ஏற்பட்டு வந்திருக்கின்றன.

இத்தகைய வசதி வடகிழக்கு மலைத்தொடர்களில் இல்லாததனால் இவ்வாறான படையெடுப்பு அவ்வழியாக அதிகமாக நடைபெறவில்லை.

படத்தை நன்றாகக் கவனித்தால் இமயமலையின் தென் பாகத்தில் பெரிய ஆறுகள் ஓடுவதைக் காணலாம். அவைகளில் முக்கியமானவை **சிந்து**, **கங்கை**, **பிரமபுத்திரா** என்பவைகளே. இவைகளின் இருபுறங்களிலும் அகன்ற சமவெளிகள் இருக்கின்றன. இந்த ஆறுகளிலிருந்து வருஷந்தோறும் ஏற்படும் வெள்ளங்களினால் இச்சமவெளிகளில் மிகுதியான வண்டல் படிகிறது. அதனால் இச்சமவெளி மிகச்செழிப்பாயிருக்கிறது. இதற்குத் தெற்கே சிறு மலைகள் நிறைந்த ஒரு பீடபூமி இருப்பதைப் பார்க்கலாம். இதற்குத் **தட்சிணபீடபூமி** என்று பெயர். இதன் மேற்கெல்லை மேற்குத்தொடர்ச்சி மலையும், கிழக்கெல்லை கிழக்குத் தொடர்ச்சி மலையுமாகும். மேற்குப் பாகம் மேடாகவும், கிழக்குப் பாகம் வரவரச் சரிவாகவும் இருப்பதனால் இவ்விடத்தில் ஓடும் நதிகளெல்லாம் அநேகமாக மேற்கிலிருந்து கிழக்கிலேயே செல்லுகின்றன. நான்கு புறங்களும் சிறு மலைகளால் சூழப்பட்டிருப்பதால் இதில் மழை மிகக் குறைவாகப் பெய்கிறது. அதனால் இப்பிரதேசம் செழிப்பானதன்று.

மேற்கூறிய பூபாகங்களைத் தவிர சமுத்திரக் கரையோரமாகச் சமவெளிகள் அமைந்து கிடப்பதையும் பார்க்கலாம். மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பாகத்திலுள்ள சமவெளி குறுகலாகவும், கிழக்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப்பாகத்திலுள்ள சமவெளி இதைக் காட்டிலும் மிக அகலமாகவும் இருக்கிறது. இவற்றின் வழியாகச் செல்லும் ஆறுகளின் வண்டல்களினால் இப்பூபாகங்களும் வடக்குச் சமவெளிகளைப் போல்செழிப்பாக இருக்கின்றன. நமது இராஜதானியின் படத்தைப்பார்த்தால் தட்சிண பீடபூமியின் ஒரு பாகமும், மேற்குக் கடற்கரைச் சமவெளியின் ஒரு பாகமும், கிழக்குக்கடற்கரைச் சமவெளியின் பெரும்பாலான பாகமும் இதைச் சேர்ந்ததெனக் காணலாம். இதன் தென்மேற்குப்பாகத்தில் சுதேச ராஜ்யங்களான திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களும், தெற்கில் புதுக்


சென்னை மாகாணம்
மலைகள், ஆறுகள், ஏரிகள்.
சில்கா ஏரி
கோதாவரி
நிஜாம்ராஜ்யம்
கிருஷ்ணை
கோல்லேறு ஏரி
பம்பாய்
இராஜதானி
துங்கபத்திரை
கம்பம் ஏரி
குத்தி மலை
வடபெண்ணை
உதயகிரி
வங்காளக்
குடாக்கடல்
புழலேரி
பழவேற்காடு ஏரி
சென்னபட்டணம்
செம்பரம்பாக்கம் ஏரி
தென்பெண்ணை
ஜவ்வாது மலை
வீராணத்து ஏரி
சேர்வராய மலை
காலேரி மலை
பச்சை மலை
கொள்ளிடம்
நீலகிரி
வைகை
தாமிரபரணி
பீட பூமி
சமவெளி
சுதேசஇராஜ்யம்.
சென்னை மாகாணம்
அரபிக்
கடல்
இலங்கை
இந்து மகா சமுத்திரம்

கோட்டையும், வடக்கே பங்கனபள்ளி, சாந்தூர், முதலிய சிற்றரசுகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பயிற்சி.

(1) இந்தியாவின் வடக்கெல்லை என்ன?
(2) அதன் உருவம் எப்படி அமைந்திருக்கிறது?
(3) இந்தியாவுக்கும், மற்ற ஆசிய நாடுகளுக்கும் எவ்வழியாகச் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது?
(4) இந்தியாவின் முக்கிய பூ பாகங்கள் எவை?
(5) தீபகற்பம் என்றாலென்ன?
(6) வடஇந்தியாவின் முக்கிய நதிகள் யாவை?
(7) தென்னிந்தியாவின் நதிகள் பெரும்பாலும் எத்திசையை நோக்கிச் செல்லுகின்றன? ஏன்?

அத்தியாயம் 3.

சென்னை இராஜதானியின் இயற்கை அமைப்பு.

சிறுவர்களே! நமது இராஜதானியின் பூகோளத்தின் அம்சங்களை ஆழ்ந்து கவனிக்குமுன், அதனுடைய இயற்கையமைப்பையும், அதனால் ஆங்காங்கு வசிக்கும் ஜனங்களின் வாழ்க்கையானது எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதையும், நாம் அறியவேண்டியது இன்றியமையாததாகும். ஒரு தேசத்தின் பூகோளத்தைப் படிக்கவேண்டுமென்றால் அதனுடைய இயற்கையமைப்பு, அதிலிருக்கும் மலைகள், சமவெளிகள், சமுத்திரம், ஆறுகள் முதலியவைகளை மட்டிலும் தெரிந்துகொள்வதல்ல. அதில் வசிக்கும் மனிதனது வாழ்க்கை, செய்கைகள், அவன் இயற்கைச் சாதனங்களை எப்படித் தன்னுடைய சுகத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறான் என்பது, இயற்கை அமைப்பினால் அவன் வாழ்க்கை எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பது, ஆகிய இவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இவைகள் எல்லாவற்றையும் ஆராய்வதற்கு நமக்கு முக்கியமான சாதனம் தேசப்படமாகும். ஆகையால் நமது இராஜதானியின் படத்தைக் கவனிப்போம்.

சென்ற வகுப்பில் படத்தின் திசைகளை எப்படி அறிவதென்று கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகையால் படத்தைப் பார்த்தவுடன் அதன் நான்கெல்லைகளும் இன்னவையென்று சுலபமாகத்தெரிந்து கொள்ளலாம். தென்னிந்தியாவானது வடக்கே அகலமாகவும் தெற்கே வரவரக் குறுகி ஒரு கோணம் போல் தெற்கு நுனியில் முடிவடைகிறது. இந்த நுனிப்பகுதிக்குக் **கன்னியாகுமரி முனை** என்று பெயர். தெற்கே இந்து மகா சமுத்திரமும், மேற்கிலும், கிழக்கிலும் முறையே அதன் பிரிவுகளான அரபிக்கடலும், வங்காள விரிகுடாவும் இருக்கின்றன. தென்கிழக்குப் பாகத்தில் சமுத்திரத்தின் கொஞ்ச தூரத்திற்கப்பால் மாங்காய் வடிவம் போல் தெற்குப் பாகம் அகலமாகவும், வடக்குப்பாகம் கூர்மையாகவும் உள்ள ஒரு தீவு அமைந்திருக்கிறது.

அதற்கு **இலங்கை** என்று பெயர் வழங்கி வருகிறது. அது இந்தியாவைச் சேர்ந்த தீவாயிருந்தபோதிலும், அதன் அரசாங்கம் சென்னை இராஜதானியின் அரசாங்கத்தைச் சேர்ந்ததன்று. அதற்கும் இந்தியாவிற்கும் மத்தியில் வடபுறமாகப் **பாக்ஸ்** ஜலசந்தியும், தென்புறமாக **மன்னார்குடாவும்** இருக்கின்றன. இலங்கையின் வட கோடியிலுள்ள கூர்மையான பாகத்திற்குப் **பீட்ரோமுனை** என்று பெயர். அதற்கு எதிர்முகமாகப் பாக்ஸ் ஜலசந்திக்கு அப்பால் தோன்றும் கூர்மையான பாகத்திற்குக் **கலிமீர்முனை** என்று பெயர். இதுவே கோடிக்கரை என்று சொல்லப்படும்.

இதன் வடகிழக்கெல்லையில் ஆரம்பித்துக்கடற்கரையோரமாகத் தெற்கே சென்று பார்ப்போம். வடகிழக்குக் கோடியில் **சில்கா** என்னும் ஏரி அமைந்திருக்கிறது. இது அதிக ஆழ முடையதன்று. பூமியின் உட்புறமான ஏரியாய் இல்லாது சமுத்திரக் கரையோரத்தில் அமைந்திருப்பதால் சில சமயங்களில் கடல் ஜலமானது இதில் வந்து கலக்கிறது. அதனல் இதன் ஜலம் உப்பாக இருக்கிறது. இதிலிருந்து தெற்கேவரும் சமுத்திரக்கரைச் சம வெளியானது மிகக் குறுகலாக இருக்கிறது. மேற்குப் பாகத்தில் கிழக்கு மலைத்தொடர்ச்சியிலுள்ள குன்றுகள் ஏராளமாய் இருக்கின்றன. தெற்கே கோதாவரி நதிக் கரையைத் தாண்டிக் கிருஷ்ணு நதியின் முகத்துவாரம் வரையில் ஒருவிதமான பூபாகமாகிறது. இதிலுள்ள ஜில்லாக்களுக்கு முறையே கஞ்சம், விசாகப் பட்டணம், கோதாவரி, குண்டூர் என்று பெயர். இவைகள் எல்லாவற்றிற்கும் **வடஸர்க்கார்கள்** என்று பெயர். இதன் வழியாக ஓடும் முக்கியமான நதிகள் **கோதாவரி**, **கிருஷ்ணு** என்பவைகள். விசாகப்பட்டணம் என்பது முக்கியமான துறைமுகப் பட்டணமாகும். இது சமீப காலத்தில் திறந்து வைக்கப்பட்டது. இது ஒரு இயற்கையான துறைமுகம். இராஜ மகேந்திரபுரம், ஏலூர், குண்டூர், பெஜவாடா என்பவைகள் மற்ற முக்கியமான பட்டணங்கள். விசாகப்பட்டணத்தைத்தவிரக் காக்கிஞடா, மசூலிப்பட்டணம் என்பவைகள் மற்ற துறைமுகப் பட்டணங்களாகும்.

கிருஷ்ணு நதிக்கரையிலிருந்து தெற்கே சென்றுல் சமுத்திரக் கரையோரத்திலுள்ள சம வெளியானது வர வர அகன்று கன்னியாகுமரி வரையில் பரவியிருக்கிறது. இதுதான் **கர்னுடக தேசம்**. இதற்குக் **குரமண்டலம்** என்றும் மற்றொரு பெயருண்டு. இதில் பாயும் முக்கிய ஆறுகள் வடக்கிலிருந்து வட பெண்ணை, பாலாறு, தென்பெண்ணை, வெள்ளாறு, காவேரி, வைகை, தாமிர பரணி முதலியவைகள். இந்நதிகளைப் படத்தில் பார்த்து இவைகள் எங்கிருந்து உற்பத்தியாகி எவ்வழியாகச் சென்று சமுத்திரத்தில் கலக்கின்றன என்பதைக் கவனிக்கவும். இந்நதிகளில் எக்காலத்திலும் பிரவாஹம் இருப்பதில்லை. கிழக்குச் சமுத்திரக் கரையோரத்தில் மதராஸ் என்னும் நமது இராஜதானியின் தலைமை நகரமானது அமைந்திருக்குமிடத்தைக் கவனித்துப் பார்க்கவும்.

இது நமது இராஜதானியில் சற்றேறக்குறைய மத்திய பாகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு முக்கியமான துறைமுகப் பட்டணமாகும். மற்றும் புதுச்சேரி, கூடலூர், காரைக்கால், நாகப்பட்டினம், தனுஷ்கோடி, தூத்துக்குடி முதலிய துறைமுகங்களுமிருக்கின்றன.

கன்னியாகுமரியிலிருந்து மேற்குச் சமுத்திரக் கரையோரமாக வடக்கே சென்றுல் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள சமவெளியானது மிகக்குறுகலாயிருப்பதைக் காணலாம். சமுத்திரக் கரையோரமும், கிழக்குச் சமுத்திரக் கரை போல் தட்டையாய் அகன்ற மணல் வெளியா யில்லாமல் பலவிடங்களில் செங்குத்தாகவும், மலைப்பாங்காகவும் இருப்பதைக் காணலாம். இப்பிரதேசத்திற்கு **மலையாளம்** என்று பெயர். உயர்ந்த மேற்குத் தொடர்ச்சிமலைகளிலிருந்து சிற்றருவிகள் இப்பிரதேசங்களில் வேகமாய்ப் பாய்ந்து சமுத்திரத்தில் சேர்கின்றன. அவைகளுள் முக்கியமானவை, **பெரியாறு**, **பொன்னுனி**, **பேய்ப்பூர்** நதிகளாகும். திருவனந்தபுரம், கொச்சி, தலைச்சேரி, கண்ணனூர், மங்களூர் முதலியவைகள் இங்குள்ள முக்கிய பட்டணங்களாகும். இவற்றுள் கோச்சி முக்கியமான துறைமுகம். இது சமீப காலத்தில் திறந்துவைக்கப்பட்டு இவ்

விடத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்குக் கடற்கரையோரத்துக்கு அப்பால் அரபிக்கடலில் சிறு தீவுகள் இருப்பதைப் பாருங்கள். அவைகளின் பெயர்கள் **லட்சத்தீவுகள்** என்றும், **மாலத்தீவுகள்** என்றும் வழங்குகின்றன. அவைகளில் வசிப்பவர்கள் பெரும்பாலும் செம்படவர்களும், விவசாயிகளுமே ஆவர். இவைகளில் மலையாளத்தில் வசிக்கும் முகமதிய மதத்தவரான மாப்பிள்ளைமார்கள் குடியேறி இருக்கிறார்கள். அவர்கள் வெகு நூற்றாண்டுகளுக்கு முன் அராபிதேசத்திலிருந்து இங்கு வந்தவர்கள். இத்தீவுகளில் ஏராளமாகத் தென்னை மரங்கள் வளர்கின்றன. கயிற்றுப் பாய்கள் பின்னியும், கீற்றுகள் முடைந்தும் அவர்கள் ஜீவிக்கிறார்கள்.

நமது இராஜதானியில் சமுத்திரக் கரைப் பிரதேசங்களைத்தவிரப் பீடபூமியென்று சொல்லக்கூடிய பிரதேசமும் இருக்கிறது. அது நமது இராஜதானிக்கும், நிஜாம் ராஜ்யத்துக்கும், நடுவில் அமைந்திருக்கிறது. இதற்கு வடக்கே **துங்கபத்திரா, கிருஷ்ணா** நதிகளும் மேற்கே மைசூர் பீடபூமியும், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இருக்கின்றன. இவைகளிலுள்ள முக்கியமான ஜில்லாக்கள் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் முதலியவைகள். இவைகள் நிஜாம் அரசனால் ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்ட காரணம் பற்றி இவைகளுக்கு **விடப்பட்ட நாடுகள்** (Ceded Districts) என்று பெயர்.

பயிற்சி.

(1) நமது இராஜதானியின்வடக்குக் கோடியிலுள்ள ஏரியின் பெயரென்ன?

(2) கோதாவரி, கிருஷ்ணா, இவ்விரண்டு நதிகளும் எவ்விடத்தில் இருக்கின்றன?

(3) வடஸர்க்கார் என்று எவைகளுக்குப் பெயர்?

(4) கிழக்குச் சமுத்திரக் கரைக்கு ஏற்பட்ட பொதுப் பெயர் யாது?

(5) மதராஸ் எங்கே இருக்கிறது?

(6) கிழக்குச் சமுத்திரக் கரையோரத்திலுள்ள சம வெளிகளின் வட பாகத்திற்கும், தென் பாகத்திற்கும், மேற்குச் சமுத்திரக் கரையோரத்திலுள்ள சம வெளிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

(7) தென்னிந்தியாவில் ஓடும் ஆறுகளின் பெயரென்ன?

(8) தென்னிந்தியாவின் முக்கிய துறைமுகங்களைக் கூறுக.

(9) அவற்றில் சமீபகாலத்தில் திறந்து வைக்கப்பட்ட இரண்டு துறை முகங்களின் பெயர் என்ன?

(10) ஜலசந்தி என்றால் என்ன? நீ படித்திருக்கிற நமது இராஜதானியைச் சேர்ந்த ஜலசந்தியின் பெயரை எழுது.

(11) குடா என்றாலென்ன? நீ அறிந்த ஒரு சிறு குடாவின் பெயரும், பெரிய குடாவின் பெயரும் கூறு.

(12) தென்னிந்தியாவின் மேற்குப் பாகத்திலிருக்கும் கடல் யாது?

(13) பீடபூமி யென்றால் என்ன?

(14) நமது இராஜதானியின் பீடபூமி எங்கே இருக்கிறது?

(15) அதிலுள்ள ஜில்லாக்களுக்கு என்ன பெயர்?

(16) முனையென்றாலென்ன?

(17) தென்னிந்தியாவிலுள்ள இரண்டு சிறு முனைகளைக் கூறுக.

அத்தியாயம் 4.

மலைகள்.

பிள்ளைகளே! தென்னிந்தியாவில் விசேஷமாக மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், அவற்றின் பிரிவுகளும் இருக்கின்றன என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். மேற்குத் தொடர்ச்சி மலையானது மேற்குச்சமுத்திரக் கரையோரமாகப் பம்பாய், புனா முதலிய வட நகரங்களுக்கு அப்பாலிருந்து தெற்கு நோக்கிக் கன்னியாகுமரிவரை ஓடும் மலைத்தொடராகும். அவைகள் ஒரே மலைத்தொடர் அல்ல. நடுவில் பள்ளத்தாக்குகளுடன் கூடிய பல மலைத் தொடர்களாக இருக்கின்றன. நமது மாகாணத்தில் இருக்கும் மலைகளில் இவைகள்தாம் மிகவும் உயர்ந்தவை. இவைகளின் சராசரி உயரம் 4000 முதல் 5000 அடி வரையில் ஆகும். இமயமலைக்கு ஒப்பிடுங்கால் சிறு மலைகளாகத் தோன்றியபோதிலும், அவைகள் குறுக்கே வரும் மேகங்களைத் தடுத்து அவைகளினால் மழை உண்டாகும்படி செய்வதற்குப் போதுமான அளவு உயரமுள்ளவைகளாயிருக்கின்றன. இம்மலைகள்தாம் முக்கியமாகத் தென்னிந்தியாவில் மழை ஜலத்தைப் பிரித்து, நதிகள் உற்பத்தியாவதற்கு ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பிரிப்பாகும் (Water shed). அவைகளின் குறுக்கே ஒரு நதியும் ஓடவில்லை. அவைகளிலிருந்து மேற்புறமாகச் செல்லும் நதிகள் மிகச் சிறியனவும், மிக வேகமாக ஓடி அரபிக்கடலில் சேர்கின்றனவுமாகும். கிழக்கு நோக்கிச் செல்லும் நதிகளெல்லாம் இவைகளிலிருந்தே உற்பத்தியாகின்றன.

மேற்குத்தொடர்ச்சி மலையில் **பாலக்காட்டுக்** கணவாய் என்ற இடைவெளியானது நீலகிரி மலைகளின் தெற்குப் பாகத்திலிருக்கிறது. அதன் அகலம் சுமார் இருபது மைல். இந்தக் கணவாயானது மேற்குச் சமுத்திரக்கரைக்கும், உள்நாட்டுக்கும், சுலபமாகச் சம்பந்தம் ஏற்படுவதற்குச் சௌகரிமாயிருக்கிறது. இதற்குத் தெற்கே மேற்குத்தொடர்ச்சி மலையானது பல கிளைகளாகப் பிரிகின்றது. அதன் முக்கியமான கிளைக்கு **ஆனைமலை** என்று பெயர். அதில் **ஆனைமுடி** என்ற உயர்ந்த சிகரம் இருக்கிறது. அது சுமார் 9000 அடி உயரமுள்ளது. இது தென்னிந்தியாவின் மலை உச்சிகளுக்குள் மிக உயர்ந்ததாகும். இம்மலைப்பாகத்திலிருந்து **பழனிமலை** என்னும் ஒரு மலைத்தொடர் கிழக்கே செல்கின்றது. மேற்கு மலைத் தொடரின் தென்பாகங்களுக்கு **ஏலக்காய் மலைகள்** என்று பெயர் வழங்குகிறது.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.

இவை இருக்குமிடத்தைப் படத்தில் கவனித்துப் பார்ப்போம். இவைகள் தொடர்ச்சியான மலைகள் அல்ல. அனேக இடங்களில் பிளவுபட்டிருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளைப்போல் சமுத்திரக் கரையோரமாகச் செல்லாமல் உட்புறம் தள்ளியிருக்கின்றன. இவைகளிலிருந்து ஆறுகளொன்றும் உற்பத்தியாகவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் காட்டிலும் உயரத்தில் குறைவாக இருப்பதால் இவைகளின்மேல் ஏறுவது மிகச் சுலபம். இவைகளைத் தட்சிண பீடபூமியின் தொடர்ச்சி யென்றே சொல்லலாம். தென் பாகத்தில் இம்மலைகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளோடு சேர்கின்றதைக் கவனிக்கலாம். அவ்விடத்திற்கு **நீலகிரி** யென்று பெயர். இதில் **தோட்டபெட்டா** என்பது உயர்ந்த சிகரமாகும். அது சமுத்திர மட்டத்துக்கு மேல் சுமார் 8000 அடி உயரமுள்ளது. இதிலேறி நாலாபக்கமும் சுற்றிப்பார்த்தால் அனேக செங்குத்தான குன்றுகளும், மலைத் தாழ்வரைகளும், பள்ளத்தாக்குகளும் கண்ணுக்குப் புலப்படுகின்றன. சேலம் ஜில்லாவில் இருக்கும்

சேர்வராயன் மலையானது கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து குறுக்கே பிரியும் சிறு கிளையாகும்.

வடக்கே கஞ்சம் முதலான ஜில்லாக்களில் கிழக்குத்தொடர்ச்சி மலைக்கு **மலயமலை** என்று பெயர் வழங்கி வருகிறது. **மகேந்திரகிரி** என்பது இம்மலைகளிலுள்ள உயர்ந்த சிகரமாகும். கிருஷ்ண ஜில்லாவின் தென் பாகத்தில் இவைகளுக்கு **நல்லமலை** அதாவது **கருமலை** என்று பெயர். இவைகளில், சென்ன பட்டணத்திற்கு வடக்கேயுள்ள ஒரு பிரிவிற்கு **நகரிமலை** என்று பெயர். மதுரை ஜில்லாவில் இருக்கும் பழனி மலையின் ஒரு பாகத்தில் **கோடைக்கானல்** என்னும் ஒரு குன்று இருக்கிறது. கோடைக் காலங்களில் அவ்விடத்திற்குப் பலர் தேக சௌக்கியத்திற்காகச் செல்கின்றனர்.



கொடைக்கானல் மலை

மேற்கூறிய மலைகளே முக்கியமானவையாகும். அவைகளைத் தவிர அனேக சிறு குன்றுகள் பல்வேறிடங்களில் இருப்பதைப் பார்க்கலாம்.

பயிற்சி.

(1) (A) தென்னிந்தியாவின் படம் வரைந்து அதிலுள்ள முக்கியமான மலைகளையும், சிகரங்களையும் குறிக்கவும். (B) மலைச் சிகரம் என்றாலென்ன?

(2) பாலக்காட்டுக் கணவாய் என்பது எங்கே இருக்கிறது?

(3) கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் எவ்விடத்தில் பெரிய பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன?

(4) கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் ஏன் நதிகள் உற்பத்தியாகவில்லை?

(5) மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பெரிய மலைச் சிகரம் ஒன்று கூறுக.

(6) கிழக்குத் தொடர்ச்சிமலையிலுள்ள பெரிய மலைச் சிகரமொன்றைக் கூறி அது எங்கே அமைந்திருக்கின்றது என்று விளக்கவும்.

(7) நீர்ப்பிரிப்பு என்றாலென்ன?

அத்தியாயம் 5.

நதிகள்.

நமது இராஜதானியின் மலைப் படத்தை நன்றாகப் படித்த பிறகு நதிகளின் விஷயங்களை அறிந்து கொள்ளுவது சுலப மாகிவிடுகின்றது. நமது தேசத்தின் பூகோள விவரங்களை நன்றாக அறிந்து கொள்ளுவதற்கு அவைகளில் உள்ள நதிகளின் அமைப்பையும், அவைகளால் உண்டாகும் பிரயோஜனங்களையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது ஒரு முக்கிய விஷயமாகும். தென்னிந்தியாவில் மலைகளின் அமைப்பினால் அவ்விடத்திலிருக்கும் பெரிய நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாக ஓடிச் சமுத்திரத்தில் கலப்பது கண்கூடாகும். கிழக்கு மலைத் தொடரில் அனேக பிளவுகள் இருப்பதால் இந்த நதிகள் கிழக்குமுகமாக ஓடுவதற்கு மிக்க வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் மேல் பாகத்திலுள்ள நதிகள் சிறியவையாயும், மிக்க வேகமுடையவையாயும் இருக்கின்றன. தென்னிந்தி


சென்னை மாகாணம்
நதிகள்.
கோதாவரி
இந்திராவதி
கிருஷ்ணா
துங்கபத்திரா
வட பெண்ணை
பாலாறு
தென் பெண்ணை
வெள்ளாறு
காவேரி
பவானி
அமராவதி
பெரியாறு
வைகை
தாமிரபரணி
வங்காளக்
குடாக்கடல்
அரபிக்
கடல்
இந்து மகா சமுத்திரம்
சென்னை மாகாணம்.
சுதேச ராஜ்யங்கள்.

யாவில் நதிகள் ஓடும் இடங்களெல்லாம் மிகச்செழிப்புற்ற பள்ளத்தாக்குகளாக இருக்கின்றன. அவ்விடங்களில்தான் நேர்த்தியான பட்டணங்களும், கைத்தொழிற் சாலைகளும் அமைந்திருக்கின்றன.

வங்காளக் குடாக் கடலில் விழும் ஆறுகள்.

இவைகளில் முக்கியமான நதி **கோதாவரி.** இதற்கு வடக்கே சில சிற்றாறுகளிருக்கின்றன. கோதாவரி நதியானது மேற்குப் பீடபூமிக்கு வெகு தூரத்திற் கப்பால் உற்பத்தியாகிறது. பம்பாய் ராஜதானியில் **நாஸிக்** என்னுமிடத்தில் உற்பத்தியாகி நிஜாம் ராஜ்யத்தின் வழியாகப் பாய்ந்து கிழக்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள ஒரு இடைவெளியின் வாயிலாகச் சென்று வங்காளக்குடாக் கடலில் விழுகிறது. இதன் நீளம் சுமார் 900 மைல். இது உற்பத்தியாகுமிடத்துக்கும், மேற்குச் சமுத்திரக் கரைக்கும், ஐம்பது மைல்தானிருக்கிறது. இதற்கு அனேக உபநதிகளுண்டு. உபநதிகளினால் கோதாவரியானது வர வர அகன்று சமுத்திரத்தில் சேருவதற்கு முன் **தவளேச்வரம்** என்னுமிடத்தில் இருகிளையாகப் பிரிகிறது. அவ்விடத்தில் இதற்கு ஒரு அணைக்கட்டு உண்டு. இவ்விரண்டு கிளைகளின் மத்ய பாகத்திலிருக்கும் முக்கோண வடிவமான பூபாகத்துக்கு **டெல்டா** என்று பெயர். அது மிகவும் செழிப்பானது. இவ்விரண்டு கிளைகளுக்கும் **கௌதம கோதாவரி, வசிஷ்ட கோதாவரி** என்றும் பெயர் வழங்குகிறது. தவளேச்வரத்திலிருந்து அனேக பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டு அவைகளின் வழியாகப் பலவிடங்களுக்கு ஜலம் பாய்ச்சப்படுகின்றது. இதற்கு மத்தியிலுள்ள பூபாகங்களுக்கு **இலங்கைகள்** என்று பெயர். இதன் கரையிலிருக்கும் முக்கியமான பட்டணங்கள், **இராஜமகேந்திரம், பத்ராசலம்** முதலியவைகளாகும்.

கிருஷ்ணா:—இது சுமார் 800 மைல் நீளமுள்ள ஒரு பெரிய ஆறு. இதுவும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி நிஜாம் இராஜ்யத்தின் வழியாக ஓடுகின்றது. இத்துடன் துங்கபத்திரை என்கிற உபநதியானது கர்நூலுக்கப்பால் கிழக்கில் சேருகிறது. துங்கபத்திரை, கிருஷ்ணா, இவ்விரு நதிகளும், நிஜாம் ராஜ்யத்துக்கும், சென்னை ராஜதானிக்கும் இடையிலுள்ள ஒரு முக்கியமான எல்லையாகும். இதுவும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு இடைவெளி வழியாகக் கிழக்கே சென்று, கோதாவரியைப்போல் இரண்டு பெருங்கிளைகளாகப் பிரிந்து கடலில் சேர்கிறது. துங்கபத்திரா நதியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் துங்கை, பத்திரை என்னுமிரண்டு நதி



பெஜவாடா கால்வாய்

களின் சேர்க்கையாகும் என்பதைப் படத்தில் காணலாம். இதன் கரையில் **பெஜவாடா** என்னும் முக்கியபட்டணம் அமைந்திருக்கிறது. இவ்விடத்தில் பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டு அவைகளின் வழியாக அனேக இடங்களுக்கு ஜலம் பாய்ச்சப்படுகிறது.

பெண்ணாறு அல்லது வடபெண்ணை.

இது சுமார் 350 மைல் நீளமுள்ளது. இது மைசூர் இராஜ்யத்தில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாகச் சென்று கடப்பை, அனந்தப்பூர், ஜில்லாக்க

ளின் வழியாக நெல்லூர் ஜில்லாவில் பிரவேசித்து சமுத்திரத்தை அடைகிறது. இது மலைப்பிரதேசத்தின் வழியாகச் செல்வதால் அநேக சமயங்களில் வெள்ளமேற்பட்டுப் பல இடங்கள் சேதமாகின்றன. இதுவும் இறுதியில் கால்வாய்களின் வழியாக ஜலம் பாய்ச்சப்பட்டுச் சாகுபடிக்கு உதவுகிறது.

பாலாறு:—இது மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகி வேலூர், வட ஆற்காடு, செங்கற்பட்டு வழியாகச் சென்று சமுத்திரத்தில் சேருகிறது.

தென்பெண்ணை:—இது மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகிச் சேலம், தென்னாற்காடு ஜில்லாக்களின் வழியாகச்சென்று கூடலூருக்கருகில் கடலில் கலக்கிறது.

வெள்ளாறு:—இது தென்பெண்ணையிலும் சிறிது. இது பரங்கிப்பேட்டைக்குச் சமீபத்தில் கடலில்சேருகிறது. இந்நதிகளெல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியானபோதிலும் வெவ்வேறு முகமாகச் சென்று கடலில் கலக்கின்றன. இவைகள் கோடையில் வறண்டிருக்கும்.



சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி

காவேரி:—இது மைசூர் சமஸ்தானத்துக்கு மேற்கேயுள்ள குடகு நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இது மைசூர் பீடபூமி வழியாய்த் தென்கிழக்காக ஓடிச் **சிவசமுத்திரம்** என்னுமிடத்தில் சுமார் 1000 அடி உயரமான நீர்வீழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. மைசூர் சமஸ்தானத்தில் **கண்ணம்பாடி** என்னுமிடத்தில் இதற்கு ஒரு பெரிய அணை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் இந்நதியின் ஜலமானது ஒரு ஏரியில் தேக்கப்பட்டு மைசூர் நாட்டிலுள்ள பல பிரதேசங்களுக்கு ஜலம் பாய்ச்சப்படுகிறது. சிவசமுத்திரத்திலிருந்து மைசூர் நாட்டைவிட்டு நமது ராஜதானியில் தெற்குமுகமாகப் பிரவேசிக்கிறது. அப்பொழுது நீலகிரி மலையிலிருந்து இரண்டு உபநதிகள் இதில் விழுகின்றன. பிறகு சேலம் ஜில்லாவில் புகும்போது **மேட்டூர்** என்னுமிடத்தில் இதற்கு ஒரு பெரிய அணைக்கட்டு அமைக்கப் பட்டிருக்கிறது. இதனால் அங்கு ஒரு ஏரியில் ஜலம் தேக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு ஜலதட்டில்லாமல் காலாகாலத்தில் ஜலவசதி செய்யப்படுகிறது. இத்தேக்கத்தின் பயனால் **மேட்டூர்க் கால்வாய்** என்று ஒரு புதிய கால்வாய் திருச்சிராப்பள்ளிக்கருகில் வெட்டப்பட்டுத் தஞ்சை ஜில்லாவின் தென்பாகங்களுக்குஜலமளிக்க உதவுகிறது. காவேரி நதியின் நீளம் சுமார் 475 மைலாகும்.

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே இந்நதியானது இரண்டாகப் பிரிந்து கிழக்கே கொஞ்ச தூரத்திற் கப்பால் சேர்கின்றது. இதற்கு மத்தியில் உள்ள பிரதேசத்திற்கு **ஸ்ரீரங்கத்தீவு** என்று பெயர். மேட்டூர் அணையைத் தவிர இதற்கு வேறு மூன்று அணைகளும் உண்டு. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே பதினைந்து மைலுக்கப்பால் கட்டப்பட்டிருக்கும் அணைக்கு **மேலணை** என்று பெயர். அவ்விடத்தில் இந்நதியின்

பெருங்கிளையான **கொள்ளிடம்** என்பது இதிலிருந்து பிரிகின்றது. ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே காவேரி கொள்ளிடங்களில் கட்டப்பட்டிருக்கும் அணைக்குக் **கல்லணை** என்று பெயர். இந்நதி தஞ்சாவூர் ஜில்லா வழியாகக் கிழக்கே சென்று காவிரிப் பட்டினமென்னும் இடத்தில் சமுத்திரத்தில் கலக்கிறது. கும்பகோணத்துக்குக் கிழக்கே **அணைக்கரை** என்னுமிடத்தில் கொள்ளிடம், காவேரி இவ்விரண்டிலும் மற்றொரு அணை கட்டப்பட்டிருக்கிறது. இதற்குக் **கீழணை** என்று பெயர். இந்நதியின் ஜலமானது முக்கியமாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. இது பல கிளைகளாகப் பிரிக்கப்பட்டு வருவதால் சமுத்திரத்தில் சேரும் பொழுது ஒரு சிறு வாய்க்கால்போல் ஆகிவிடுகிறது. **பவானி, நொய்யல், அமராவதி** என்பன இதன் முக்கியமான உப நதிகளாகும். இதன் கரையில் **ஈரோடு, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீ ரங்கம்** முதலிய பட்டணங்கள் இருக்கின்றன.

வைகை:-மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவில் ஏலக்காய் மலையின் சமீபத்தில் இந்நதி உற்பத்தியாகிறது. பழனி மலையில் உற்பத்தியாகும் அநேக சிறு நதிகள் இதில் கலக்கின்றன. கோடைக் காலத்தில்கூட இதில் ஜலம் ஓடும்படியாகச் செய்திருக்கின்றார்கள். இவ்வசதி பெரியாறு பிராஜெக்ட் என்னும் ஏற்பாட்டினால் உண்டாயிருக்கிறது. இது மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் வழியாகப் பாய்ந்து பாக்ஸ்ஜல சந்தியில் போய்க் கலக்கிறது. இதன் கரையில் **மதுரை** என்னும் பட்டணமிருக்கிறது.

தாமிரபரணி:—இது சுமார் 80 மைல் நீளமுள்ளது. இந்நதியானது மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்கோடியில் **அகஸ்திய மலை** என்னுமிடத்தில் உற்பத்தியாகிக் கிழக்குமுகமாக ஓடித்திருநெல்வேலி ஜில்லாவின் வழியாகக் கிழக்குச் சமுத்திரத்தில் சேர்கிறது. இதனுடைய உபநதி ஒன்று குற்றால மென்னுமிடத்தில் சுமார் 200 அடி உயரத்திலிருந்து விழுந்து இதனுடன் கலக்கிறது. இந்நதி **பாபநாசம்** என்னுமிடத்தில் அகன்ற நீர்வீழ்ச்சியாக வீழ்கின்றது. இவ்விடத்தில் பருத்தி யந்திரசாலை ஒன்றுண்டு. இது சிறு ஆறாய் இருந்தபோதிலும்திருநெல்வேலி ஜில்லாவின் பெரும்பாலான இடத்திற்கு ஜலவசதி அளிப்பதால் சாகுபடிக்கு மிகவும் உபயோகப்படுகிறது. இதன் கரையில் **அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீ வைகுண்டம்** முதலான பட்டணங்களிருக்கின்றன.

நீலகிரி மலையிலிருந்து **பைக்காரா** (Pykara) என்னுமிடத்தில் சில நீர்வீழ்ச்சிகளிருக்கின்றன. இந் நீர்வீழ்ச்சிகளின் சக்தியை உபயோகித்து மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். இது தென்னாட்டில் அனேக ஜில்லாக்களுக்குக் கம்பிகளின் வழியாக அனுப்பப்பட்டு ஏராளமாக உபயோகப்படுகிறது.

மேற்கூறிய தென்னிந்தியாவிலுள்ள நதிகள் கோடைக்காலத்தில் வறண்டுபோய் விடுவதனாலும், ஆழமற்றவைகளாயிருப்பதாலும், கப்பல் போக்குவரத்துக்குச் சாதகமாவதில்லை. இந்நதிகளின் கரையோரங்களில் அநேக இடங்களில் புண்ணிய ஸ்தலங்கள் அமைந்திருக்கின்றன.

அரபிக்கடலில் விழும் ஆறுகள்.

கோடைக் காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரும் மழைகள் பெய்கின்றன என்று முன்னமே கூறியிருக்கிறோம். இம்மலையில் உண்டாகும் பெரும் நதிகளெல்லாம் பெரும்பாலும் கிழக்கு நோக்கிச் செல்லுகின்றன. மேற்குச் சமுத்திரக்கரை யோரத்திலிருக்கும் பூப்பிரதேசம் மிகக் குறுகியிருப்பதால் அவைகளின் வழியாகச் செல்லும் நதிகள் மிகச் சிறியவைகளே.

மாரிக்காலங்களில் இந்நதிகள் மலைக ளில் உற்பத்தியாகும் மரக்கட்டைகளைச் சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்ப் பதற்கு உபயோகப்படுகின்றன. சம வெளிப் பிரதேசங்களிலும், சமுத்திரக் கரை யோரங்களிலும், இந்நதிகளின் வழியாக அனேக சிறுபடகுகள் செல்லு கின்றன. அச் சிறு நதிகளுக்குள் முக்கியமானவை, பெரியாறு, பொன் னானி, பேய்ப்பூர் ஆறு இவைகளே. **பெரி யாறு** என்பது திருவாங்கூர் ராஜ்யத்தில் பாய்கிறது. மற்ற இரு நதிகளில் **பொன் னானி** பாலக்காட்டுக் கணவாய் வழியாக ஓடுகிறது. **பேய்ப்பூர்** ஆறு கள்ளிக்கோட் டைக்குச் சமீபத்தில் ஓடுகிறது.

பயிற்சி.

(1) நமது இராஜதானியில் ஓடும் ஆறுகள் எங்கே உற்பத்தி ஆகின்றன?

(2) அவைகள் ஏன் பெரும்பாலும் கிழக்கு நோக்கிச் செல்லுகின்றன?

(3) வங்காளக்குடாக் கடலில் சேரும் நதி களுள் முக்கியமான நான்கினைக் கூறுக.

(4) கோதாவரி நதி எங்கே உற்பத்தியா கிறது?

(5) அதன் முகத்துவாரம் எப்படி இருக் கிறது?

(6) அதற்கு எவ்விடத்தில் அணைக்கட்டு ஏற்பட்டிருக்கிறது?

(7) கிருஷ்ணா நதியுடன் எந்த முக்கியமான நதி கலக்கிறது?

(8) இவ்விரு நதிகளும் எதற்கு எல்லையா கின்றன?

(9) இதன் முகத்துவாரத்திலுள்ள முக்கிய மான நகரம் எது?

(10) காவேரி நதி எங்கே உற்பத்தியாகிறது?

(11) அதில் ஏற்பட்டிருக்கும் அணைக் கட்டு கள் யாவை?

(12) மேட்டூர்த் தேக்கத்தால் என்ன உப யோகம்?

(13) பெரியாற்றுத் தேக்கம் என்றாலென்ன?

(14) அந்த ஏற்பாட்டினால் எந்நதி பயனடை கிறது?

(15) A. தாமிரபரணி நதி எங்கே இருக் கிறது? B. நீர்வீழ்ச்சி என்றாலென்ன?

(16) அதற்கு எவ்விடத்தில் பெரிய நீர் வீழ்ச்சியுண்டு?

(17) மேற்குக் கடற்கரையோரங்களிலுள்ள நதிகள் ஏன் பெரிதாக இல்லை? அவை களில் முக்கியமான நதிகள் எவை?

(18) உப நதிகள், கிளை நதிகள், டெல்டா, இவைகளை விளக்குக.

அத்தியாயம் 6.

சீதோஷ்ணம்.

பூகோளப் படிப்புக்கு அவ்வப்பிர தேசங்களின் சீதோஷ்ண நிலையை அறிவது இன்றி யமையாததாகும். ஏனெனில் ஒரு தேசத்தின் இயற்கை யமைப்பு, மலைகள், சமவெளிகள், பாலை வனங்கள், காடுகள், சமுத்திரம், முத லியவைகளை அறிந்து கொள்ளுவதனால்



மட்டும் அத்தேசத்தின் பூகோள அறிவு பூர்த்தியாகாது. பூமியிலுள்ள பாகங் கள் பல்வேறு சீதோஷ்ண நிலைமையை

அடைந்திருக்கின்றன என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். பூமியின் மத்திய பிரதேசங்கள் உஷ்ணமாகவும், அவ்விடங்களிலிருந்து தெற்கேயோ, வடக்கேயோ, நேராகச் சென்றால் போகப் போக உஷ்ணம் குறைவாகவும், வரவரக் குளிர்ச்சி அதிகரித்துக் கொண்டும், கடைசியாக வட கோடியிலும், தென் கோடியிலும் அதிசீதளமாகவும் இருப்பதை யறியலாம். அதுவுமன்றி ஒரு வருஷத்தில் சில காலங்களில் உஷ்ணம் அதிகமாகவும், மற்ற காலங்களில் குறைவாகவும் இருக்கிறது. ஆகையால் ஒரு தேசத்தின் ஸ்தானமானது உருண்டை வடிவமான பூமியின்மேல் எந்தப் பாகத்தில் அமைந்திருக்கிறது என்பதை நன்ருகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகிறது.

நமது இராஜதானியின் படத்தைக் கவனித்துப்பார்ப்போம். இது பூமியின் மத்திய பாகமாகிய பூமத்திய ரேகைக்குச் சுமார் இருபது டிகிரிவரையிலும் செல்லுகிறது. ஆகையால் அது பூமியின் வட உஷ்ண பாகத்தில் அமைந்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதனுல் நமது இராஜதானியானது பெரும்பாலும் உஷ்ணமாகவே இருக்கிறது.

பகற்காலத்தில் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தால் சூரியனுடைய நிலை நமக்குத் தெரியும். சூரியன் மாரிக் காலங்களில் ஆகாயத்தில் சற்றுத் தெற்கேயும், கோடைக் காலங்களில் பெரும்பாலும் தலைக்கு நேராகவும் செல்லுகிறது. மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சூரியன் தலைக்கு நேராக இருப்பதால் அம் மாதங்கள் மிகுந்த உஷ்ணமாக இருக்கின்றன. இக்காலங்கள் தாம் கோடைக்காலமாகும். பிறகு செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் சூரியன் வரவரத் தெற்கே செல்லுவதனுல் அம்மாதங்கள் உஷ்ணக்குறைவாக இருக்கின்றன. அவ்வாறிருந்தபோதிலும் எந்தக்காலத்திலும் அதிகக் குளிர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமில்லாமலே இருக்கிறது. பொதுவாக நமது இராஜதானி மிக்க உஷ்ணத்திற்கு இருப்பிடமானபோதிலும் ஒன்றிரண்டு காரணங்களினுல் பலவிடங்களில் சூரிய வெப்பம் தணிவடைகிறது. சமவெளிகளிலிருந்து மிகவும் உயர்ந்த மலைகளின் மேலேறிப் பார்த்தால் மேலே செல்லச் செல்ல வெப்பம் தணிவடைவதைப் பிரத்தியட்சமாகக் காணலாம். ஆகையால் மிகவும் உயர்ந்த மலைப்பிரதேசங்களில் எப்பொழுதும் உஷ்ணம் மிகக் குறைவாக இருக்கிறது. அவ்விடங்களில் முக்கியமானவைகள் **கோடைக்கானல் மலையும், நீலகிரி மலைகளுமே.** ஆகையால் நல்ல கோடைக்காலத்தில் சமவெளிப் பிரதேசங்களில் வசிப்பதனுல் ஏற்படும் வெப்பத்தைத் தாங்கமுடியாத பலர் இம் மலைப் பிரதேசங்களுக்குச் செல்லுகிருர்கள். இவ்விடங்களில் இராக்காலங்களில் மிகுந்த குளிர் ஏற்படுவதால் வீடுகளில் எப்பொழுதும் தீச்சட்டிகள் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்விடங்களில் சில சமயங்களில் ஜலமானது திடீரென்று உறைந்து விடுவதுமுண்டு. ஆகையினுல் ஒரு தேசத்தின் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு மலைப் பிரதேசங்கள் மிகவும் உபயோகமுள்ளவைகளாக இருக்கின்றன.

ஒரு தேசத்தின் சீதோஷ்ணமானது மற்றொரு காரணத்தாலும் பாதிக்கப்படுகிறது. சூரியன் நன்ருகப் பிரகாசிக்கும்பொழுது அதன் உஷ்ணத்தைப் பூபாகங்கள் சீக்கிரமாகக் கிரகிக்கின்றன. அவ்வாறே சூரியன் இல்லாத இராக்காலங்களில் கிரகித்த உஷ்ணத்தைச் சீக்கிரமாக வெளியே விடுகின்றன. ஜலம் நிறைந்த கடற்பாகமோ அவ்வாறில்லை. உஷ்ணத்தை மிகவும் மெதுவாகக் கிரகிக்கின்றது. பிறகு

அவ்வாறே மெதுவாக வெளிவிடுகின்றது. ஆகையால் சமுத்திரக் கரையோரத்திலுள்ள பூபாகங்கள் சமுத்திரத்தின் சீதோஷ்ணத்தினால் பாதிக்கப்படுகின்றன. உஷ்ணமான பகற்காலங்க



நிலக்காற்று

ளில் பூபாகங்களின் மேலிருக்கும் வாயு மண்டலமானது சீக்கிரத்தில் உஷ்ணப்படுத்தப்பட்டு மெலிவடைகின்றது. அக்காலங்களில் சமுத்திரப் பாகங்களின் மேல் இருக்கும் உஷ்ணக் குறைவான வாயு மண்டலத்திலிருந்து காற்றானது



கடல் காற்று

பூமியை நோக்கி அடிக்கிறது. அது வரும்பொழுது சமுத்திரத்தின் சீதளத்தைத் தாங்கிவருவதால் அது வீசும் பூபாகங்களின் உஷ்ணமானது தணிவடைகின்றது. அவ்வாறே குளிர் காலங்களின் இராக்காலங்களில் பூமி அதிகக் குளிர்ச்சியடையும் பொழுது சமுத்திரத்தி லிருந்து உஷ்ணமான காற்று பூமியின்மேல் வீசிக் குளிரைத் தணிக்கிறது. ஆகையால் உஷ்ண மண்டலத்தில் ஒரு தேசம் அமைந்திருந்த போதிலும் சமுத்திரத்தின் அருகாமையினால் பூமியினுடைய சீதோஷ்ணமானது மாறுபாடடைகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம். நமது இராஜதானியிலிருக்கும் பெரும்பாலான பிரதேசங்கள் சமுத்திரக்கரையில் அமைந்திருப்பதனால் இதே உஷ்ண மண்டலத்திலிருக்கும் மற்ற பிரதேசங்களைக் காட்டிலும் கொஞ்சம் குளிர்ச்சியாயிருக்கிறது.

உட்புறத்திலிருக்கும் பிரதேசங்களுள் தட்சிணபீடபூமிக்குத் தென்பாகத்திலுள்ள நமது இராஜதானியின் பிரதேசங்கள் எக்காலத்திலுமே வெப்பமாயிருக்கின்றன. ஏனென்றால் இவ்விடங்களில் உயர்ந்த மலைகளில்லை. சமுத்திரமும் வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கிறது.

ஒரு இடத்தின் சீதோஷ்ணத்தைக் கணக்கிட ஒரு கருவி கண்டுபிடித்திருக்கிறார்கள். அக்கருவிக்கு **உஷ்ணமானி** என்று பெயர். அதன் படத்தைக்கவனித்துப் பார்த்தால் அது அடிப்புறத்தில் உருண்டையாயும், அதிலிருந்து மேற்புறம் குழாயாகச் செல்லுவதையும் கவனிக்கலாம். இது கண்ணாடியினால் செய்யப்பட்டது. உள்ளே கூடாக இருக்கிறது. அது ஒரு சிறு பலகையில் அடித்து வைக்கப்பட்டு, இருபக்கங்களிலும் அளவெண்கள் (டிகிரிகள்) குறிக்கப்பட்டிருக்கின்றன. உருண்டை வடிவமான அதன் அடிப்புறத்தில் பாதரசம் தங்கியிருக்கிறது. இதைச்சுவரில்மாட்டி வைத்தால் ஆகாயத்தின் சீதோஷ்ண நிலைமையின் மாறுபாட்டை இது அவ்வப்போது குறித்துக் காட்டும். உஷ்ணம் அதிகமானால் அக்குழாயிலிருக்கும் பாதரசமானது உயரக் கிளம்பும். உஷ்



உஷ்ணமானி

ணம் குறையும் காலத்தில் அதன் அளவு கீழே இறங்கும். இக் கருவியினுல் நமது இராஜதானியின் பலவிடங்களிலுமுள்ள சீதோஷ்ண மாறுபாட்டை அவ்வக்காலங்களில் அறியலாம்.

அடியிற் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையைக் கவனித்துப் பாருங்கள். அதில் 1937-ம் வருஷம் டிசம்பர்மீ 11உயிலும், 1938-ம் வருஷம் ஜூன்மீ 11-தேதியிலும் ஏற்பட்ட பலவிடங்களிலுள்ள உஷ்ணமானியின் எண்ணிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன.

		11—12—37		11—6—38	
		அதிகம்	குறைவு	அதிகம்	குறைவு
1	பல்லாரி	82	70	88	77
2	கள்ளிக்கோட்டை	88	71	79	72
3	காக்கினடா	81	72	90	75
4	கோயம்புத்தூர்	82	69	83	71
5	கோடைக்கானல்	65	45	61	53
6	மதராஸ்	81	72	93	81
7	மதுரை	90	72	95	80
8	சேலம்	88	71	91	75
9	கூனூர்	62	47	70	60
10	திருவனந்தபுரம்	87	73	83	76
11	விசாகப்பட்டணம்	81	72	89	85
12	நாகப்பட்டணம்	83	75	96	81
13	மங்களூர்	85	73	81	74

இவ்வட்டவணையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவதென்னவென்ருல், தென்னிந்தியா பெரும்பாலும் உஷ்ணமான பிரதேசம் என்பதே. கோடைக் காலத்திற்கும், மாரிக் காலத்திற்கும் வெப்பத்தில் அதிக வித்தியாசமில்லே. உயர்ந்த மலைநாடுகளில் பிறவிடங்களைக் காட்டிலும், கோடைக் காலத்தில் உஷ்ணம் மிகக்குறைவாகவே இருக்கின்றது. சமுத்திரக் கரையோரங்களிலுள்ள பிரதேசங்களில் மாரிக்காலத்தைக் காட்டிலும் கோடைக்காலத்தில் உஷ்ணம் அதிகமாயிருந்தபோதிலும், மாரிக் காலத்தில் மிகக் குறையாமலே இருக்கிறது. இதற்குக் காரணம் சமுத்திரத்தின் அருகாமையேயாம்.

பயிற்சி.

(1) நமது இராஜதானி உலகத்தின் சீதோஷ்ண மண்டலங்களுள் எம்மண்டலத்தில் அமைந்திருக்கிறது?

(2) அதனால் அதனுடைய பெரும்பாலான சீதோஷ்ண நிலை யாது?

(3) எல்லா விடங்களிலும் ஒரே விதமான சீதோஷ்ண நிலையாயிருக்கிறதா?

(4) எவ்விடங்களில் மாறுபாடடைகின்றன?

(5) மாறுபாட்டிற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் யாது?

(6) எக்காலங்களிலும் ஒரே சீதோஷ்ண நிலையாயிருக்கின்றதா?

(7) மாறுபாடடையும் காலங்கள் எவை?

(8) சீதோஷ்ண நிலையானது சூரியனது கதியினால் எப்படிப் பாதிக்கப்படுகின்றது?

(9) கடற்காற்று என்றாலென்ன?

(10) தரைக்காற்று என்றால் என்ன?

(11) அவைகளின் உபயோகம் யாது?

(12) கோடைக் காலத்தில் உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ள ஜனங்கள் எவ்விடங்களுக்குச் செல்லுகின்றனர்?

(13) அவ்விடங்களில் உஷ்ணம் குறைவாக இருப்பது ஏன்?

(14) உஷ்ணமானி என்றாலென்ன?

(15) இதன் உபயோகம் என்ன?

வதற்குக் காரணம் முன் அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம். சூரிய வெப்பத்தினால் ஓரிடத்திலுள்ள வாயு மண்டலமானது உஷ்ணப்படுத்தப்பட்டு அங்குள்ள காற்று மெலிந்து மேலே எழுகின்றது. அக்காலத்தில் பக்கத்திலிருக்கும் வாயுமண்டலத்திலுள்ள நெருங்கிய காற்றானது இவ்விடத்தை நோக்கி வீசுகிறது. இக்காற்று ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அடிக்கும் போது தன் வழியிலுள்ள மேகங்களை ஒரு பக்கமாகத் திரட்டிக்கொண்டு வருகிறது. அப்படி மேகங்கள் வரும்பொழுது நடுவில் உயர்ந்த மலைகளிருந்தால் அவைகளால் தடுக்கப்படுகின்றன. காற்றின் வேகத்தினால் மேகங்கள் மலைத் தாழ்வரைகளிலிருந்து உயரே கிளம்புகின்றன. அப்பொழுது உயரத்திலிருக்கும் குளிர் காற்றானது அவைகளின் மேல் அடிக்கவே, அவைகள் மழைத் துளிகளாக மாறிப் பூமியில் பொழிகின்றன. மேகங்கள் உண்டாவதற்கும் சூரியன்தான் காரணம்.

அத்தியாயம் 7.

பருவக்காற்றுகளும், மழையும்.

ஒரு தேசத்தில் பெய்யும் மழையின் அளவானது இரண்டு முக்கிய காரணங்களினால் பாதிக்கப்படுகிறது. மழையானது மேகங்களினால் உண்டாக்கப்படுகிறது என்பது யாவருக்கும் தெரிந்ததே. மேகங்கள் காற்றினால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகப்படுகின்றன. காற்று உண்டா

ஒவ்வொரு நாளும் சூரியன் தன் கிரணங்களின் வெம்மையினால் பூமியிலிருக்கும் ஆறுகள், ஏரிகள், கடல்கள் முதலியவற்றிலுள்ள தண்ணீரை ஆவியாக மாற்றுகிறது. அந்நீராவி வாயுவைக்காட்டிலும் இலேசானதால் ஆகாயத்தில் எழும்பி மேகமாக மாறுகிறது. நீராவியானது எப்பொழுதும் ஆகாயம் முழுவதும் பரவியிருக்கிறது. குளிர்ந்த காற்றுப்பட்டவுடன் இந்நீராவி பனியாகவோ, மழைத்துளியாகவோ மாறுகிறது.

தென்னிந்தியாவில் மேமீ முதல் ஆகஸ்டுமீ வரையில் கோடைக்காலமென்று முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அக்காலங்களில் சூரியனது வெப்பத்தினல் வாயு மெலிவடைந்தவுடன் தென் மேற்குச் சமுத்திரத்திலிருந்து காற்றானது வேகமாக இந்தியாவை நோக்கி அடிக்கிறது. அக்காலத்தில் சூரியன் வடக்கே கடகராசியில் (Tropic of Cancer) இருப்பதால் குளிர்ச்சியான தெற்குச் சமுத்திரத்திலிருந்து வடக்கு நோக்கிக் காற்று அடிப்பதற்கு ஏதுவாகிறது. இந்து மகா சமுத்திரம், அரபிக்கடல், முதலியவைகளிலிருந்து இந்தியாவை நோக்கிக் காற்று அடிக்கும் போது அது நீருண்ட மேகங்களைத் திரட்டிக்கொண்டு நமது தேசத்தில் பிரவேசிக்கிறது. அப்பொழுது உயர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையினல் தடுக்கப்பட்டு அங்கே ஏராளமான மழையைப் பொழிகிறது.

சில மேகங்கள் மலைத் தொடர்ச்சியின் தாழ்வான சில பாகங்களின் வழியாகப் புகுந்து கிழக்குச் சமுத்திரக் கரையை நோக்கி வந்து வட சர்க்கார்ப் பிரதேசங்களில் மழையை உண்டு பண்ணுகிறது. ஆனல் பெரும்பாலும் மேற்குச் சமுத்திரக் கரையில்தான் அதிகமாக மழை பெய்கிறது. அதனல் கோதாவரி நதிக்கரை முதல் தாமிரபரணி வரையில் எல்லா ஆறுகளிலும் வெள்ளம் பெருகுகிறது. இதனல் ஜூன் மாதக் கடைசியிலிருந்து செப்டம்பர் மாதம்வரையில் இந்த ஆறுகளில் மிகுந்த ஜலம் ஓடுகிறது.

சூரியனுடைய கதியானது செப்டம்பர் மாதக் கடைசியில் பூமத்தியரேகையைத் தாண்டித் தெற்கே செல்லுகிறது. அக்காலங்களில் தெற்குச் சமுத்திரப் பிரதேசங்கள் அதிக உஷ்ணமடைவதால் வடகிழக்கிலிருந்து காற்று தென்மேற்காக அடிக்கிறது. அக்காற்று வங்காளக் குடாக்கடலில் இருந்து கொண்டு வரும் மேகங்களால் இந்தியாவின் கிழக்குச் சமுத்திரக் கரையோரங்களில் நல்ல மழை பெய்கிறது. இம்மழையானது, அக்டோபர் மாதமுதல், டிசம்பர் மாதம் வரையில் பெய்கிறது. மேகங்கள்மலைகளால்தடுக்கப்பட்டபோதிலும், கிழக்குத் தொடர்ச்சி மலையில் அனேக இடங்களில் பெரும் வெளியிடங்கள் இருப்பதனல் அவ்வழியாக உள் நாட்டிற்கும், மேகங்கள் சென்று மழையை உண்டு பண்ணுகின்றன. ஆனல் இந்தியாவின் தென்மேற்குப் பாகத்திலுள்ள சமுத்திரக் கரையோரங்களில் பெய்யும் மழை போல் உள் நாடுகளில் அவ்வளவு அதிகமாகப் பெய்வதில்லை.

இம்மேகங்கள் மேற்குத்தொடர்ச்சி மலையினல் தடுக்கப்படுகின்றன. ஆகையால் மேற்குச் சமுத்திரக் கரையோரங்களில் இக்காலத்தில் மழை கிடையாது. ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் தென்னிந்தியாவில் மழை மிகவும் குறைவாகத்தானிருக்கிறது. நாலா பக்கங்களிலும் மலைகள் சூழ்ந்திருப்பதனல் கடப்பை, கர்நூல், முதலிய விடப்பட்ட நாடுகளில் (Ceded Districts) எக்காலத்திலும் மழை குறைவாகவே இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் இந்தியாப் படங்களைப் பாருங்கள். அவைகளிலிருந்து எவ்வெக் காலங்களில் எவ்வளவு மழை பெய்கிறதென்பதைத் தெளிவாகத்தெரிந்து கொள்ளலாம். ஒரு தேசத்தில்பெய்யும் மழையின் அளவைக் கண்டுபிடிக்க ஒரு கருவியிருக்கிறது. அதற்கு ஜலமானி என்று பெயர். அதைப்படத்தில் பாருங்கள்.



ஜலமானி



தென்மேற்குப் பருவக்காற்று



வடகிழக்குப் பருவக்காற்று

அடியிற் கொடுக்கப் பட்டிருக்கும் அட்டவணையைக் கவனியுங்கள். அதில் 1937ௐ ஜுன் மாதம் முதல் தேதி முதல் அக்டோபர் மாதம் பதினைந்தாம் தேதி வரையிலும், 1937ௐ நவம்பர்ீ முதல் தேதி முதல், டிசம்பர் மாதம் பதினோராம் தேதி வரையிலும், பலவிடங்களிலும் பெய்த மழையின் அளவுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

		1-6-37 முதல் 15-10-37		1-11-37 முதல் 11-12-37
1	பல்லாரி	9·2	அங்குலங்கள் ,,	0
2	கள்ளிக்கோட்டை	109·0	,,	4·5
3	காக்கினடா	32·5	,,	0·2
4	கோயம்புத்தூர்	6.7	,,	7·3
5	கொழும்பு	29·6	,,	17·8
6	கோடைக்கானல்	32·0	,,	10·6
7	மதராஸ்	19·9	,,	31·1
8	மதுரை	11·9	,,	7·5
9	சேலம்	16·7	,,	3·7
10	கூனூர்	14·7	,,	10·0
11	திருவனந்தபுரம்	32.9	,,	5·8
12	விசாகப்பட்டணம்	19·9	,,	0·
13	நாகப்பட்டணம்	9·4	,,	25·8
14	மங்களூர்	132·0	,,	0.5
15	மர்க்காரா	100·8	,,	1.8
16	கூடலூர்	16·7	,,	29·7

மேலே கொடுக்கப்பட் டிருக்கும் அட்டவணையைக் கவனித்துப் பார்த்துத் தென்மேற்குப் பருவக் காற்றும், வடகிழக்குப் பருவக்காற்றும் அடிக்கும் காலங்களில் எவ்வெவ்விடங்களில் அதிக மழை, எங்கு மிதமான மழை, எங்கெங்கே குறைந்த மழை, பெய்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சென்னை மாகாணம்
நீர்பாசனம்.
கோதாவரி
நிஜாம்ராஜ்யம்
கிருஷ்ணா
பெஜவாடா
பம்பாய்
இராஜதானி
பங்கனபள்ளி
சாண்டூர்
வடபெண்ணை
வங்காளக்
குடாக்கடல்
மைசூர்
தென்பெண்ணை
பாலாறு
காவேரி
மேட்டூர்
அணை
மேல் அணை
பெரிய கீழ் அணை
கோச்சி
பெரியாறு
புதுக்கோட்டை
வைகை
அரபிக்
கடல்
திருவாங்கூர்
அணைகட்டு கால்பாசனம்
குளப்பாசனம்
சுதேச இராஜ்யம்
இந்து மகா
சமுத்திரம்

வருஷத்தில் இரண்டு முக்கியமான காலங்களில் அதிக மழை பெய்வதாக அறிந்துகொண்டோம். ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம்வரையில் மேற்குத் தொடர்ச்சி மலைகளின்மேல் பெய்யும் மழையானது, இந்துமகாசமுத்திரத்திலிருந்தும், அரபிக் கடலிலிருந்தும் இந்தியாவை நோக்கி அடிக்கும் பருவக் காற்றினால் ஏற்படுகிறது. இக்காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து நமது தேசத்தை நோக்கி அடிப்பதால் இதற்குத் **தென்மேற்குப் பருவக்காற்று** என்று பெயர். அவ்வாறே அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலுள்ள மாதங்களில்கிழக்குச் சமுத்திரக் கரையோரமாய்ப் பெய்யும் மழையானது வங்காளக்குடாக் கடலிலிருந்து வருங் காற்றினாலேற்படுகிறது. இக்காற்று வடகிழக்குத் திசையிலிருந்து தென்னிந்தியாவை நோக்கி அடிப்பதால் இதற்கு **வடகிழக்குப் பருவக்காற்று** என்று பெயர். ஒரு வருஷத்தில் இரண்டு முக்கியமான பருவங்களில் இவ்விரண்டு காற்றுகளும் தவறாமல் அடிப்பதனால் இவைகளுக்குப் பருவக்காற்று என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

பயிற்சி.

(1) பருவக்காற்று என்றாலென்ன?

(2) அவைகளினால் விளையும் பயன்களென்ன?

(3) அக்காற்றுகளின் பெயரையும், பெயர்க் காரணங்களையும் கூறுக.

(4) விடப்பட்ட நாடுகளில் ஏன் எக்காலத்திலும் மழை குறைவாக இருக்கிறது?

(5) தென்மேற்குப் பருவக்காற்றினால் கிழக்குச் சமுத்திரக் கரையோரத்திலுள்ள எந்த ஜில்லாக்களில் மழை உண்டாகிறது?

(6) வடகிழக்குப் பருவக் காற்றினால் ஏன் மேற்குச் சமுத்திரக் கரையோரங்களில் மழை உண்டாவதில்லை?

(7) இந்தியாவின் படம் வரைந்து இரண்டு பருவங்களிலும் பெய்யும் மழையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

(8) தென்னிந்தியாவில் மழைக்காலங்கள் எவை?

(9) அக்காலங்களில் எங்கே மழை பெய்கிறது?

(10) ஜனவரிமீ முதல் மேமீ வரையில் ஏன் மழை அதிகம் பெய்வதில்லை?

அத்தியாயம் 8.

நீர்ப்பாசனம்.

பிள்ளைகளே! ஒரு தேசத்தில் விவசாயத்திற்கு ஜலம் அவசியம் என்பதைக் கூறவேண்டியதில்லை. அந்த ஜலமானது பல துறைகளிலிருந்து கிடைக்கலாம். ஆறுகளிலிருந்து சிறு கால்வாய்களை வெட்டி, அவைகளின் வாயிலாக வெள்ளக்காலங்களில் வயல்களுக்கு ஜலம் பாய்ச்சலாம். மழைக் காலங்களில் பெரும் பள்ளத்தாக்குகளில் தங்கும் நீர்நிலைகளிலிருந்து வாய்க்கால்களை வெட்டி அவைகளின் வழியாக ஜலம் பாய்ச்சலாம். இவ்விரண்டு துறைகளும் இல்லாத இடங்களில் வயல்களை உழுது செப்பனிட்டு, மழை ஆரம்பிக்கும் காலத்தில் விதை விதைத்து வைத்திருந்தால், ஆகாயத்திலிருந்து நே



ராகவிழும் நீர்த்துளிகளின் உதவியால், பயிர்கள் விருத்தியாகலாம். அல்லது பூமியைத் தோண்டிக் கிணறுகளிலிருந்

தும், துரவுகளிலிருந்தும் ஜலத்தை இறைத்து வயல்களுக்குப் பாய்ச்சலாம். அல்லாமலும் சில பயிர்கள் பனியினால் உண்டாகும் நீர்த்திவலைகளின் உதவியினால் விருத்தியாகலாம்.

நமது இராஜதானியில் முக்கியமாக ஆறுகளின் மூலமாகப் பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சில விடங்களில் ஏரிகளின் உதவியாலும், பயிர்த் தொழில் நடைபெறுகிறது. கிணறுகளிலிருந்தும் பல விடங்களில் ஜலம் இறைக்கப்படுகிறது.

(1) ஆற்றுப்பாசனம்.

கோதாவரி நதியானது நிஜாம் ராஜ்யத்தைக் கடந்து நமது இராஜதானியில் புகுந்த இடத்திலிருந்து சமுத்திரத்தில் சேரும்வரையில் நீர்ப்பாசனத்துக்கு முற்றிலும் உபயோகப் படுத்தப்படுகிறது. இதுதான் நமது இராஜதானியில் உள்ள நதிகளுக்குள் மிகவும் பெரியது. இதற்குத் **தவளேச்வரம்** என்னும் இடத்தில் ஒருபெரிய அணைக்கட்டு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்விடத்திலிருந்து அனேக கால்வாய்களின் வழியாக இந்நதியின் ஜலமானது கொண்டுவரப்பட்டுக் கோதாவரி ஜில்லாக்களில் சாகுபடிக்கு உபயோகப்படுத்தப் படுகிறது.

அவ்வாறே **கிருஷ்ணா**நதியிலும், பெஜவாடா என்னுமிடத்திற் கருகில் பெரிய அணைபோட்டிருக்கிறார்கள். அதன் வழியாகக் குண்டூர் முதலிய ஜில்லாக்களில் இந்நதியின் ஜலமானது பாசனத்துக்கு உபயோகப் படுத்தப்படுகிறது.

வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை என்னும் நதிகள், நெல்லூர், செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு முதலிய ஜில்லாக்களில் வாய்க்கால்களின் மூலமாக நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுகின்றன.

காவேரி நதியில் மைசூர் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் அணைக்கட்டைத் தவிர, சேலம் ஜில்லாவில் மேட்டூர் என்னுமிடத்தில் புதிதாக அணைக்கட்டு ஏற்படுத்தப்பட்டு ஜலத்தேக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பயனாகத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அமைக்கப்பட்டிருக்கும் கல்லணைக்குச் சமீபத்தில், காவேரியிலிருந்து, மேட்டூர்க் கால்வாய் என்று ஒரு கால்வாய் வெட்டப்பட்டுத் தஞ்சாவூர் ஜில்லாவின் தென்பாகங்களுக்கு அதன் மூலமாக நீர்பாய்ச்சப் படுகிறது. காவேரி ஜலமானது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் என்ற இரண்டு ஜில்லாக்களுக்கும் விவசாய விஷயத்தில் மிகவும் உபயோகமாகின்றது.



பெரியாற்று அணை

வைகை நதி மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் நீர்ப்பாசனத்துக்கு மிகவும் இன்றியமையாததா யிருக்கின்றது. ஏலக்காய் மலையிலிருந்து உற்பத்தியாகும் பெரியாற்றின் ஜலம் ஓரணையால் தேக்கப்பட்டுப் பின்பு அது சுருளியாற்றில் ஒருகால்வாய் வழியாகப் பாய்ச்சப்பட்டு, அதன்வழியாக வைகையாற்றில் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இது சமீபகாலத்தில் ஏற்பட்ட தேக்க

மாகும். இம்மாதிரியாகவே மேட்டூர்த் தேக்கமும் சமீபகாலத்தில் ஏற்பட்டதாகும்.

தாமிரபரணி, இந்த ஆறு அகஸ்தியமலையில் உற்பத்தியாகித் திருநெல்வேலி ஜில்லாவில் பாய்ந்தோடுகிறது. இதனால் வெகு இடங்கள் செழிப்பாக்கப்பட்டிருக்கின்றன.



(2) ஏரிப்பாசனம்.

நமது இராஜதானியில் வடகோடியிலுள்ள **சில்கா** ஏரியானது உப்புத் தண்ணீருடன் கூடியது. சமுத்திரத்திற்கும், அதற்கும் அடிக்கடி சம்பந்தம் ஏற்படுவதனால் இதன் ஜலம் பிரயோஜனப்படுவதில்லை. கிருஷ்ணா, கோதாவரி முகத்துவாரங்களுக்கு மத்தியில் **கொல்லேறு** என்னும் ஏரி இருக்கிறது. இதன் ஜலம் சாகுபடிக்கு மிகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

செங்கற்பட்டுக்கு வடக்கே சுமார் முப்பது மைலுக்கப்பால் ஒரு ஏரி இருக்கிறது. அதற்குப் **பழவேற்காடு ஏரி** என்று பெயர். இதுவும் மணற் குன்றுகளினால் சூழப்பட்டது. இது செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தது. இந்த ஜில்லாவில் **செம்பரம்பாக்கம்** என்னும் ஏரியுமிருக்கிறது.

தென்னாற்காடு ஜில்லாவில் பல ஏரிகள் இருக்கின்றன. அவைகள் பாசனத்துக் கேற்றவை. அவைகளுள் **வீராணத்தேரி** என்பது மிகப் பெரியது.

கர்நூல் ஜில்லாவில் **கம்பம்** என்னும் பெயர் கொண்ட ஒரு ஏரி இருக்கிறது. அதுவும் சாகுபடிக்கு உபயோகமானது. இவைகளைத் தவிர பெரிய குளங்களிலிருந்தும், அனேக இடங்களில் நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சப்பட்டுப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. இக்குளங்கள் நமது இராஜதானியில் எங்கே பார்த்தாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்குளங்களுக்கும் ஏரிகள் என்று பெயர் வழங்கப்படுகிறது.



(3) கிணற்றுப் பாசனம்.

நாம் ரயில் மார்க்கமாக நமது இராஜதானியில் பிரயாணம் செய்தோமானால், பலவிடங்களில் கிணறுகளிலிருந்து ஏற்றங்களின் மூலமாக ஜலம் பாய்ச்சப்படுவதைக் காணலாம். எவ்வெவ்விடங்களில் ஆறுகள், அல்லது ஏரிகள் இல்லையோ, அவ்விடங்களி லெல்லாம் கிணறுகளே பாசனத்துக்கு உபயோகப்படுகின்றன. இவைகள் தென்னாட்டில் முக்கியமாகக் கோயம்புத்தூர், சேலம் தென்னாற்காடு, வடஆற்காடு, சித்தூர், நெல்லூர் முதலிய ஜில்லாக்களிலும், வடக்கே பல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் ஜில்லாக்களிலும் அதிகமாக உபயோகப்படுத்தப் படுகின்றன. இவைகளிலிருந்து கையேற்றங்களினாலும், கபிலை ஏற்றங்களினாலும் ஜலம் எடுக்கப்படுகிறது.


சென்னை மாகாணம்
முக்கிய விளை பொருள்கள்
வங்காளக்
குடாக்கடல்
அரபிக
கடல்
கம்பு, சோளம், கேழ்வரகு.
நெல், சோளம், கம்பு, கேழ்வாகு
நெல்.
பருத்தி.
காடுகள்.
இந்து மகா சமுத்திரம்

பயிற்சி.

(1) ஆறுகளிலிருந்து வயல்களுக்கு ஜலம் எப்படிப் பாய்ச்சப்படுகிறது ?

(2) சில முக்கியமான ஆறுகளைக் கூறி அவற்றிற்கு ஏற்பட்ட அணைகளையும் விவரிக்க.

(3) நமது இராஜதானியில் எந்தெந்த ஜில்லாக்களில் ஏரிப்பாசனம் ?

(4) கிணறுகளிலிருந்து ஜலம் எப்படி விவசாயத்துக்கு உபயோகப் படுத்தப்படுகின்றது ?

(5) பூமிக்குள் ஜலம் இருப்பதற்குக் காரணம் உனக்குத் தெரியுமா ?

அத்தியாயம் 9.

பூசாரங்களும், பயிர்களும்.

பிள்ளைகளே! நமது மாகாணத்தில் பல்வேறிடங்களில் வெவ்வேறு பூசாரங்கள் அமைந்துள்ளன. பொதுவாகப் பூமியில் சாரக்குறைவினல் செழிப்பான பயிர்கள் வளர்வதரிதாகிறது. எவ்விடங்களில் ஆறுகள் பாய்ந்தோடுகின்றனவோ அவ்விடங்களில் பூசாரம் சிறந்ததாக இருக்கிறது. ஏன் எனில் ஆறுகள் மலைகளில் உற்பத்தியாகி அவைகளின் தாழ்வரைகளின் வழியாகப் பள்ளத்தாக்குகளை நோக்கி வரும் பொழுது மலைகளின் தாதுப்பொருள்களைச் சேகரித்துக்கொண்டு சமவெளிகளில் பரவச் செய்கின்றன. அதனல் ஒரு வகையான கலப்பு மண் ஏற்படுகிறது. அதனை **வண்டல்மண்** என்று சொல்வது வழக்கம். இவ்வண்டல் மண் படிந்த இடங்களிலெல்லாம் பூமி மெதுவாகவும், உழுது பரம்படிப்பதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. இத்தகைய பிரதேசங்களில் நெல், கரும்பு, புகையிலை முதலிய பயிர்கள் நன்ருக வளர்கின்றன. அம்மாதிரியான பிரதேசங்கள் கோதாவரி, கிருஷ்ணு, காவேரி முதலிய ஆறுகளின் இருபுறமுமுள்ள சமவெளிகளிலும், முகத்துவாரப் பிரதேசங்களிலும், மேற்குக் கடற்கரையோரமாயுள்ள சமவெளிகளிலும் அமைந்திருக்கின்றன.

சமுத்திரக் கரையோரங்களிலுள்ள இடங்கள் பெரும்பாலும் மணல் வெளிகளாக இருக்கின்றன. அவைகளில் நன்செய்ப் பயிர் வளர்வதில்லை. உப்புக் காய்ச்சுவதற்கும், தென்னை, பனை, ஈந்து, சவுக்கு முதலிய மரங்கள் வைத்துப் பயிராக்குவதற்குமே உபயோகப்படுகின்றன.

அழுத்தமான கழிப்புப் பிரதேசங்கள் பலவிடங்களில் அமைந்துள்ளன. இவைகளில் மழையின் உதவியால் முக்கியமாகப் பருத்திப் பயிர், சாகுபடி செய்யப் படுகிறது. அம்மாதிரியான இடங்கள் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும், பல்லாரி, கடப்பை, அனந்தப்பூர் ஜில்லாக்களிலும் இருக்கின்றன. சென்னைக்கு வடக்கேயுள்ள பல ஜில்லாக்களில் கழிப்பு மண் மிக்க இடங்களில், வெகு காலம் முதற்கொண்டு இந்தியாவில் பெயர்பெற்ற நீலச்சாயம் இறக்கக்கூடிய அவுரிச் செடி பயிர் செய்யப்படுகிறது.

உயர்ந்த மலைச்சாரல்களில் உள்ள பிரதேசங்களில் மரங்கள் நிறைந்த காடுகளும், புல் தரைகளும், புதர்களும் இருக்கின்றன. பெரியகாடுகள் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி, கிருஷ்ணு, விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் மிகுதியாயிருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவின் மலைகளில் ஏலக்காய், ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் உற்பத்தியாகின்றன. மதுரை ஜில்லாவின் மலைகளில் தேயிலை விசேஷமாகப் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவின் மலைகளில் பாக்குமரங்கள் அதிகம். நீலகிரி மலையில் காப்பிக்கொட்டை, தேயிலை முதலியவைகள் பயிரிடப்படுகின்றன. இம்மலைகளில் கொயின உண்டுபண்ணக்கூடிய சிங்கோன மரங்களும், பயிர்

செய்யப்படுகின்றன. ஆஸ்திரேலியா விலிருந்து நீலப்பசை மரங்கள் (Blue Gum Trees) என்று சொல்லப்படுகிற ஒருவகை மரங்களும் நீலகிரி மலைச்சார லில் பயிரிடப்படுகின்றன. அவைகளி லிருந்து கற்பூரத்தைலம் (Eucalyptus oil) என்று சொல்லப்படுகிற மருந் தெண்ணெய் இறக்கப்படுகிறது.

மேற் சொன்னவைகளைத் தவிர நமது இராஜதானியில் வளரும் மற்ற முக்கியமான பயிர்கள் என்னவென் றால் புன்செய்ப் பயிர், தோட்டப் பயிர் இவைகளே. புன்செய்ப் பயிர்களுக்கு நன்செய்ப் பயிர்போல் ஏராளமான ஜலம் வேண்டுவதில்லை. எவ்விடங்களில் ஆற்றுப் பாசனம் குறைவோ, அவ்வி டங்களில் எங்கெங்கே மிருதுவான பூ சாரம் அமைந்திருக்கிறதோ, அங் கெல்லாம் மழையின் உதவியினு லும், புன்செய்ப் பயிர்கள் பயிர் செய் யப்படுகின்றன. நன்செய்ப் பயிர் மிகு தியாயிருக்கும் பிரதேசங்களில் கூடத் தாழ்ந்த வயல் வெளிகளைத் தவிர மேடான படுகைகளிலும், புன்செய்ப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

தஞ்சை ஜில்லாவின் தென் பாகத்தி லும், மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக் களின் பல பாகங்களிலும், சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களிலும், நெல் லூர், செங்கற்பட்டு, தென்னுற்காடு, வடாற்காடு ஜில்லாக்களிலும், புன் செய்த் தானியங்கள் மிகுதியாக உற் பத்தியாகின்றன. வடக்கே வட சர்க் கார் ஜில்லாக்களிலும், மேட்டுப் பாங் கான இடங்களில் புன்செய்ப் பயிர்கள் வளர்கின்றன. முக்கியமான புன் செய்ப் பயிர்கள் என்னவென்றால் சோளம், கம்பு, கேழ்வரகு முதலியவை களும், உளுந்து, கொள்ளு, துவரை, பயறு முதலிய பருப்பு வகைகளும், ஆமணக்கு, எள்ளு, வேர்க்கடலை முத லிய தைலச் சரக்குகளும், பருத்தி முதலியவைகளுமே.

தோட்டக்கால் பயிர்கள் கிணற் றுப் பாசனத்தால் விருத்தியாகின்றன. அவைகள், வெண்டை, கத்தரி, கொத்த வரை முதலிய காய்கறிப் பொருள் களும், வாழை, புகையிலை, வெற்றிலை, மிளகாய், மஞ்சள் முதலிய பொருள் களுமாகும். பழவகை மரங்களும் இவ் வினத்தில் சேர்ந்தவைகளே. நாரத்தை, எலுமிச்சை முதலிய மரங்கள் விசேஷ மாகக் குடகு ராஜ்யத்திலும், மலையாள ராஜ்யத்திலும் உற்பத்தியாகின்றன. பலா, மா முதலியவைகள் மலையாளத் திலும், தஞ்சை ஜில்லாவின் தென்பா கத்திலும் சேலம், சித்தூர், வடஆற்காடு, விசாகப்பட்டணம் முதலிய ஜில்லாக் களிலும் உற்பத்தியாகின்றன. நீலகிரி மலைகளில் உருளைக்கிழங்கு, சீமைத் தக் காளி, பேரிக்காய், பட்டாணி, சீமை அவரை முதலியவைகள் உற்பத்தியா கின்றன.

தென்னிந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் புளி, மா, ஆல், அரசு, மூங்கில் முதலிய மரங்கள் உற்பத்தியா கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலை களைக் காட்டிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலேயே உயர்ந்த விருட்சங்கள் உற்பத்தி யாகின்றன. ஏனென்றால் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தான் மழை அதிகம். வடசர்க்கார்ப் பிரதே சத்தில் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலங்களில் மழை பெய்வதால் சில உயர்ந்த விருட்சங்கள் பயிராகின்றன. மலயபர்வதங்களின்மேல் சாலவிருட்சங் களும், குங்கிலிய மரங்களும், கோதாவரி ஜில்லாவில் உள்ள மலைகளின் மேல் தேக்குமரங்களும், வடஆற்காடு, கடப் பை முதலிய ஜில்லாக்களில் செம்மரங் களும் உற்பத்தியாகின்றன. மேலே கூறப்பட்டமரங்கள் கோதாவரி ஜில்லா வின் நல்ல மலை (கருமலை) யிலிருந்து நீலகிரிமலை வரையில் உள்ள காடுகளி லும் உற்பத்தியாகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மழை அதிகமாகையால் அவைகளில் மிக உயர்ந்த மரங்கள் உண்டாகின்றன என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இம் மலைகளின் உயர்ந்த சிகரங்களுக்குச் சமீபத்தில் புல்லைத் தவிர வேறொன்றும் உண்டாவதில்லை. நடுத்தாழ்வரைகளில் தேக்கு, ஈன் மரங்கள், நீலப்பசை மரங்கள், கருங்காலி, தேவதாரு முதலிய மரங்கள் உற்பத்தியாகின்றன. இம் மரங்களை வெட்டி வேலைக்கு உபயோகப்படுத்துவதற்காகத் துண்டு துண்டாய்ச் செய்கிறார்கள்.



யானைகள் மரங்களைத் தூக்கிவருதல்

யானைகளின் உதவிகளைக்கொண்டு இம் மரங்களை மலைகளிலிருந்து இறக்கிச் சமவெளிக்குக் கொண்டுவருகிறார்கள். மாரிக்காலங்களில் சிற்றருவிகள் ஜலத்தினால் நிரப்பப்படும்பொழுது இக் கட்டைகளை ஆறுகளில் மிதக்கவிட்டுச் சமுத்திரக் கரைக்குக் கொண்டுவருகிறார்கள். கள்ளிக்கோட்டைக்குச் சமீபத்தில் **கள்ளை** என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையில் இக்கட்டைகள் ஆயிரக்கணக்காக ஆற்றங்கரையில் குவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பேய்ப்பூர்நதியின் வழியாக இம்மரங்கள் மிகுதியாகக் கொண்டு வரப்பட்டுச் சமுத்திரக் கரையோரத்திலுள்ள இயந்திர சாலைகளில் பலகைகளாகவும், உத்தரங்களாகவும் அறுக்கப்படுகின்றன.

மேற்கூறிய மரங்களிலும், காய்கறிகளிலும், அனேகம் அயல் நாட்டிலிருந்து நமது தேசத்துக்குக் கொண்டு வரப்பட்டு நமது நாட்டு இயற்கைப் பொருள்களாகச் செய்யப்பட்டிருக்கின்றனஎன்பதை உணரவேண்டும். அவைகளில் முக்கியமாக நீலப்பசை மரங்களும், கருங்காலி மரங்களும், ஆஸ்திரேலியாவிலிருந்துவந்திருக்கின்றன. தேவதாரு முதலிய மரங்கள் (Pines & Firs) ஐரோப்பா, ஜப்பான் முதலிய இடங்களிலிருந்து வந்திருக்கின்றன. அமெரிக்காக் கண்டத்திலிருந்து புகையிலை, உருளைக்கிழங்கு, சோளம், கொய்யா, மிளகாய், அன்னாசி முதலிய செடிகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. காப்பிக்கொட்டை அரேபியாவிலிருந்து வந்திருக்கிறது என்பது யாவர்க்கும் தெரியும். தேயிலை சீனாவிலிருந்து வந்தது. கொயினா மரத்திற்குச் சிங்கோனா, அல்லது பெருவியன்பட்டை என்றுபெயர். இது தென்னமெரிக்காவிலுள்ள பெருவிலிருந்து கொண்டுவரப்பட்டது. இது மலேரியா என்னும் விஷ ஜுரத்துக்குச் சிறந்த ஔஷதமாகு மென்பது யாவர்க்கும் தெரியும்.

பயிற்சி.

(1) பூசாரமென்றால் என்ன? உனக்குத் தெரிந்த நான்கு வகைகள் கூறுக.

(2) நீ வசிக்கும் பிரதேசத்தின் பூசாரம் எப்படி இருக்கிறது?

(3) விளைபொருள்கள் பூசாரத்துக்குத் தக்கபடி எப்படி மாறுபாடடைகின்றன?

(4) நன்செய்ப் பயிரென்றாலென்ன? அது எங்கே மிகுதியாகச் சாகுபடியாகிறது?

(5) புன்செய்ப் பயிரென்றாலென்ன? அவைகளில் சில கூறுக.

(6) நமதுராஜதானியில் காடுஎங்கே அதிகம்?

(7) எக்காடுகளில் தேவதாரு, தேக்கு, நீலப்பசை மரங்கள் உண்டாகின்றன?

(8) காப்பிக்கொட்டையும், தேயிலையும் எங்கே விளைகின்றன?


சென்னை மாகாணம்
பிராணிகளும், தாதுப்பொருள்களும்
உப்பு
மாங்கனீஸ்
இரும்பு
கடப்பைக் கற்கள்
அப்ரகம்
தங்கம்
யானைகள்
இரும்பு
உப்பு
யானைகள்
காபியம்
உப்பு
முத்து
வங்காளக் குடாக்கடல்
அரபிக் கடல்
இந்து மகா சமுத்திரம்

(9) அந்நிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்குப் பயிர் செய்யப்படும் மரம், செடி முதலியவற்றுள் சில கூறுக.

(10) தோட்டக்கால் பயிர்கள் என்ருலென்ன? அவைகளுக்கு நான்கு உதாரணங்கள் கூறு.

(11) புகையிலை விளைவதற்கேற்ற நிலம் யாது? அது முக்கியமாக எங்கே உற்பத்தியாகிறது?

(12) நீ வசிக்கும் ஜில்லாவினுள்ள முக்கியமான தாவரங்கள், செடி, கொடிகள், கறி, காய்கள், இவைகளைச் சொல்லி அவைகள் எத்தகைய பூ பாகத்தில் உற்பத்தியாகின்றனஎன்பதைக் குறிக்கவும்.

அத்தியாயம் 10.

தாதுப் பொருள்கள்.

பூமியின்மேல் வளரும் மரங்கள், செடி, கொடிகள் இவைகளைத் தவிர பூமிக்குள்ளிருந்தும் சில பொருள்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. அவைகளுக்குத் தாதுப் பொருள்களென்றும், உலோகங்களென்றும் பெயர். அவைகள் மனிதனுக்குப் பலகாரியங்களில் உபயோகப்படுகின்றன. அதனுல்தான் அவைகள் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டுப் பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

தாதுப்பொருள்களில் முக்கியமானவை தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் முதலிய பஞ்சலோகங்களாகும். இவைகளில் அனேகம் நமது இராஜதானியில் கிடைப்பதில்லை.

தங்கம் இது மைசூர் ராஜ்யத்திலுள்ள கோலார் என்னுமிடத்தில் வெட்டியெடுக்கப்பட்டுப் பிற தேசங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அனந்தப்பூர் ஜில்லாவிலும் பொன் சுரங்கங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. வயநாடு என்னுமிடத்தில் தங்கச் சுரங்கம் இருப்பதையறிந்து அதை வெட்டி யெடுப்பதற்குப் புதிய கம்பெனி ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இரும்பு. இது சேலம் ஜில்லாவில் மிகுதியாகவும், பல்லாரி ஜில்லாவில் மிதமாகவும் அகப்படுகிறது. இவ்விடங்களிலுள்ள இரும்பை இது வரையில் வெட்டியெடுத்து உபயோகத்துக்குக் கொண்டுவரவில்லை. இரும்பு சுத்தமாகப் பூமியிலிருந்து அகப்படாது. அது மற்றைப் பொருள்களோடு கலந்துதானிருக்கும். அதைச் சுத்தப்படுத்த நிலக்கரி, சுண்ணம்புக்கல், முதலியவற்ருேடு சேர்த்து உருக்கவேண்டும். அப் பொருள்கள் இரும்பு கிடைக்கு மிடத்தில் அகப்படாத காரணம் பற்றி அது வெட்டியெடுக்கப்படுவதில்லை.

காரீயம். இது திருவாங்கூர் சமஸ்தானத்திலும், திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த சிங்கம் பட்டியிலும், கோதாவரி ஜில்லாவிலும் கிடைக்கிறது.

அபிரகம். இதற்கு ஆங்கிலத்தில் மைகா என்று பெயர். இதைப் பலர் கண்களால் பார்த்திருக்கக் கூடும். இது கண்ணுடியைப்போல் கொஞ்சம் பளபளப்பா யிருக்கும். இது நெல்லூர் ஜில்லாவில் கிடைக்கிறது.

மாங்கனிஸ். இது மிகுதியாக விசாகப் பட்டணம் ஜில்லாவில் வெட்டியெடுக்கப்படுகிறது. இரும்பிலிருந்து எஃகு செய்யப்படுவதற்கு இது உபயோகப் படுவதால் அயல் நாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

முத்து. இலங்கைத் தீவுக்குச் சமீபத்திலுள்ள மன்னர் குடாவிலிருந்து முத்து எடுக்கிருர்கள். சமுத்திரத்தில் முழுகி முத்துச் சிப்பிகளை வெளியேற்றுகிறவர்களுக்கு **முத்துக் குளிப்பவர்கள்** என்று பெயர். இவர்கள் பெரும்பாலும் திரு

நெல்வேலி ஜில்லாவிலும், இராமநாதபுரத்திலும், இலங்கைத் தீவிலும் இருப்பவர்கள். முத்துச் சிப்பிகளெடுக்கும் பொழுது சங்குகளையும் ஏராளமாக எடுப்பது உண்டு. இந்துக்களுக்குச் சங்கானது மிகுந்த பரிசுத்தமான பதார்த்தமாதலின் அவைகள் நன்கு விலையாகின்றன.

இவைகளைத் தவிர வெடியுப்பும் உணவுக்கு உபயோகப்படும் உப்பும் நமது இராஜதானியில் கிடைக்கின்றன. வெடியுப்பு கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் கிடைக்கிறது. வடக்கே கஞ்சம், விசாகப் பட்டணம் ஜில்லாக்களிலும், தெற்கே தஞ்சாவூர், இராமநாதபுரம் ஜில்லாக்களிலும், கடற்கரையோரங்களில் உப்பளங்கள் அதிகம். இவ்விடங்களில் கடல் நீரைச் சிறு வாய்க்கால் வழியாக வயல்களில் பாய்ச்சிக் கட்டிவிடுகிறார்கள். அது சூரிய வெப்பத்தால் உறைந்தவுடன் அதைத் திரட்டிச் சேகரிக்கிறார்கள். இக் கைத்தொழிலின் உரிமையை அரசாங்கத்தாரே வைத்துக் கொண்டிருப்பதால் இது அரசாங்கத்தாரின் சுதந்திர வர்த்தகமாகிறது.

பயிற்சி.

(1) பஞ்சலோகங்க ளென்று லென்ன ?

(2) நமது இராஜதானியில் இரும்பு எங்கே கிடைக்கிறது ?

(3) அதை ஏன் உபயோகப்படுத்துவதில்லை?

(4) முத்துக் குளித்தல் என்று லென்ன ?

(5) அது எவ்விடத்தில் நடைபெறுகிறது ?

(6) அரசாங்கத்தாரின் சொந்தமான கைத்தொழில் யாது ?

(7) அது எந்த ஜில்லாக்களில் அதிகமாக நடைபெறுகிறது ?

அத்தியாயம் 11.

பிராணி வர்க்கங்கள்.

சிறுவர்களே! உலகத்திலுள்ள மிருகங்களை நாட்டு மிருகங்களென்றும், காட்டு மிருகங்களென்றும், இருவகையாகப் பிரிக்கலாம். மனிதனது உதவியின்றிக் காட்டில் சுயேச்சையாக வசிக்கும் பிராணிகள் காட்டு மிருகங்கள் என்று கூறப்படும். அவைகள் யானை, புலி, சிறுத்தை, சிங்கம், கரடி, மான், காட்டுப் பன்றி முதலியவைகளாகும். அவைகளுள் அனேகம் மனிதனுக்கு உபயோகப்படாமல் இருந்தபோதிலும் சில சமயங்களில் மனிதனுக்குத் துன்பம் செய்வதுமுண்டு. ஆகையால் அவைகளை வேட்டையாடிக் கொல்வது வழக்கம். அவைகளில் யானை, பழக்கப்பட்டு விட்டால் மனிதனுக்குப் பலவிதத்திலும் உதவியா யிருக்கிறது. யானைகளின் உதவியைக் கொண்டுதான் மலையாளத்தில் மலைகளின் மேல் விளையும் மரக் கட்டைகளைச் சமவெளிக்குக் கொண்டு வருகிறார்கள் என்று முன்பே கூறியிருக்கிறோம். யானைபெரும்பாலும், திருவாங்கூர், மைசூர், விசாகப்பட்டணம் முதலியவைகளிலுள்ள காடுகளில் அதிகம். யானைகளின் தந்தம் பலவிதச் சித்திரவேலைகளுக்கு உபயோகப்படுகிறது. நமதுராஜதானியில் சிங்கம் கிடையாது. புலி, சிறுத்தை, காட்டுப்பன்றி, கரடி, மான் முதலியவைகள் பல காடுகளில் வசிக்கின்றன. அவைகளை வேட்டையாடுவதுமுண்டு. வேட்டையாடப் பட்ட மிருகங்களின் அவயவங்களானயானைத் தந்தம், மான், புலி இவைகளின் தோல், முதலியவைகள் மனிதனால் உபயோகப் படுத்தப் படுகின்றன.

மனிதனுக்கு உபயோகப் படக்கூடிய நாட்டு மிருகங்களுக்குள், ஆடு மாடுகளே நமது ராஜதானியில் எல்லா விடங்களிலும் இருக்கின்றன. கோயம்புத்தூர், சேலம், பல்லாரி, ஜில்லாக்களில் ஆடுகள் அதிகம். நமது இராஜதானியி

ுள்ள செம்மறியாடு ஆஸ்திரேலியா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள செம்மறியாடுகளைப் போல் அவ்வளவு உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவையல்ல. இவைகளிலிருந்துகிடைக்கும்சிறுஉரோமங்களிலிருந்து சாதாரண கம்பளங்களும், போர்வைகளும் நெய்கிறார்கள். மாடுகளுள் நல்ல ஜாதிகள்நெல்லூர்ஜில்லாவிலும், கோயம்புத்தூர்,குண்டூர்ஜில்லாக்களிலும் கிடைக்கின்றன. நெல்லூர்ப் பசு கறவைக்கேற்றது. குண்டூர் ஜில்லாவில் **ஓங்கோல்** என்னுமிடத்தில் கிடைக்கும் பசுக்களும், நல்ல பால் கொடுக்கும்.கோயம்புத்தூர் ஜில்லாவில் கிடைக்கும் காங்கய ஜாதி எருதுகள் நல்ல பலமுள்ளவைகள்.

நமது இராஜதானியில் அழகான சிறகுகளையுடைய பல பட்சிகளிருக்கின்றன. அவைகளில் மயில் மிகவும் அழகானது. பச்சைக்கிளி, வெள்ளைக் கிளி, சிவப்புக்கிளி, பஞ்சவர்ணக் கிளி, முதலிய பல கிளிச் சாதிகளும் உண்டு. மாமிச பட்சிணிகளான கழுகு, கருடன், வல்லூறு, ராஜாளி முதலிய பட்சிகளும் எல்லாவிடங்களிலும் இருக்கின்றன.

பயிற்சி.

(1) உலகத்திலுள்ள பிராணி வர்க்கங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

(2) காட்டு மிருகங்கள் என்றால் என்ன?

(3) காட்டு மிருகங்களுள் சில கூறு.

(4) நமது இராஜதானியிலுள்ள காட்டு மிருகங்களுள் எது மனிதனுக்கு மிகவும் உபயோகமுள்ளது? எப்படி?

(5) பசு மாடுகளுக்குப் பெயர்போன ஜில்லாக்கள் எவை?

(6) பலமுள்ள எருதுகள் எந்த ஜில்லாவில் கிடைக்கின்றன?

அத்தியாயம் 12.

ஜனங்களும், பாஷைகளும்.

பிள்ளைகளே!

கொடுக்கப்பட்டிருக்கும் படத்தைக் கவனித்தால் நமது ராஜதானியில் எவ்வெவ்விடங்களில் ஜனம் மிகுதி, குறைவு என்பது நன்கு விளங்கும். ஜனநெருக்கமுண்டாவது அவ்விடங்களிலுள்ள வசதியைப்பொறுத்தது. எங்கே நிலங்கள் செழிப்பாய் இருக்கின்றனவோ, எங்கே கைத்தொழில்கள் மிகுதியாய் நடைபெறுகின்றனவோ, எங்கு வியாபாரம் அதிகமோ, எங்கே புண்ணிய ஸ்தலங்கள் அமைந்திருக்கின்றனவோ, அவ்வவ்விடங்களிலெல்லாம் ஜனங்கள் அதிகமாய்க் கூடுவதியற்கை. ஆகையால் முன்னமே நாம் படித்திருக்கும் விஷயங்களைக்கொண்டு எங்கெங்கே ஜனநெருக்கம் இருக்கலாம் என்பதை நாமே ஊகிக்கலாம்.

நமது இராஜதானியில் பெரும்பாலான தொழில் விவசாயமானதால் அதில் அமர்ந்திருக்கிறவர்களின் எண்ணிக்கை நூற்றுக்குச் சுமார் எண்பதாகிறது. மற்றவர்களே வேறு தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். ஜீவநதிகள் எவ்விடங்களில் இருக்கின்றன என்பதை நாம் படித்திருக்கிறோம். வடக்கே கோதாவரி, கிருஷ்ணா, நதிகளின் முகத்துவாரங்களிலும், தெற்கே காவேரி டெல்டாவிலும், தாமிரபர்ணி நதிக்கரையோரங்களிலும், அதிக மழை பெய்கிற மேற்குக் கடற்கரை யோரங்களிலும் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. வடசர்க்கார் ஜில்லாக்களில் ஜனத்தொகை மிகவும் குறைவாயிருப்பதற்குக் காரணம் அவைகள் பெரும்பாலும் மலைகளால் சூழப்பட்டிருப்பதும், ஏஜன்ஸி பிரதேசம் என்று சொல்லக்கூடிய பாகங்களில் மலேரியா என்னும் விஷஜுரத்தால் ஜனங்கள் அடிக்கடி பீடிக்கப்படுவதுமேயாம்.


சென்னை மாகாணம்
ஜனங்கள். பாஷை.
வங்காளக் குடாக்கடல்
கன்னடம்
அரபிக கடல்
ஜனத்தொகை அதிகம்
ஜனத்தொகை குறைவு
இந்து மகா சமுத்திரம்

தட்சிணபீடபூமியிலுள்ள ஜில்லாக்களோ மழையின்மையால் வறண்ட பிரதேசங்களாயிருக்கின்றன. ஆகையால் அவ்விடங்களிலும் ஜனங்கள் குறைவுதான். சென்னைக்கு வடக்கேயுள்ள சமுத்திரக்கரை ஜில்லாக்களிலும், உள்நாட்டுப் பிரதேசங்களான சித்தூர், வடஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், முதலிய ஜில்லாக்களிலும் ஜனத்தொகை குறைவுதான். திருப்பதி, காஞ்சிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை, கும்பகோணம் முதலிய ஸ்தலங்களில் ஜனநெருக்கம் அதிகம். பல இருப்புப்பாதைகள் சந்திக்குமிடங்களான பெஜவாடா, காட்பாடி, அரக்கோணம், ஈரோடு, செங்கற்பட்டு, விழுப்புரம், திருச்சி முதலிய இடங்களிலும் ஜனங்கள் அதிகமாகக் குடியேறியிருக்கிறார்கள். எங்கெங்கே கச்சேரிகள் அதிகமோ, அங்கே உத்தியோகஸ்தர்களும், அவர்களையண்டிப் பிழைக்கும் வியாபாரிகளும் அதிகமாகிறார்கள். கைத்தொழிற்சாலைகளிருக்கும் இடங்களிலேயும் ஜனங்கள் அதிகரிப்பது இயற்கையாகும். நமது இராஜதானியின் மொத்த ஜனத்தொகை சற்றேறக்குறைய 470 லட்சமாகும்.

நமது இராஜதானியில் முக்கியமாகப் பேசப்படும் பாஷைகள் தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், இவைகளே. துளுவும், கொங்கண பாஷையும் மேற்குக்கடற்கரையோரத்திலுள்ள மங்களூர் என்னும் பட்டணத்தைச் சுற்றிப் பேசப்படுகின்றன. சென்னைக்கு வடக்கேயுள்ள ஜில்லாக்களில் பேசப்படுவது தெலுங்கு மொழியாகும். சென்னைக்குத் தெற்கே கன்னியாகுமரிவரையில் பேசப்படுவது தமிழ்மொழியாகும். திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களிலும், மலையாளம் ஜில்லாவிலும் பேசப்படுவது மலையாள பாஷையாகும். தென் கன்னடத்திலும், மைசூர் சமஸ்தானத்திலும், பல்லாரி, கடப்பை, அனந்தப்பூர் ஜில்லாக்களிலும், பேசப்படுவது கன்னட பாஷையாகும். இவைகளுக்கெல்லாம் **திராவிட பாஷைகள்** என்று பெயர்.

விசேஷமாக ஜனங்கள் பற்றுவது இந்துமதமேயாகும். அதற்கடுத்தபடி நூற்றுக்குச் சுமார் ஏழுபேர் மகமதியர்களாய் இருக்கிறார்கள். இதைத் தவிர கிறிஸ்தவ மதமும், ஜைனமதமும், பலரால் கொண்டாடப்படுகின்றன. மகமதியர்கள் விசேஷமாக வடஆற்காடு ஜில்லாவிலும், மலையாள தேசத்திலும் வசிக்கிறார்கள். மலையாளத்திலுள்ள மகமதியர்களுக்குப் பெரும்பாலும் **மாப்பிள்ளைமார்கள்** என்று பெயர். இவர்கள் முன் காலத்தில் அரேபிய தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள். அவ்வாறே அரேபிய நாட்டுக்குச் சமீபத்திலிருந்து வெகு நாட்களுக்கு முன் மலையாளத்தில் குடியேறின கிறிஸ்தவர்களுக்கு **ஸிரியன்** கிறிஸ்தவர்கள் என்று பெயர்.

பயிற்சி.

(1) நமது இராஜதானியில் எவ்வெவ்விடங்களில் ஜனத்தொகை அதிகம்? ஏன் ?

(2) தட்சிணபீடபூமிப் பிரதேசங்களில்ஜனத்தொகை குறைவாயிருப்பது ஏன்?

(3) எந்தெந்த இடங்களில் ஜனங்கள் இயற்கையாகவே அதிகமாகக் கூடுகிறார்கள் ?

(4) அப்படிப்பட்ட இடங்களில் சில கூறுக.

(5) இந்தியாவின் படம் ஒன்று வரைந்து ஜனத்தொகை யளவை விளக்கவும்.

(6) நமது இராஜதானியில்முக்கியமாகப் பேசப்படும் மொழிகள் யாவை ?

(7) அவை எவ்வினத்தைச் சேர்ந்தவை ?

(8) அவை எங்கெங்கே பேசப்படுகின்றன ?

(9) ஜனங்களின் முக்கியமான மதம் யாது ?

(10) மகமதியர்கள் எவ்விடங்களில் அதிகமாயிருக்கிறார்கள் ?

(11) மலையாளத்தி லிருக்கும் மகமதியர்களுக்கு என்ன பெயர் ?

(12) நமது இராஜதானியில் இந்து மதத்தைத் தவிர வேறு எம்மதங்கள் ஜனங்களால் கொண்டாடப் படுகின்றன ?


சென்னை மாகாணம்
கைத்தொழில்
அஸ்கா சர்க்கரை
தந்தவேலை
சந்தனமர வேலை
சர்க்கரை வெல்லம்
கரும்பாலை
துப்பட்டிநெசவு
ஆடுமாடுமேய்த்தல்
தோல்பதனிடுதல்
நெசவுத் தொழில்
வங்காளக் குடாக்கடல்
சோப்புவேலை
சந்தனமரவேலை
பருத்தியந்திரசாலைகள்
அலுமினியபாத்திரம்
தோல் பதனிடுதல்
கரும்பாலை
சர்க்கரை
மங்களூர் ஒடு,காபி
கம்பள நெசவு
பருத்தி யந்திரசாலைகள்
காபி
தேயிலை
கைநெசவு
பருத்தி யந்திர சாலைகள்
பித்தளை
பாத்திரங்கள்
செய்தல்
மீன்பிடித்தல்
நெசவு
சர்க்கரை
அரபிக் கடல்
இந்து மகா சமுத்திரம்

அத்தியாயம் 13.

ஜனங்களின் தொழில்.

சிறுவர்களே !

நமது இராஜதானியில் முக்கியமான தொழில் விவசாயம் என்று ஏற்கனவே தெரிந்துகொண்டிருக்கிறோம். இத்தொழிலின் ஆதிக்கத்தால் ஜனங்களில் பெரும்பான்மையோர் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். அதனால் தொன்றுதொட்டு வேளாண்மைத் தொழிலுக்கே அதிகச் சிறப்பு ஏற்பட்டு வந்திருக்கின்றது. நிலங்களின் உரிமையைப் பெற்றவர்கள் முக்கியமாக இருதரத்தினராவர். அவர்கள் ஜமீன்தார்களும், ரயத்துவாரிப் பட்டாதார்களுமாவார்கள். ஆனால் நிலத்தை நேராகப் பயிரிடுகிறவர்கள் குடியானவர்களே. அவர்களின் தொகைதான் அதிகம். அவர்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதே தங்கள் கடமை யென்பது அரசாங்கத்தாருக்குப் பொதுவான உணர்ச்சியாயிருந்த போதிலும், தற்கால ஆட்சிப் பொறுப்பை வகிக்கும் காங்கிரஸ் கட்சியினர்கள் குடிகளின் முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் பாடுபட்டு வருகின்றனர். அது குடியானவர்களின் அதிர்ஷ்டமான சந்தர்ப்பமென்றே கூறலாம். இவர்களைத் தவிர இன்னும் சில சாரார் காடுகளில் மரம் வெட்டுவது, விறகு சேகரிப்பது முதலானதொழில்களில் அமர்ந்திருக்கின்றனர்.

முற்காலம் முதல் ஒவ்வொருகிராமத்திலும் பலவகைப்பட்ட தொழிலாளிகள் வசித்து வந்திருக்கின்றனர். அவர்களது முக்கியமான தொழில்கள் என்னவென்றால் தச்சுவேலை, கொத்துவேலை, துணி நெய்தல், கொல்லுவேலை, பாய், கீற்று முதலியன முடைதல், சட்டி, பானை முதலியன செய்தல், தோல் பதனிடுதல், சில்லரை வியாபாரம் செய்தல் முதலியவைகளாகும். விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடி நூல் நூற்றுத் துணிநெய்வதே முக்கியமான தொழிலாய் இருந்துவந்திருக்கிறது. மனிதனுக்கு ஆகாரத்திற்கு அடுத்தபடியாக உடையே இன்றியமையாத தேவை



நெசவு

யாகும். சென்ற ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன் இத்தொழிலானது நமது தேசம் முழுவதும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு முக்கியமான குடிசைத் தொழிலாக நடைபெற்றுப் பலர் பிழைப்புக்கு ஆதாரமாயிருந்தது. சமீப காலத்தில் இங்கிலாந்து முதலிய அயல் நாட்டுத் தொழிற்சாலைகளின் போட்டியினால் இந்த முக்கியமான தொழில் நாளுக்குநாள் குறைந்து அநேகமாக ஒழிந்துவிட்டது.

இத்தொழிலுக்கு மறுபடியும் புத்துயிர் அளித்து ஜனங்களுக்கு உற்சாகத்தையும், தேறுதலையும் உண்டுபண்ண வேண்டுமென்ற அவாவுடன் மகாத்மா காந்தியடிகளும், அவர்களைச் சேர்ந்த பல தொண்டர்களும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களது பெருமுயற்சியின் பயனாகத் தற்காலத்தில் அனேக கிராமங்களில் இத்தொழில் திரும்பவும் முன்னைய நிலையை அடைந்



கைராட்டினம்

திருக்கிறது. இதைக் கண்டு நாம் அனைவரும் மகிழவேண்டும். கதர் இயக்கங்களும், கைராட்டினச் சங்கங்க

ளும், பலவிடங்களில் தோன்றி நமக்கு வேண்டிய ஆடைகளை நாமே செய்து கொள்ளும்படி செய்திருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் இது மறுபடியும் முக்கியமான குடிசைத் தொழிலாக ஆகும்படி செய்வது எல்லோருடைய கடமையாகும். இது ஏழை ஜனங்களுக்குப் பேருதவி அளிப்பதால் அரசியல் தொடர்புடையதாகக் கருதப்படாமல் சிக்கன வாழ்விற்கேற்றதொரு அறிகுறியுடையதெனக் கருதப்படுகிறது.

நமது இராஜதானியில் விளையும் நெல்லை ஜனங்களது ஜீவனத்திற்கு உபயோகப்படுத்தினது போகப் பாக்கியை நெல் இயந்திர சாலையில் அரிசியாக்கிப் பிறவிடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இத்தொழில் முக்கியமாக நெல்லூர், தஞ்சாவூர் ஜில்லாக்களில் நடைபெறுகிறது.

நெசவுத் தொழிலுக்கு வேண்டிய பருத்தி திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களிலும், வடக்கே பல்லாரி முதலிய இடங்களிலும் விளைகிறது. இப் பருத்தியைக் கொட்டையிலிருந்து நீக்கிப் பஞ்சைப் பதம் செய்து நூலாக



நூல் நூற்கும் யந்திரசாலை

நூற்கவும், ஆடையாக நெய்யவும் அனேக இடங்களில் பருத்தி யந்திர சாலைகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவைகள் தெற்கே கடம்பூர், பாபநாசம், முதலிய இடங்களிலும், தூத்துக்குடி, இராஜபாளையம், மதுரை, கோவில்பட்டி, திருப்பூர், சேலம், கோயம்புத்தூர் முதலிய இடங்களிலும் இருக்கின்றன. சென்னபட்டணத்தில்



பக்கிங்ஹாம் மில்

பக்கிங்ஹாம், கர்நாடிக், முதலிய பருத்தி இயந்திரசாலைகளிருக்கின்றன. இவைகள் நேர்த்தியான உடைகளை நெய்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இச் சாலைகளிலிருந்து சென்ற மகாயுத்த காலத்தில் ஏராளமான காக்கித்துணிகள் நெய்யப்பட்டுச் சிப்பாய்களின் ஆடைகளுக்கு உபயோகிக்கப்பட்டன. இயந்திரங்கள் மூலமாக நெய்யப்படும் துணிகள் மிருதுவாகவும், நேர்த்தியாகவும் இருப்பதால் அவைகளை ஜனங்கள் அதிகமாக வாங்குகிறார்கள். ஆகையால் கரடு முரடாகவும், விலையதிகமாகவுமுள்ள காதிவஸ்திரங்களை ஜனங்கள் வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். தேசாபிமானத்தைக் கருதியும், ஏழை மக்களுக்கு உதவ வேண்டுமென்பது பற்றியும் தற்காலத்தில் கதராடைகள் வரவர அதிகமாக வியாபாரமாகின்றன.

பல்லாரி, ஏலூர் முதலான இடங்களில் ஆட்டு ரோமங்களிலிருந்து கம்பளங்களும், பருத்தியிலிருந்து துப்பட்டிகளும், ஜமக்காளங்களும் நெய்யப்படுகின்றன. நேர்த்தியான பட்டுப் புடவை

கள் தஞ்சாவூர், மதுரை, காஞ்சிபுரம் முதலான இடங்களில் ஏராளமாக நெய்யப்படுகின்றன.

பாத்திர வகைகள். செம்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி முதலான உலோகங்களினால் கும்பகோணம், மதுரை, திண்டுக்கல், மலையாளம் முதலிய இடங்களில் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. கும்பகோணம் ஈயப்பாத்திரத்திற்குப் பெயர் பெற்றது. அவ்விடத்திற் செய்யப்படும் ஈயப்பாத்திரங்கள் நமது தேசத்தில் பலவிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மேற்குக் கடற்கரை யோரங்களில் தேங்காய்க் கொப்பரைகளி லிருந்து எண்ணெய் எடுப்பதும், தேங்காய்நார்களிலிருந்து கயிறுகள் முறுக்குவதும், கயிற்றுப் பாய்கள் பின்னுவதும் முக்கியமான தொழில்களாக இருக்கின்றன. அவ்விடத்தில் சோப்பும், மெழுகு வத்திகளும் செய்யப்படுகின்றன.

சென்னபட்டணம், நெல்லூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி முதலிய ஜில்லாக்களில் தோல் பதனிடப் படுகிறது. இத்தொழிலுக்காக அநேக இடங்களில் யந்திரசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

விசாகப்பட்டணம்ஜில்லாவில்கருங்காலி, சந்தனமரம், தந்தம் முதலியவைகளிலிருந்து பலவகைப்பட்ட பதுமைகளும், சித்திரப் பொருள்களும் செய்கிறார்கள்.

நமது இராஜதானியில் பலவிடங்களில் கரும்பு பயிராவதனால், அதிலிருந்து வெல்லம், சர்க்கரை முதலியவைகள் உண்டாக்கப்படுகின்றன. பனைமரங்களிலிருந்து இறக்கப்படும் கள்ளிலிருந்தும் கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு முதலியவைகளும் உண்டாக்கப்படுகின்றன. இவைகள் விசேஷமாகத் திருநெல்வேலி ஜில்லாவிலும், கஞ்சம் ஜில்லாவிலுள்ள அஸ்கா என்னுமிடத்திலும், கோதாவரி ஜில்லாவிலுள்ள சாமளக்கோட்டை என்னு மிடத்திலும், தென்னாற்காடு ஜில்லாவில் நெல்லிக் குப்பத்திலும் உள்ள யந்திரசாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

புகையிலை சுருட்டாகவும், மூக்குத்தூளாகவும் திண்டுக்கல், மதராஸ் முதலிய இடங்களில் செய்யப் படுகிறது.

நீலகிரிமலையில் வாற் கோதுமையிலிருந்து சாராயம் இறக்குகிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலும், மேற்குக்கரை நாடுகளிலும் காப்பிக்கொட்டைகளும், தேயிலையும் உணவுப்பொருளாவதற் கேற்றவாறு தயாரிக்கப்படுகின்றன.

இவைகளேயன்றி வேறு தொழில்களும் நடைபெறுகின்றன. அவற்றுள் முக்கியமானது மீன் பிடித்தல். இது கிழக்குச் சமுத்திரக் கரையோரங்களிலும், மேற்குக் கடற்கரையில் கள்ளிக்கோட்டைக்குச் சமீபத்திலும் நடைபெறுகிறது. தூத்துக்குடி சமுத்திரக் கரையோரத்தில் முத்துக் குளிக்கப்படுகிறது என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். மீன்களில் சில உணவுப் பொருளாகவும், எண்ணெய் எடுக்கவும், எருவாகவும் உபயோகப்படுகின்றன.

சமுத்திரக் கரையோரத்தில் அரசாங்கத்தாரால் உப்பு உண்டாக்கப்படுகிறது என்பதை முன்பே கூறியிருக்கிறோம். மேற்குக் கடற்கரை யோரங்களிலுள்ள மங்களூர், கள்ளிக்கோட்டை முதலான இடங்களில் பூமியின் மண்ணிலிருந்து நேர்த்தியான கூரை ஓடுகளும், செங்கல்களும், தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள பண்ருட்டி என்னுமிடத்தில் மண்பொம்மைகளும் செய்யப்படுகின்றன.

கிழக்குக் கடற்கரை யோரங்களிலுள்ள அநேக இடங்களில் அவுரி சாகுபடி செய்யப் படுகிறது என்பதை முன்னரே தெரிந்துகொண் டிருக்கிறோம்.

இச்செடிகளிலிருந்து நமது தேசத்தில் வெகு காலமாகப் பெயர்பெற்ற நீலச் சாயம் இறக்கப்படுகிறது.

பயிற்சி.

(1) கைத்தொழி லென்று லென்ன?

(2) நமது இராஜதானியில் நடக்கும் முக்கிய மான நான்கு கைத்தொழில்களைக் கூறி, அவைகள் எங்கே நடைபெறுகின்றன என்பதை விளக்கி யெழுது.

(3) கம்பளங்கள் எங்கே செய்யப்படுகின்றன?

(4) தந்த வேலை எங்கே செய்யப்படுகிறது?

(5) புகையிலைச் சுருட்டு எங்கே செய்கி றார்கள்?

(6) வெள்ளைச் சர்க்கரை, வெல்லம், முத லியவைகள் எங்கே செய்யப்படுகின்றன?

(7) பனவெல்லம் என்றுலென்ன? அது எதி லிருந்து காய்ச்சப்படுகிறது?

(8) பருத்தி யந்திரச் சாலைகளிருக்கும் முக் கியமான நான்கு ஊர்கள் கூறவும்.

(9) நாம் கதராடையை அணிய வேண்டிய தன் அவசியமென்ன?

(10) முக்கியமான குடிசைத் தொழிலாக இருந்த நெசவுத் தொழில் கொஞ்ச காலத்திற்கு முன் அழியக் காரணம் யாது?

அத்தியாயம் 14.

போக்குவரவு சாதனங்கள்.

பாலர்களே!

ஒரு தேசத்தில் ஜனங்கள் ஒரே இடத்தில் எப்பொழுதும் இருக்கமுடி யாது. ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்கு வியாபாரம் குறித்தோ, யாத்திரைபற் றியோ, வேறு பிற விஷயங்கருதியோ போகவேண்டியது அவசியம் ஆகின் றது. ஆகையால் இவ்வாறான போக்கு வரத்துக்குச் சாலைகளும், வாகனங் களும் இன்றியமையாதன. முற்காலத் தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் துக்குப் போவதென்றால் மிகவும் கஷ்ட மாயிருந்தது. ஏனெனில் பூமியின் மேடு பள்ளங்களினாலும், வழியில் காடு கள், பாலைவனங்கள் முதலியவற்றைக் கடந்து செல்லவேண்டியதா யிருந்தத னாலும், வழியில் கள்வர்களது அச்சத் தாலுமேயாம். இவ்வாறிருந்ததனால் ஒருவன் சுலபமாகவும், பத்திரமாகவும் போவதென்பது முடியாத தாயிற்று.

அதற்காக அரசாங்கத்தார் ரஸ் தாக்களைச் செப்பனிட்டு, வழியில் சிறி தும் அச்சமின்றித் தங்குவதற்கேற்ற வசதிகளையும் செய்து வந்தார்கள். ரஸ் தாக்களில் வெயிலின் கொடுமையைத் தணிக்க இரு புறங்களிலும் மரங்களை வைத்துப் பயிராக்குவது முண்டு. தரும சிந்தனையுள்ள பலர் ஆங்காங்குத் தங்கு வதற்கு விடுதிகளையும், இலவச உணவுச் சாலைகளையும் கட்டி வைத்தனர். இந்து தேச சரித்திரத்தை நீங்கள் ஆராயுங் காலத்தில் போக்கு வரவு சாதனங் களுக் கெனப் பல அரசர்கள் பெரு முயற்சி செய்திருப்பதைத் தெரிந்து கொள்வீர்கள். சமீப காலத்தில் இவ் வசதிகளை நன்கு ஏற்படுத்திய மகமதிய அரசர் வட இந்தியாவில் ஆண்டு வந் தார். அவர்தான் **ஷேர்ஷா** என்பவராவர்.

தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இதற்கெனப் பல சௌகரியங்களைப் பல காலங்களில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆயினும் தற்காலத்தில் நமது அரசாங்கத்தா ரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அவ்வ ளவு வசதிகள் முற்காலத்தில் இல்லை யென்றே கூறலாம். தலயாத்திரை செய்ய விரும்பும் பலர் கொடிய கள்வ ராலும், வன விலங்குகளாலும் துன் புறுத்தப்பட்டார்கள் என்று கேள்வி யுற்றிருக்கிறோம். சமவெளிகளைத் தவிர மேட்டுப் பாங்கான இடங்களிலும், காடு கள் வழியாகவும், ஒற்றையடிப் பாதை கள் வழியாகவும் செல்லுவது இயற்கை யாயிருந்தது. பொதிமாடுகளின் மேல் சாமான்களை ஏற்றிச்செல்வது வழக்கம்.

இக்காலத்தில் ஏற்பட்டுள்ள வசதிகளுக்குள் எது முக்கியமானதென்று நீங்கள் கூறுவீர்களா? அது இருப்புப்பாதையென்பது உங்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

போக்கு வரத்திற்காக ரஸ்தாக்கள், இருப்புப் பாதைகள், கால்வாய்கள், ஆறுகள், கடல்கள் இவைகள் உபயோகப்படுகின்றன. நாம் இவ்விராஜதானியைச் சுற்றிப் பிரயாணம் செய்து வந்தால் மேலே கண்ட சௌகரியங்கள் எவ்வெவ்விடங்களில் ஏற்பட்டிருக்கின்றன என்று நன்கறியலாம். அவ்வாறான சுற்றுப் பிரயாணங்களைப் பற்றி மேலே விவரமாகக் கூறப்போவதால் இவ்விடத்தில் சுருங்கக் கூறுவோம்.

இருப்புப்பாதைகள்:—இவைகள் நமது இராஜதானியில் எல்லாப் பக்கங்களிலுமிருக்கின்றன. ஆகையால் சாமான்களும், மனிதர்களும் எவ்விடத்திற்கும் செல்லலாம். தென்னிந்தியாவின் ரயில்வே படத்தைப் பாருங்கள். சென்னபட்டணத்தி லிருந்து சமுத்திரக் கரையோரத்தின் வழியாக வடக்கே பெரஹம்பூர் வரையிலும் ஒரு இருப்புப் பாதை செல்லுகிறது. வடமேற்கே விடப்பட்ட ஜில்லாக்களின் வழியாகப் பம்பாய் வரையிலும் மற்றொரு இருப்புப் பாதை செல்லுகிறது. மூன்றாவதாக ஒரு இருப்புப்பாதை மேற்கே மைசூர் ராஜ்யத்தின் வழியாக ஷிமுகா வரையிலும் செல்லுகிறது. மற்றோர் இருப்புப்பாதை தென்மேற்காகச் சேலம், ஈரோடு முதலியவைகளைக் கடந்து பாலக்காட்டுக் கணவாயின் வழியாகவும், மேற்குக் கடற்கரை யோரத்திலுள்ள கள்ளிக்கோட்டை, தலச்சேரி, வழியாகவும் மங்களூரைப் போய் அடைகிறது. ஷோரனூர் ஸ்டேஷனிலிருந்து ஒரு கிளைப்பாதை, கொச்சி ராஜ்யத்தின் வழியாய் எர்ணாகுளத்துக்குப் போய்ச் சேருகிறது.

சென்னபட்டணத்திலிருந்து வேறொரு இருப்புப்பாதை தெற்கு முகமாக விழுப்புரம், கூடலூர், மாயவரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை இவைகளைக் கடந்து ராமேச்வரத்துக்கும், தெற்கே திருநெல்வேலி, கொல்லம், திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்கும் செல்லுகிறது. இப்பெரிய இருப்புப் பாதைகளைத்தவிர பல கிளைகள் நமது ராஜதானி முழுவதும் இருக்கின்றன. படத்தைப்பார்த்தால், இருப்புப்பாதைகளினால் ஒரு பின்னற் கோலம்போடப் பட்டது போல் தெரிகிறது.

ரஸ்தா மார்க்கங்கள்:— இக்காலத்தில் வேகமாகச் செல்லும் மோட்டார் வண்டிகள் அதிகரித்து விட்டமையால் ரஸ்தாக்களை நன்றாகச் சீர்திருத்தம் செய்து சரியான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது. இருப்புப்பாதைகள் சுலபமாகப் போடமுடியாத இடங்களில் மோட்டார் வண்டிகளே அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும் எல்லா இடங்களுக்கும் இருப்புப் பாதைகள் அமைப்பதென்றால் பொருட் செலவு அதிகமாகிறது. ஆகையால் ரஸ்தாக்கள் அதிகப்படுத்தப்பட்டு நன்னிலையில் வைத்துக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகின்றது. இப்பாதைகளின் வழியாக மாட்டு வண்டிகள், குதிரைவண்டிகள் முதலியனவும் சுலபமாகச் செல்லக்கூடும்.

நமது இராஜதானியில் முக்கியமான ரஸ்தாக்கள் எங்கே போடப்பட்டிருக்கின்றன என்று கவனிப்போம்.

சென்னையிலிருந்து தெற்கு முகமாக ஒரு நல்ல சாலையானது செங்கற்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம் இவைகளைக்கடந்து திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் முதலிய இடங்களின் வழியாக மேற்கே கள்ளிக்கோட்டைக்குச் செல்லுகிறது. மற்றொரு பாதை தென்மேற்


சென்னை மாகாணம்
ரஸ்த்தாக்கள், கால்வாய்கள்
நிஜாம் இராஜ்யம்
விசாகபட்டணம்
இராஜமகேந்திரபுரம்
காகிநாடா
கோதாவரி கால்வாய்
பெஜவாடா
குண்டூர்
மசூலிபட்டணம்
கர்நூல்
குந்தக்கல்
பெல்லாரி
அனந்தபுரம்
கடப்பை
நெல்லூர்
சித்தூர்
பாகாலா
காடபாடி
அரக்கோணம்
சென்னபட்டணம்
மங்களூர்
பெங்களூர்
வேலூர்
செங்கல்பட்டு
மைசூர்
விழுப்புரம்
பாண்டிச்சேரி
விருத்தாசலம்
கடலூர்
உதகமண்டலம்
சேலம்
ஈரோடு
பாலக்காடு
கோயமபுத்தூர்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
நாகபட்டணம்
பொள்ளாச்சி
திண்டுக்கல்
மதுரை
இராமநாதபுரம்
தென்காசி
மண்டபம்
திருநெல்வேலி
தூத்துக்குடி
இருவனந்தபுரம்
திருச்செந்தூர்
கன்னியாகுமரிமுனை
வங்காளக் குடாக்கடல்
அரபிக் கடல்
கொச்சி
இந்து மகா சமுத்திரம்
இலங்கை
ரஸ்த்தாக்கள்
கால்வாய்கள்

காகச் சென்று சேலம் வழியாகக் கோயம்புத்தூர் போகிறது.

சென்னையிலிருந்து திருச்சி வரும் சாலையானது அங்கிருந்து மதுரை, திருநெல்வேலி இவைகளைத் தாண்டி வடமேற்காகத்திரும்பித் திருவனந்தபுரத்தின் வழியாகக் கொச்சி செல்லுகிறது.

சென்னையிலிருந்து ஒரு ரஸ்தாவானது சமுத்திரக் கரையோரத்தின் வழியாக வடக்கே நெல்லூர் முதலியவைகளைக் கடந்து பெஜவாடா போகிறது. பெஜவாடாவிலிருந்து வடக்கே சென்று விசாகப்பட்டணத்தின் வழியாக நமது இராஜதானியின் வடகோடிவரை செல்லுகிறது. இவைகளைத்தவிர இன்னும் ஆயிரக்கணக்கான கிளைச்சாலைகள் பல இடங்களில் இருக்கின்றன.

கால்வாய்கள்:—பிள்ளைகளே! நீங்கள் சென்னபட்டணம் சென்றிருந்தால் அவ்விடத்தில் சமுத்திரக்கரையோரத்தில் கால்வாய் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதில் உப்பு, கண்ணாடி, கிளிஞ்சல், விறகு முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டு அனேக படகுகள் அங்குமிங்கும் செல்வதைப் பார்க்கலாம். இந்தக் கால்வாய்க்குப் **பக்கிங்ஹாம் கால்வாய்** என்று பெயர். அதற்கு அப்பெயர் ஏன் வழங்குகிறது என்றால், சென்ற நூற்றாண்டில் லார்டு பக்கிங்ஹாம் என்ற பிரபு சென்னை இராஜதானிக்குக் கவர்னராக இருந்தார். அக்காலத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அவர் ஏழை ஜனங்களுக்கு உதவிபுரிய ஒரு கால்வாயை வெட்டினால் சௌகரியமாயிருக்குமென்று உத்தேசித்தார். ரஸ்தா மார்க்கத்தின் வழியாகச் சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்வதைக் காட்டிலும், கால்வாய்களின் வழியாக ஜாஸ்தியான சுமைகளைச் சுலபமாகக் கொண்டு போகலாம். ஆகையால் ஏழை ஜனங்களுக்குத் தினம் கூலி கொடுத்துக் கிழக்குச் சமுத்திரக் கரையோரமாகச் சென்னையிலிருந்து குண்டூர் வரையிலும் ஒரு கால்வாயை வெட்டினார். இது சுமார் 260 மைல் நீளமுள்ளது. அது அங்கிருந்து மறுபடியும் வடக்கு முகமாகக் கோதாவரி, விசாகப்பட்டணம் ஜில்லாக்களைக் கடந்து சில்கா ஏரி வரையிலும் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. இதன் தொடர்ச்சி தெற்காகச் சென்னையிலிருந்து, கூடலூர் வரையிலும் செல்லுகிறது.

கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்கள் மலைப்பாங்கான பிரதேசமாகையினால், அவ்விடங்களில் ரஸ்தா போடுவது சுலபமில்லையென்று கிருஷ்ணா, கோதாவரி நதிகளிலிருந்து பல கால்வாய்கள் வெட்டியிருக்கிறார்கள். அவைகள் ஜனங்கள் போக்குவரத்திற்கும், வியாபாரத்துக்கும் உபயோகப்படுகின்றன. மேற்குச் சமுத்திரக் கரையோரத்தில் உப்பங்கழிகள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டுச் சுமார் 100 மைல் நீளமுள்ள ஒரே கால்வாயாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் **கானோலி கால்வாய்** என்று பெயர். இக்கால்வாய்களெல்லாம் ஜனங்களின் போக்குவரத்துக்கும், வியாபாரத்துக்கும் உபயோகப்படுகின்றன.

கடற்கரையோரமாக வடக்கே பெரஹம்பூரிலிருந்து, தெற்கே இலங்கைத் தீவைச் சுற்றித் தூத்துக்குடியின் வழியாகக் கன்னியாகுமரிமுனையைத் தாண்டிக்கொண்டு வடக்கே மங்களூர் வரையில் கப்பல்கள் செல்லுகின்றன. இவைகள் முக்கியமாய் வியாபாரத்துக்காக ஒவ்வொரு துறைமுகத்திலும் நின்று சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லுகின்றன. இவைகளில் ஜனங்களும் பிரயாணம் செய்யலாம்.

பயிற்சி.

(1) நமது இராஜதானியில் போக்கு வரவிற்காக ஏற்பட்டுள்ள முக்கிய வசதி என்ன?

(2) மதராஸிலிருந்து முக்கியமான இருப்புப் பாதைகள் எதுவரையிற் செல்லுகின்றன?

சென்னை மாகாணம்
வியாபாரம்.
ஏற்றுமதி, இறக்குமதி.
உள்ளேவரும் சரக்குகள்
நூல், துணி, கம்பளம், தோல்-
-சாமான்கள், இயந்திரங்கள்,
தீப்பெட்டிகள், மண் எண்ணெய்,
பாக்கு, சர்க்கரை, காகிதம், சோப்பு
கண்ணாடி, மருந்து, பட்டு
ரம்புர்சான்கள், பட்டாசு,
ஸ்பிரிட்டு
வகைகள்.
வங்காளக்
குடாக்கடல்
வெளியேபோகும் சரக்குகள்
தோல், மாங்கனீஸ், அப்ரகம்.
நிலக்கடலை, வாசனைதிரவியங்கள்
நெல், கொப்பரைஎண்ணெய்,
கயிறு, காப்பி, தேயிலை,
தேக்குமரம்
பருத்தி.
அரபிக்
கடல்
இந்து மகா சமுத்திரம்

(3) முற்காலப் போக்கு வரவு சாதனங்களுக்கும், தற்காலப்போக்கு வரவு சாதனங்களுக்கும் வேற்றுமை என்ன?

(4) தற்காலத்தில் சாலைகள் நேர்த்தியாக அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன?

(5) கால்வாய்கள் எங்கே அதிகமாயிருக்கின்றன?

(6) பக்கிங்ஹாம் கால்வாய் என்று பெயர் வரக் காரணமென்ன?

(7) மதராஸிலிருந்து தூத்துக்குடி போவ தென்றால் ரஸ்தா மார்க்கமாக எந்த முக்கிய இடங்களைக் கடந்து செல்வாய்?

அத்தியாயம் 15.

ஏற்றுமதி, இறக்குமதிகள்.

பிள்ளைகளே! மனிதனுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் அவனிருக்கும் இடத்திலேயே விளைவது அசாத்தியம். சீதோஷ்ணஸ்திதி, பூமியின் சாரம் இவைகளினால் விளைபொருள்கள் பாதிக்கப் படுகின்றன. ஆகையால் சில விளைபொருள்கள் சிலவிடங்களிலும், மற்றவைகள் பிறவிடங்களிலுமே உற்பத்தியாகும். தேவைக்கு மேல் மிகுதியான பொருள்களை ஒரு நாட்டின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்துக்கு அனுப்புவதோடு, உலகத்திலுள்ள பல தேசங்களுக்கும் அவைகள் அனுப்பப் படுகின்றன.

நமது தேசத்தில் முக்கியமாக விளையும் பொருள்கள் விவசாயப் பொருள்களே. தாதுப்பொருள்கள் சிற்சிலவே இருக்கின்றன. கைத்தொழில் செய்து உற்பத்தியாக்கப்படும் பொருள்கள் சொற்பமாக இருக்கின்றன. ஆகையால் விவசாயப் பொருள்களை நமது இராஜதானியிலிருந்தும் பல்வேறிடங்களுக்கு அனுப்புகிறோம். கைத்தொழில் மூலமாகச் செய்யப்படும் சாமான்களையும், தேவையான பல உலோகங்களையும் நாம் இறக்குமதி செய்கிறோம்.

நமது இராஜதானியில் முக்கியமாக விளையும் விவசாயப் பொருள் என்ன என்றும், அவைகள் எங்கே உற்பத்தியாகின்றன என்றும் ஏற்கனவே அறிந்துகொண்டிருக்கிறீர்கள். அவைகளில் முக்கியமானவை நெல், காப்பிக் கொட்டை, தேயிலை, தைலச்சரக்குகள், தாதுப்பொருள்களான மாங்கனிஸ், அப்ரகம் என்பன. பருத்தி, நீலச் சாயம், மிருகங்களின் தோல்கள், தேங்காய், தேங்காய்க்கொப்பறை, தென்னை நார், வாசனைத்திரவியங்கள், சந்தனக் கட்டைகள் முதலியன பல துறைமுகங்களிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மண்ணெண்ணெய், பருத்தி, பட்டுத்துணிகள், பீங்கான் சாமான்கள், இரும்புச் சாமான்கள், சர்க்கரை, செம்பு, பித்தளைத் தகடுகள், ஈயம், வெள்ளி முதலிய உலோகங்கள், காகிதம், மோட்டார், ஸைகிள், துப்பாக்கி முதலியவைகள், பல விடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவைகளின் விவரங்களை நாம் செய்யப்போகும் சுற்றுப் பிரயாணத்தில் துறை முகங்கள் தோறும் கண்டறியலாம்.

பயிற்சி.

(1) ஏற்றுமதி, இறக்குமதி என்றாலென்ன?

(2) அவற்றின் அவசியம் யாது?

(3) நமது இராஜதானியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் முக்கியமாக எவ்விதத்தைச் சேர்ந்தவை?

(4) இறக்குமதியாகும் சாமான்களுள் நான்கு முக்கியமான சாமான்களைக் கூறு.

(5) நமது இராஜதானியிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதிகள் எத்துறைவாயிலாக நடைபெறுகின்றன?

சென்னை மாகாணம்
ஜில்லாக்களும்,
முக்கிய பட்டணங்களும்.
நிஜாம்ராஜ்யம்
வங்காளக்
குடாக்கடல்
மைசூர்
அரபிக்
கடல்
இந்து மகா
சமுத்திரம்
கஞ்சம்
விசாகபட்டணம்
கீழ்கோதாவரி
மேல்
கோதாவரி
கிருஷ்ணா
குண்டூர்
நெல்லூர்
பெல்லாரி
கர்நூல் ஜில்லா
அனந்தபுரம்
கடப்பை
சித்தூர்ஜில்லா
வடஆற்காடு
சேலம்
தென்னாற்காடு
திருச்சி
மதுரை
திருநெல்வேலி
சென்னபட்டணம்
ஜில்லா
மகாபலிபுரம்
பாண்டிச்சேரி
கடலூர்
மாயவரம்
தேவகோட்டை
பாம்பன்
தனுஷ்கோடி
கொல்லம்
கொச்சி
கன்னியாகுமரிமுனை

அத்தியாயம். 16.

நமது இராஜதானியின் ஜில்லாக்கள்.

சிறுவர்களே! நமது மாகாணத்தில் இயற்கையாக அமைந்திருக்கும் நிலப்பாகங்களைத் தவிரச் சர்க்காரின் ஆட்சி முறைக்காக நமது இராஜதானியைப் பல ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றிற்கு இயற்கையாக எல்லைகள் ஏற்பட்டிருத்தலு முண்டு. அவைகளைக் கீழ்க்கண்டவாறு சில பாகங்களாகப் பிரிக்கக் கூடும். அவைகளாவன.

(1) **வடசர்க்கார்கள்:—** கஞ்சம், விசாகப்பட்டணம், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, குண்டூர்.

(2) **தட்சிண பீடபூமியிலுள்ள ஜில்லாக்கள்:—** கர்நூல், கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர்.

(3) **கர்னடக நாடுகள்:—** நெல்லூர், மதராஸ், செங்கற்பட்டு, தென்னாற்காடு, சித்தூர், வடஆற்காடு.

(4) **உள்நாட்டு ஜில்லாக்கள்:-** கோயம்புத்தூர், திருச்சி, சேலம், நீலகிரி.

(5) **தென்னடுகள்:—** தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி.

(6) மேற்குக் கடற்கரையோரமான ஜில்லாக்கள்:— மலையாளம், தென்கன்னடம்.

(1) **வடசர்க்கார் ஜில்லாக்கள்:-** இவைகள் இயற்கையில் இரண்டு பிரிவுகளாகின்றன. ஒன்று கிழக்குச் சமுத்திரக் கரையோரத்திலுள்ள சமவெளி.

இரண்டு, மலைகளடர்ந்த மேற்குப் பிரதேசம் எனப்பிரிக்கலாம்.

I. **கஞ்சம் ஜில்லா:—** இங்குள்ள மலைகள் வடக்குப் பாகத்தில் சற்றேறக் குறைய சமுத்திரக்கரையோரம் வரையில் வந்துவிடுவதால் சமவெளியின் அகலம் குறுகிவிடுகிறது. தெற்கே செல்லச் செல்ல, வரவர அகன்று விஸ்தாரமாக இருக்கிறது.

கஞ்சம் ஜில்லாவில் ஓடுகின்ற நதிகளில் முக்கியமான நதி **ருஷிகுல்யா** என்பது. இதைக்கடந்தால் சில்கா ஏரிக்கரைக்கு வந்துவிடலாம். இந்த ஜில்லாவிலிருக்கும் மலைக்கு மலய மலை என்று பெயர். அதில் **மகேந்திரகிரி** என்னும் உயர்ந்த சிகரம் ஒன்றிருக்கிறது. இதில் பர்லாகிமிடி என்ற மலைநாட்டு ஜமீன் ஒன்றும் உண்டு. பெர்ஹாம்பூர் என்பது இதன் தலைநகரம். ருஷிகுல்யம் என்னும் நதிக்கரையில் **அஸ்கா** என்னுமிடத்தில் சர்க்கரை செய்யப்படுகிறது. மலைகளில் **கொண்டர்கள்** என்னும் பூர்வீகக்குடிகள் வசிக்கின்றனர்.

II. **விசாகப்பட்டணம் ஜில்லா:-** இந்த இராஜதானியிலிருக்கும் ஜில்லாக்களுள் இது மிகப் பெரியது. மேற்கே மலைப்



விசாகப்பட்டணம் துறைமுகம்

பிரதேசத்தில் **ஜெயப்பூர்** என்னும் ஜமீன்தாரி இருக்கிறது. **வால்டேர்** என்பது முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இவ்விடத்தில் ஆந்திர ஸர்வகலாசாலையின் தலைமையிடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து இருப்புப்

பாதையின் கிளையொன்று சமுத்திரக் கரை யோரத்திலுள்ள விசாகப்பட்டணம் வரையில் செல்லுகிறது. இவ்விடத்தில் அழகியதுறைமுகப் பட்டணமொன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விஜயநகரம், பொப்பிலி என்பன மற்ற ஜமீன்தாரிகளாகும். விசாகப் பட்டணத்துக்குச் சற்று வடக்கே பிமிலிபட்டினம் என்ற மற்றொரு துறைமுகம் உண்டு. இந்த ஜில்லாவில் பெரிய நதிகள் இல்லை. கரும்பு, நெல், புகையிலை முதலியவைகள் பயிராக்கப் படுகின்றன. இந்த ஜில்லாவின் மலைப் பிரதேசத்தைத் தனியாகப் பிரித்து, அவைகளுக்கு ஏஜன்ஸி நாடு என்று தனிப்பட்ட கமிஷனர் என்ற ஒரு அதிகாரியை அதன் துரைத்தனத்துக்காக ஏற்படுத்தியிருக்கின்றனர். அவைகளில் கொண்டர்கள், சபரர்கள் என்ற முரட்டுத்தனமான ஜாதியினர் வசிக்கின்றனர். மலைச்சரிவுகளில் குங்கிலிய மரம், தேக்கு மரம் முதலியன வளர்கின்றன.

III. கோதாவரி ஜில்லாக்கள்:-ஏலூர், காக்கினடா என்பவைகள் இவைகளுக்குத் தலைநகரங்களாகும். இந்த ஜில்லாக்கள் கோதாவரி நதியின் முகத்துவாரத்தில் அமைந்திருப்பதால் மிகச் செழுமையானவை. இலங்கைகளில் புகையிலை மிகுதியாகச் சாகுபடி செய்யப்படுவதை முன்பு குறிப்பிட்டிருக்கிறோம். தவளேச்வரம் என்ற அணைக்கட்டிலிருந்து பல கால்வாய்கள் வெட்டப்பட்டு, நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. பிரவாகக் காலங்களில் சமுத்திரக் கரையிலிருந்து, சுமார் 100-மைல் தூரம் வரையில் சிறு கப்பல்களும், தோணிகளும் கோதாவரி நதியில் உட்பிரதேசத்துக்கு வியாபாரம் முதலியவற்றிற்குச் செல்லும். இதன் முக்கிய ஆற்றுத்துறைமுகம் ராஜமகேந்திரம். இவ்விடத்தில் உயர் தரக்கல்லூரி ஒன்றிருக்கின்றது. உப்பு, அரிசி முதலிய பல பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல்களும், தோணிகளும் வியாபாரத்துக்குச் செல்லும். காடுகளிலிருந்து வெட்டப்பட்ட மரத்துண்டுகளும், மூங்கில்களும் ஆற்றின் வழியாக மிதக்க விடப்பட்டுப் பல விடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. சாமளக்கோட்டை என்னுமிடத்தில் சர்க்கரை, வெல்லம், பனவெல்லம் முதலியவைகள் காய்ச்சி எடுக்கப்படுகின்றன. **காக்கினடா** என்பது முக்கியமான ஒரு துறைமுகமாகும். கோதாவரி டெல்டாவின் வட பாகத்தில் கடலின் வளைவான பாகத்தில் அமைந்திருப்பதால் கடல் நீரோட்டங்களினால் உண்டாகும் உபத்திரவங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி அதிகம். இங்கிருந்து பர்மாவுக்கும் சரக்குகள் அனுப்பப் படுகின்றன.

(IV) குண்டூர் ஜில்லாக்கள்:—இவைகளில் குண்டூர், பெஜவாடா, மசூலிப் பட்டணம் என்பவைகள் முக்கியமான நகரங்கள். குண்டூரில் பருத்தியந்திரசாலை ஒன்றிருக்கிறது. கிருஷ்ணாவின் ரயில் பாலத்தைத் தாண்டினவுடன் வடக்காகப் பெஜவாடா என்னும் பெரிய ரயில்வே ஜங்ஷன் ஒன்றிருக்கிறது. இதிலிருந்து வடக்கே கல்கத்தாவுக்கும், தெற்கே சென்னைக்கும், மேற்கே நிஜாம் இராஜ்யத்துக்கும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன.

ராஜமகேந்திர புரத்தைப் போல் பெஜவாடாவும் ஆற்றுத் துறைமுகமாகும். இவ்விடத்திலிருந்து பல கால்வாய்கள் வெட்டப்பட்டுக் கிருஷ்ணா நதியின் ஜலம் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப் படுகிறது. இவைகளின் வழியாக வெகுதூரம்வரை நீராவிக் கப்பல்களும், படகுகளும் செல்லுகின்றன. இக்கால்வாய்களில் ஒன்று மதராஸிலிருந்து கடற்கரையோரமாக வடக்கே செல்லும் பக்கிங்ஹாம் கால்வாயோடு இணைக்கப்பட் டிருக்கிறது. மற்றொரு

கால்வாய் கிருஷ்ணநதியைக் கோதாவரி யுடன் சேர்க்கிறது. மசூலிப் பட்டணம் என்பது கிருஷ்ண, கோதாவரி நதிகளின் மத்தியிலுள்ள முக்கிய துறைமுகமாகும். ஏலூர் என்பது கோதாவரி, கிருஷ்ணநதிகளுக்கு மத்தியில் இருப்புப் பாதையில் அமைந்திருப்பதால், அது முக்கியமான வியாபார ஸ்தலமாகவும் ஆகிறது.

(2) தட்சிண பீடபூமியிலுள்ள ஜில்லாக்கள்

இந்த ஜில்லாக்களுக்கும், மற்ற ஜில்லாக்களுக்கும் முக்கியமான வித்தியாசம் என்னவென்றால், இவைகளின் மேற்குக் கிழக்கு எல்லைகளில் உயர்ந்த மலைகள் இருக்கின்றமையின் மேகங்களின் வேகங்கள் தடுக்கப்பட்டுப் போகின்றன. அதனல் இப்பிரதேசத்தில் மழை மிகவும் அரிது. இது காரணமாகப் பஞ்சம் அடிக்கடி ஏற்படுகிறது. பூமியும் கற்பாறைகளால் மூடப்பட்டிருப்பதால் பயிர்த் தொழில் சுலபமாகச் செய்ய முடியாது. கிணறுகளிலும், குளங்களிலும் ஜலம் மிகக் குறைவு. ஆனல் சில பாகம் கருமை நிறமான களிப்பு மண்ணினல் மூடப்பட்டிருப்பதால் அவ்விடங்களில் பருத்தி, பயிர் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஜில்லாக்களைக் கிழக்குப் பாகத்தில் நல்லமலை (கருமலை)என்பது, சமுத்திரத்தின் கரையோரத்திலுள்ள நெல்லூர் ஜில்லாவிலிருந்து பிரிக்கிறது. மேற்கிலிருக்கும் மலைத்தொடருக் கப்பால் மைசூர் இராஜ்யம் அமைந்திருக்கிறது. வடக்கே துங்கபத்திரை, கிருஷ்ண முதலிய நதிகள் எல்லையாகின்றன. துங்கபத்திரையையும், வடபெண்ணையையும் சேர்க்க ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அக்கால்வாய் கடப்பை, கர்நூல் வழியாகச் செல்கிறது.

பூமியானது தெற்கிலிருந்து வடபுறமாகச் சரிந்திருப்பதால் மலைகளில் உற்பத்தியாகும் சில சிற்றருவிகள் வடக்கு நோக்கிச் சென்று துங்கபத்திரை, கிருஷ்ண என்னும் இவ்விரு நதிகளிலும் விழுகின்றன. வடபெண்ணையாறானது இந்த ஜில்லாக்களின் தென்பகுதியில் உற்பத்தியாகி, வடக்கு முகமாக ஓடிக் கொஞ்சதூரத்திற்கப்பால் கிழக்கே திரும்பிக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் இடைவெளி வழியாக நெல்லூர் ஜில்லாவுக்குச் செல்லுகிறது. கடப்பை,கர்நூல்,அனந்தப்பூர் கால்வாயின் வாயிலாகவும், வடபெண்ணையாற்றின் உதவியாலும் சில இடங்களில் விவசாயம் செய்யப்படுகிறது. முக்கியமாகப் புன்செய்த் தானியமாகிய கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவை உற்பத்தியாகின்றன. இவைகளையே பெரும்பாலான ஜனங்கள் உணவுப் பொருள்களாக உபயோகிக்கிறார்கள்.

நமது இராஜதானியில் உற்பத்தியாகும் பருத்தி பெரும்பாலும் இப்பிரதேசங்களிலேயே பயிராகிறது. ஆகையால் அறுவடைக்காலங்களில் அதிகமாகப் பருத்திப்பொதிகளை ரயில்வே ஸ்டேஷன்களில் காணலாம். இருப்புப் பாதைகளின் வழியாகப் பருத்தி பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

பல இடங்களில் உயர்ந்த மலைப் பாறைகள் இருக்கின்றமையால் அவைகளின்மேல் பண்டைக்காலங்களில் பல அரசர்கள் கோட்டைகளைக் கட்டியிருக்கிறார்கள். அக்கோட்டைகள் அழிந்து கிடப்பதை இப்பொழுது பல விடங்களிலும் காணலாம். அவைகளுக்குத் துர்க்கங்கள் என்று பெயர். இவைகளில் முக்கியமானது பல்லாரியிலிருந்து சுமார் 40 மைலுக்கு மேற்கே ஹம்பி என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. அது துங்கபத்திரை நதிக்கரையில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் அனேக கோட்டைகளும், மாளிகைகளும், கோபுரங்களும் இடிந்து கிடக்கின்றன. இக்கட்டடங்களுள் சில பாகங்கள் இப்பொழுதும் வெகு நேர்த்தியாக இருக்கின்

றன. நீங்கள் நமது தேச சரித்திரத்தில் விஜயநகரம் என்னும் இராஜ்யத்தைப்பற்றிப் படித்திருப்பீர்கள்.

அது வெகுகாலம் வரையில் உயர்ந்த ஹிந்துராஜ்யமாக இருந்து வந்தது உங்களுக்குத் தெரியும். அவ்விடத்தில் பராக்கிரமம் மிகுந்த பல ராஜாக்களும் ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்களால் பல கலைகள் விருத்தியடைந்திருக்கின்றன. அப்பெரிய அரசர்களின் தலைநகரம்தான் தற்பொழுது **ஹம்பி** என்று மேலே சொன்ன இடத்தில் கட்டப்பட்டு வெகுகாலம் வரையில் மேன்மையாகவும், மிக்க சிறப்பாகவும் விளங்கி வந்தது.

துங்கபத்திரை, வடபெண்ணை முதலிய நதிகளின் அருகாமையில் கரும்பு, நெல், அவுரி முதலிய பயிர்களும் சாகுபடி செய்யப் படுகின்றன.

I. **அனந்தப்பூர் ஜில்லா:**—அனந்தப்பூர் என்பது இதன் தலைநகரம். இங்கு ஒரு உயர்தரக் கல்லூரி இருக்கிறது. இந்த ஜில்லாவில் குண்டக்கல் என்னும் ஒரு பெரிய ரயில்வே சந்திப்பு இருக்கிறது. அங்கிருந்து பல பாதைகள் பல இடங்களுக்குச் செல்லுகின்றன. இந்த ஸ்டேஷனிலிருந்து சுற்றுப் புறத்தில் பயிரிடப்படும் பருத்தி பல விடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இவ்விடத்தி லிருந்து செல்லும் ஒரு கிளைப்பாதை வழியாகத் தெற்கே சென்றால் மைசூர் சமஸ்தானத்திலுள்ள பெங்களூருக்குப் போய்ச் சேரலாம். வடபெண்ணை நதியின் உற்பத்தி ஸ்தானத்துக்குச் சமீபத்தில் இந்த ஜில்லாவின் பெரிய பட்டணமான **சிந்துப்பூர்** என்பது அமைந்திருக்கிறது. அதற்குச் சமீபத்திலுள்ள **தர்மாவரம்** என்னுமிடத்தில் பட்டுப்புடவை நெசவு அதிகம். அங்கிருந்து ஒரு இருப்புப்பாதை தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள விழுப்புரத்துக்குப் போய்ச் சேருகிறது.

II. **பல்லாரி ஜில்லா:**—குண்டக்கல்லிலிருந்து மேற்கு முகமாக இருப்புப் பாதைவழியே சென்றால் **ஹாகரி** என்னும் சிறு நதியைக் கடந்து பல்லாரி, ஹோஸ்பேட் (Hospet) என்னுமிடங்களுக்குச் செல்லலாம். பல்லாரி என்னும் பட்டணமானது இந்த ஜில்லாவுக்குத் தலைநகரமாகும். இது ஒரு ராணுவஸ்தலம். இந்த ராஜதானியில் பருத்தி உற்பத்தியாகுமிடங்களுள் பல்லாரி மிகவும் முக்கியமானதென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். **அதோனி** என்னும் பட்டணத்தில் பருத்தி நெசவுச் சாலைகள் அதிகம். இவ்விடத்தில் நெய்யப்படும் சமக்காளங்கள் பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

III. **கர்நூல் ஜில்லா:**— கர்நூல் என்பது இந்த ஜில்லாவுக்குத் தலைநகரம். அது துங்கபத்திரை நதியின் தென்கரையில் இருக்கிறது. இதன் வழியாக இந்த ஜில்லாவில் உற்பத்தியாகும் பருத்தி பல விடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்த ஜில்லாவில் மலைகளும், பள்ளத்தாக்குகளும் அதிகம். சிறுமலைகள் பெரும் பாலும் பசுமையற்று வறண்டவைகளாகவே இருக்கின்றன. ஆனால் நல்லமலை (கருமலை), எர்ரமலை (செம்மலை) இவைகளின் மேல் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. நீர்ப்பாசனத்திற்காக வெட்டப்பட்டுள்ள அனேக ஏரிகளில் **கம்பம்** என்னும் ஏரி மிகப்பெரியது. இதனால் பல விடங்களுக்கு நீர்ப்பாசன வசதி உண்டாயிருக்கிறது.

IV. **கடப்பை ஜில்லா:**— இதற்குத் தலைநகரம் கடப்பைதான். இது வடபெண்ணை யாற்றின் தென்கரையோரத்தில் அமைந்துள்ளது. இந்த நதியின் வடகரையோரத்தில் பருத்தி வியாபாரத்திற்கும், நெய் வியாபாரத்திற்கும் பெயர் பெற்ற **ஜம்மலமடுகு** என்னும் ஊர் அமைந்திருக்கிறது. இந்த ஜில்லாவின் பெரும்பாலான பாகங்கள் பீட

பூமியாகும். ஆனால் அதன் தென் கிழக்குப் பாகத்தில் சமவெளி அமைந் திருக்கிறது. பீடபூமிப் பிரதேசங்களில் அனேக இடங்களில் கற்பாறைகள் அடுக்கடுக்காகப் பலகைகள்போல் ஒன் றன்மேல் ஒன்றாகப் பதிந்திருப்பதால் அவைகளை வேண்டிய அளவில் பலகை போல் சதுரக் கற்களாக அறுத்துப் பல விடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆகையால் கடப்பைக் கற்கள் நமது இராஜதானியில் பல விடங்களில் உப யோகப் படுத்தப்படுகின்றன.

(3) **கர்நாடக நாடுகளிலுள்ள ஜில் லாக்கள்**:—இவைகளில் சித்தூர் ஜில்லா வானது மிகவும் மலைப்பாங்கான இட மாகும். வடஆற்காடு,நெல்லூர் ஜில்லாக் களின் பெரும்பாலானபாகங்கள் மலைக ளால் சூழப்பட்டிருக்கின்றன. செங் கற்பட்டு, தென்னாற்காடு ஜில்லாக்களில் அவ்வளவு மலைகள் இல்லை. ஆகையால் இவ்விரண்டு ஜில்லாக்களிலு முள்ள ஜனங்களின் வாழ்வும், தொழிலும் மலைப்பாங்கான மற்ற இரண்டு ஜில் லாக்களில் வசிக்கும் ஜனங்களின் வாழ்வு, தொழில்களுடன் சற்று வேற்று மைப் பட்டிருக்கின்றன.

I. **நெல்லூர் ஜில்லா**:— மேற்குப் பாகத்திலுள்ள மலைகளின் மத்தியி லுள்ளதோர் இடைவெளியின் வழியாக வடபெண்ணை நதியானது சமவெளிக் குள் பிரவேசித்துச் சமுத்திரத்தை அடைகிறது. அம்மலைக்கு வெள்ள கொண்ட மலைகள் என்று பெயர். அந் நதியின் தென்கரையில் இந்த ஜில்லா வுக்குத் தலைநகரமாகிய **நெல்லூர்** அமைந் திருக்கிறது. இவ்விடத்தில் ஆற்றுக்கு ஒரு அணைகட்டியிருக்கிறார்கள். அங்கி ருந்து கால்வாய்களினால் பலவிடங்க ளுக்கு ஜலம் பாய்ச்சப்படுகிறது. இதற் குச் சமீபத்தில் ஏராளமான நன்செய் வயல்களிருக்கின்றன. நெல் சாகுபடி இந்த ஜில்லாவில் அதிகமாக நடை பெறுகிறபடியால் நெல்லை அரிசியாக் கப் பல இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. நெல்லூர் அரிசி சாப் பாட்டிற்கு மிகச் சிறந்ததாகையால் இது பல விடங்களுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது. இந்த ஜில்லாவின் மேற் குப் பாகத்தில் **வெங்கடகிரி** என்னும் சமஸ்தானம் அமைந்திருக்கிறது. நெல் லூர் சாயத்துக்குப் பெயர் பெற்றது.

II **சித்தூர் ஜில்லா**:—இதன் தலைநக ரம் சித்தூர் சமுத்திர மட்டத்துக்குச் சுமார் 1000 அடி உயரத்துக்கு மேல் அமைந்திருக்கிறது. ஆகையால் இது மற்ற இடங்களைக் காட்டிலும் கொஞ் சம் குளிர்ச்சியாயிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் **திருப்பதி** என்ற பெயர்பெற்ற மலைநாட்டு ஸ்தலம் ஒன்றிருக்கிறது. இதற்கு வருஷந்தோறும் இந்தியாவின் பல இடங்களிலிருந்து பிரயாணிகள் மிகுதியாக வருகிறார்கள். இவ்விடத்தில் பித்தளைச் சாமான்களும், மரச்சாமான் களும் செய்யப்படுகின்றன. **மதனபள்ளி** என்னுமிடத்தில் ஒரு உயர்தரக் கல்லூ ரியும், க்ஷயரோக நிவாரணத்திற்காகப் பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்ட உயர்ந்த வைத்தியசாலையு மிருக்கின் றன.



வேலூர்

III **வடஆற்காடு ஜில்லா**:— வேலூர் என்பது இதன் தலைநகரம். இவ்விடத் தில் அழகிய பல கோயில்கள் இருக்கின் றன. இந்த ஜில்லாவில் இருக்கும் பல

விடங்கள் கர்னடக யுத்தத்தில் போர்க்களங்களாகவும், முற்றுகை பெற்ற இடங்களாகவும் இருந்தன. அவைகளில் முக்கியமானவை ஆற்காடு, வேலூர், ஆம்பூர் என்பவை. ஆம்பூர் என்னுமிடத்தில் சமவெளியிலிருந்து மலைநாட்டுக்குச் செல்ல ஒரு பாதை இருக்கிறது. வாணியம்பாடியில் இஸ்லாமிய கலாசாலை ஒன்றிருக்கிறது.

IV தென்னாற்காடு ஜில்லா:— இந்த ஜில்லாவின் வழியாகத் தென்பெண்ணையாறு, வெள்ளாறு, என்னும் நதிகள் ஓடுகின்றன. இதில் விழுப்புரம் என்னுமிடத்தில் அனேக இருப்புப்பாதைகள் கூடுகின்றன. ஒன்றன் வழியாகக் கிழக்கேயுள்ள பிரஞ்சு இலாகாவைச் சேர்ந்த புதுச்சேரிக்குச் செல்லலாம். புதுச்சேரி என்னும் நகரமானது ஒரு முக்கிய துறைமுகமாகும். இதன் பெயரினாலேயே இது சமீபகாலத்தில் உண்டானதென்று தெரிந்து கொள்ளலாம். இது பிரஞ்சுக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டது.

விழுப்புரத்திலிருந்து வடக்கே சென்றால் இடையில் திருக்கோவிலூரைக் கடந்து திருவண்ணாமலை என்னும் சிவஸ்தலத்துக்கு வரலாம்.



திருவண்ணாமலை

இது மலைச்சார்பில் அமைந்திருக்கிறது. இம்மலை மேல் தற்காலத்தில் **ஸ்ரீரமணமகரிஷி** என்னும் பெரியார் வசித்துக் கொண்டிருப்பதால் அவரைத் தரிசிக்கப் பலவிடங்களிலிருந்து ஜனங்கள் திரள்திரளாக வருகின்றனர்.



சிதம்பரம் கோவில்

விழுப்புரத்திலிருந்து தெற்கே சென்றால் சிதம்பரம் என்னும் சிவக்ஷேத்திரத்திற்குவரலாம். இது முக்கியமான சிவஸ்தலம்.



அண்ணாமலை யூனிவர்ஸிடி

இவ்விடத்தில் **ராஜா, ஸர், அண்ணாமலை செட்டியார்** அவர்களது நன்கொடையால் தமிழ்நாட்டிற்கே திலகம்போன்றதொரு ஸர்வகலாசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளாறு நதியின் முகத்துவாரத்தில் **பரங்கிப்பேட்டை** என்னும் ஒரு துறைமுகமிருக்கிறது. இந்த ஜில்லாவுக்குத் தலைநகரம் **கூடலூர்**. இது தென்பெண்ணை யாற்றின் முகத்துவாரத்தில் இருக்கிறது. இதன் ஒரு பகுதியாகிய **தேவனாம்பட்டணம்** என்னுமிடத்தில் முன்னாளில் ஆங்கிலேயரால் ஏற்ப

டுத்தப் பட்ட போர்ட்ஸென்ட் டேவிட் என்னும் கோட்டையிருந்தது. இப்பொழுது, பழுதடைந்திருக்கிறது.

இந்த ஜில்லாவில், வேர்க்கடலை, கரும்பு முதலியவைகள் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றன. கூடலூர்ப் பட்டணமும் ஒரு முக்கியமான துறை முகமாகும்.

V. செங்கற்பட்டு ஜில்லா:— இதன் தலைநகரம் செங்கற்பட்டு. இது பாலாற்றின் கரையிலிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதன் கரையோரங்களில் மிகுதியான நன்செய் வயல்களிருக்கின்றன. அவைகளில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

மகாபலிபுரம்

இவ்விடத்திலிருந்து சமுத்திரக்கரையோரத்திலுள்ள **மகாபலிபுரம்** என்னும் க்ஷேத்திரத்துக்குப்போகலாம். இடையில் **திருக்கழுக்குன்றம்** என்னும் ஸ்தலம் அமைந்திருப்பதைக் காணக்கூடும். இவ்விடத்தில் அனேக கோட்டைகள் இருக்கின்றன. மலைமேலும் ஒரு கோட்டை இருக்கிறது.

செங்கற்பட்டு இருப்புப்பாதையின் கிளைவழியாக வடக்கே சென்றால் **காஞ்சிபுரம்** என்னும் புண்ணிய ஸ்தலத்துக்கு



காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில்

வரலாம். இவ்விடத்தில் பண்டைக்காலத்தில் **பல்லவர்கள்** அரசு புரிந்ததாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் சோழ இராஜ்யமும் இதுவரையில் பரவியிருந்ததாகத் தெரிகிறது. மூன்று சமயாசாரியர்களில் ஒருவராகிய ஸ்ரீசங்கராசாரியாருக்கு இது வாசஸ்தானமாக இருந்தது. இந்தப் பீடத்திற்கு **ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம்** என்று பெயர். இதற்கு மூலகாரணராகிய ஸ்ரீ ஆதிசங்கராசாரியார் அவர்களை, மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீசங்கரரது அவதாரமென்று ஒரு சாராரும், ஸ்ரீசனத்குமாரர்களில் ஒருவரது அவதாரமென்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். காஞ்சிபுரத்தில் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயங்களும், சிவாலயங்களு மிருக்கின்றன. இவ்வூர் பட்டுப்புடவைக்குப் பெயர் பெற்றது. **திருவள்ளூரும்** இந்த ஜில்லாவிலுள்ள ஒரு புண்ணிய ஸ்தலமாகும்.

VI. சென்னபட்டணம்:— இது நமது இராஜதானியின் தலைநகரம். நமது மாகாணத்திலுள்ள நகரங்களுக்குள் இவ்விடத்தில் தான் ஜனத்தொகை அதிகம். நமது தேசத்திலுள்ள நகரங்களுக்குள் ஜனத்தொகையில் இது மூன்றாவதாகும். இம்மாகாண அரசாட்சியின் தலைவரான கவர்னரும், அவருடைய மந்திரிகளும் இங்கேதான் வசிக்கிறார்கள். இவ்விடத்தில் பல உத்தியோகச் சாலைகள் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை, **ஜெனரல் போஸ்டாபீஸ், ஹைகோர்ட்டு, ரெவினியூ போர்டாபீஸ்** முதலியவைகளாகும். இங்கே **போர்ட்ஸென்ட் ஜார்ஜ்** என்னும் இடத்தில் ராணுவப் படைகளிருக்கின்றன.



சென்னை ஹைகோர்ட்டு

இவ்வூரிலிருந்து கடற்கரையோரமாகப் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக வடக்கே குண்டூர் ஜில்லாவரையில் செல்லலாம். இக்கால்வாய்களின் வழியாகப் படகுகளில் வியாபாரத்துக்கேற்ற உப்பு, விறகு, சுண்ணம்பு முதலான பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. இவ்விடத்தில் பல உயர்தரக் கல்லூரிகளும் (Colleges), பல கலாசாலைகளும் (High schools) இருக்கின்றன. இவ்விடத்தில் சிறந்த சர்வகலாசாலையும் அமைக்கப் பட்டுளது. நமது மாகாணத்தின் சட்டநிர்மாண சபையும் இந்நகரத்தில்தா னிருக்கிறது. இது தென்னாட்டிலுள்ள ஒரு முக்கியமான துறைமுகமாகும். உலகத்தின் பல பாகங்களிலிருந்து கப்பல்கள் இங்கு வந்து தங்குவதைப் பார்க்கலாம்.

இந்நகரத்தின் ஒரு கிளைப்பட்டணமான பெரம்பூர் என்னுமிடத்தில் ரயில்வே சம்பந்தமான பெரிய ஒரு இரும்புத் தொழிற்சாலை இருக்கிறது. இந்நகரில் இரண்டு பருத்தி யந்திரச்சாலைகளும், தோல்பதனிடும் அநேக யந்திரச்சாலைகளும் இருக்கின்றன.

இந்நகரமானது சமீபகாலத்தில் உண்டாக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இந்தியாவுக்கு வந்த காலத்தில், சமுத்திரக்கரையோரங்களிலுள்ள பல விடங்களில்பண்டகசாலைகள்ஏற்படுத்தினார்கள். அப்பொழுது சந்திரகிரி மகாராஜாவினிடமிருந்து கடற்கரை யோரமாக ஒரு சிறு கிராமத்தை இனமாக அடைந்தார்கள். அதற்குத்தான் சென்னபட்டணம் என்ற பெயருண்டாயிற்று. வியாபாரம் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்கள் மிகுதியாகக் குடியேற ஆரம்பித்தார்கள். கடைசியாக ஆங்கிலேயர் தமது இராஜ்யத்தை இங்கே ஸ்தாபித்தபொழுது அந்த இராஜ்யத்தின் ஒரு மாகாணத்திற்கு இது தலைநகராயிற்று. நாளடைவில் இதற்குச் சமீபத்திலுள்ள மைலாப்பூர், திருவல்லிக்கேணி, பெரம்பூர், வண்ணாரப் பேட்டை முதலிய பலவிடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டு இது ஒரு பெரிய நகரமாகிவிட்டது. **மைலாப்பூர்** என்னுமிடத்தில்தான் தமிழ் மறையாகிய **திருக்குறளை** இயற்றிய **திருவள்ளுவரும்** அவதரித்தனர் என்பர்.

(4) **உள்நாட்டு ஜில்லாக்கள்:—** இந்த ஜில்லாக்களின் சீதோஷ்ணம் ஒரே தன்மையாக இல்லை. திருச்சி, சேலம் ஆகிய இவ்விரண்டு ஜில்லாக்களிலும் உஷ்ணம் அதிகம். ஏனெனில் அவைகள் சமுத்திரக்கரையோரங்களில் இல்லை. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் மலைகள் மிகக்குறைவு. சேலம் ஜில்லாவிலுள்ள



திருச்செங்கோடு மலை

மலைகளோ மிக உயர்ந்தவைகளல்ல. ஆகையால் இவைகள் மிகுந்த உஷ்ண முடையனவாயிருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவில் உயர்ந்த பலமலைகளிருக்கின்றன. அவைகளில் மரங்கள் அதிகம். ஆகையால் இந்த ஜில்லாவில் மற்ற இடங்களைக் காட்டிலும் வெப்பம் குறைவாகவே இருக்கிறது. நீலகிரி தென்னிந்தியாவில் உயர்ந்த மலையாகும். ஆகையால் இது எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருக்கிறது. இந்த ஜில்லாக்களின் அமைப்புக் கேற்ப ஜனங்களின் தொழிலும், வாழ்க்கையும் சிறிது மாறுபாடடைகின்றன.

I **திருச்சிராப்பள்ளி ஜில்லா:—** இந்த ஜில்லாவின் வடமேற்குப் பாகத்தில் பச்சை மலைகள் என்னும் பெயர் கொண்ட குன்றுகளிருக்கின்றன. காவேரி நதியினல் இது சற்றேறக் குறைய இரண்டுபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதன் தலைநகரம் **திருச்சிராப்பள்ளி.** இதன் வடக்குப் பாகத்



ஸ்ரீரங்கம்

திற்கு **ஸ்ரீரங்கம்** என்று பெயர். இது காவேரிக்கும், கொள்ளிடத்துக்கும் நடுவே அமைந்துள்ளது. இது சிறந்த ஒரு விஷ்ணு ஸ்தலமாகும். இதனையே வைணவர்கள் கோவில் என்பர்.

திருச்சிராப்பள்ளி நமது மாகாணத்திலுள்ள பெரிய நகரங்களுள் ஜனத்தொகையில் மூன்றாவதாகக் கருதப்படுகிறது. இதன் மத்தியில் சுமார் 300 அடி உயரமுள்ள கற்பாறை ஒன்றிருக்



திருச்சி மலைக்கோட்டை

கிறது. அதன்மேல் ஒரு கோவிலுமுண்டு. இதைச் சுற்றிப் பிரஞ்சுக்காரர்களுக்கும், இங்கிலீஷ்காரர்களுக்கும் பெரும் போர் நடந்திருக்கிறது. மலையின் மேல் ஏறிப் பார்த்தால் நாலாபக்கங்களிலும் வெகுதூரம் வரையில் பார்க்கலாம். கிழக்கே காவேரியாற்றங்கரை யோரத்திலுள்ள மிகுந்த நன்

செய்ப் பிரதேசங்களைப் பிரவாககாலத்தில் பார்த்தால் கண்ணுக்குச் சிறந்த காட்சியாகும்.

இவ்வூரில் பல இருப்புப் பாதைகள் வந்து கூடுகின்றன. ஒன்று குறுக்கே விருத்தாசலம் வழியாய் விழுப்புரம் செல்லுகிறது. மற்றொன்று கிழக்கே தஞ்சாவூர் சென்று அங்கிருந்து வடகிழக்காகச் சிதம்பரம், கூடலூர் முதலிய இடங்களுக்குப் போகிறது. இத்துடன் தெற்கேயுள்ள **புதுக்கோட்டை ராஜ்யமும்** இருப்புப்பாதையின் வழியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. தென்மேற்காகச் செல்லும் இருப்புப்பாதை **திண்டுக்கல்** வழியாக மதுரைக்குப் போகிறது. மேற்கே செல்லும் இருப்புப் பாதையின் வழியாகச் சென்றால் **அமராவதி** என்னும் உபநதியானது காவேரியுடன் கலக்குமிடத்தில் **கரூர்** என்னும் ஒரு பட்டண மிருப்பதைக் காணலாம். அது ஒரு பழமையான ஊர். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த **பொன்மலை** என்னுமிடத்தில் தென்னிந்திய இருப்புப்பாதையின் சம்பந்தமான சிறந்த ஒரு இரும்புத் தொழிற்சாலை கட்டப் பட்டிருக்கிறது. அதில் ஏராளமான ஜனங்கள் வேலை செய்து ஜீவித்து வருகிறார்கள்.

II **சேலம்ஜில்லா**:—தட்சிணபீடபூமியிலிருந்து பிரியும் மலைத்தொடர்கள் இந்த ஜில்லாவில் புகுகின்றன. இவைகளுக்குப் பல கிளைகளுண்டு. இந்த ஜில்லாவின் கிழக்குப் பாகத்தில் **தென்பெண்ணை, வெள்ளாறு** முதலிய பல ஆறுகள் ஓடுகின்றன. மேற்குப் பாகத்தில் **காவேரி** ஓடுகிறது. சேலம் இதன் தலைநகரமாகும். இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்திலுள்ள **சேர்வராயன்மலையின்** பல பாகங்களில் மண்ணுடன் கலந்த இரும்புப் பாறைகள் இருக்கின்றன. **ஏர்க்காடு** என்பது கோடைகால வசதிக்கேற்ற ஒரு மலைப்பட்டண மாகும்.

சேலத்திற்குச் சமீபத்தில் **மேட்டூர்** என்னுமிடத்தில் காவேரியாற்றுக்குப் பெரிய அணைக்கட்டுக் கட்டி யிருக்கிறார்கள் என்று முன்னமே படித்திருக்கிறோம்.



சேர்வராயன் மலை: ஏர்க்காடு

சேலத்திலிருந்து கிளைப்பாதையின் வழியாக மலைகள்மேலிருக்கும் **ஹோசூர், கிருஷ்ணகிரி** என்னு மிடங்களுக்குச் செல்லலாம்.

III **கோயம்புத்தூர் ஜில்லா**:—இந்த ஜில்லாவின் வடக்குப் பாகத்தில் **நீலகிரியும்**, தெற்கே **ஆனைமலையும்** இருக்கின்றன. அவைகளின் நடுவே உள்ள இடைவெளிக்குப் **பாலக்காட்டுக் கணவாய்** என்று பெயர். மலைப்பாகங்களில் மரங்கள் அடர்ந்த பெருங்காடுகள் இருக்கின்றன. பள்ளத்தாக்குகள் மிகச் செழிப்பானவை. **காவேரி**, அதன் உபநதிகளான **பவானி, நொய்யல், அமராவதி** என்னும் ஆறுகள் இவ்விடங்களில் நீர்ப்பாசனத்துக்கு உபயோகப் படுகின்றன. இந்த ஜில்லாவில் **ஈரோடு, போத்தனூர்** என்ற இரண்டு இடங்களும் இருப்புப் பாதையின் பெரிய சந்திப்பாகும். இந்த ஜில்லாவில் விளையும் பருத்தியை இதன் தலைநகரான கோயம்புத்தூர் என்னும் பட்டணத்தில் கட்டப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் செப்பனிட்டு நெசவுக்குத் தயாரிக்கிறார்கள்.



கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலை

இந்நகரில் விவசாயப் பயிற்சிக்காகவும், காட்டுப் பயிர்ப் பயிற்சிக்காகவும் இரண்டு கல்லூரிகள் ஏற்பட்டிருக்கின்றன.

IV. **நீலகிரி ஜில்லா:**—இது கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு வடக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும் சந்திக்குமிடத்தில் இருக்கிறது. இங்குள்ள மலைகள் மிகவும் உயர்ந்தவை. அவைகள் சுமார் ஒரு மைலிலிருந்து ஒன்றரை மைல் அளவு உயரமாய் இருக்கின்றன. மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் இது பல் வகையில் வேறுபட்டுள்ளது. ஆங்கிலேயர்களின் ஆதிக்கமேற்பட்ட காலத்திற்குப் பிறகுதான் இம்மலைகளின்மேல் நாகரிகம் வாய்ந்த ஜனங்கள் குடியேற ஆரம்பித்தார்கள். அதற்குமுன் மலையில் வாழும் ஜாதியினரான தோடர்களும், படகர்களுமே இவ்விடத்தில் வசித்து வந்தார்கள். கோடைக் காலங்களில் சமவெளிகளிலுள்ள வெப்பத்தைத் தாங்கமுடியாமல் ஐரோப்பியர்கள் இம்மலைகளின்மேல் வந்து வசிக்க ஆரம்பித்தார்கள். அது முதற்கொண்டு இம்மலைச் சாரல்களில் பலவிடங்களில் பல ஐரோப்பியத் தோட்டப் பயிராளர்கள், இங்கே காப்பிக்கொட்டை, தேயிலை முதலிய தோட்டங்கள் அமைத்துப் பயிர் செய்ய ஆரம்பித்தார்கள்.

நமது இராஜதானியின் தலைமைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கோடைக்காலத்தில் வருஷத்தில் சுமார் ஆறு மாதகாலம் வரையில் வசித்துவர ஆரம்பித்தார்கள். அதனால் நமது மாகாண ஆட்சியும், அக்காலங்களில் இங்கேயே நடைபெற்றது. அதற்காக **உதகமண்டலம்** என்னுமிடமானது இதற்குத் தலைநகராக்கப்பட்டுப் பல உத்தியோகச் சாலைகளும், பங்களாக்களும், விடுதிகளும் அமைக்கப்பட்டன. அதன் காரணமாகக் கடை கண்ணிகளும், வியாபாரிகளும் இங்குத் தங்க ஆரம்பித்தனர். ஆதலின் வருஷத்தில் ஆறுமாதம் இங்கே ஜனப்பழக்கம் அதிகமாயிருக்கும்.

முன்காலத்தில் இப் பிரதேசங்களுக்குச் செல்வதென்றால் மிகவும் சிரமமாயிருந்தது. மலைகளின் மேல் சிறு பாதைகளின் வழியாக நடந்து

தான் செல்லவேண்டும். இப்பொழுது இதற்கு ரயில்பாதை ஏற்பட்டுள்ளது. கோயம்புத்தூர் ஜில்லாவில் தென் பாகத்திலுள்ள போத்தனூர் ஜங்ஷனிலிருந்து ஒரு கிளைப்பாதை கோயம்புத்தூர் நகரத்தின் வழியாக மேட்டுப்பாளையம் வரையில் செல்லுகிறது. அங்கி

கூனூர் பஜார்

ருந்து ஒரு சிறு ரயில்பாதை மலைமேல் செல்லுகிறது. மேட்டுப்பாளையத்திலிருந்துசுமார் முப்பதுமைல்தூரம்ஏறிச் சென்றால் நடுவிலுள்ள **கூனூர்,வில்லிங்டன்** என்னும் சிறு ஊர்களைத் தாண்டிக்கொண்டு உதக மண்டலத்துக்கு வந்து சேரலாம். மலைகளின்மேல் புகைவண்டிகள் ஏறிச் செல்வது அபாயமானதால் அதற்காக இருப்புப்பாதையில் மூன்று தண்டவாளங்க ளமைக்கப்பட்டுள்ளன. நடுத்தண்டவாளத்தில் பற்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஏனெனில் புகைவண்டிகள் பாதையை விட்டு நழுவாமல் இருப்பதற்காகவே என்று கூறலாம். புகைவண்டித் தொடரிலும் வண்டிகள் குறைவாகப் பூட்டப்படுகின்றன. மலைகளில் ஏறும் பொழுது இருபக்கங்களையும் பார்த்தால் நாம் இதுவரையில் கண்டிராத மரங்களும், செடி, கொடிகளும் இருப்பதைக் கவனிக்கலாம். மலைகளின் இடையிடையே பல பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. அவைகளில் அநேகவிதமான பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இந்த ஜில்லா முழுவதும் சமவெளி என்பதே கிடையாது.

கோடைப் பருவத்திலும், பகற்காலங்களிலும் குளிர்ச்சியாகவே இருக்கும். ஜனவரிமீ முதல், மேமீ வரையில் மழையில்லாத காலமாகும். அதுமுதற்கொண்டு வருஷம் முழுவதும் மழை பெய்துகொண்டிருக்கும். பள்ளத்தாக்குகளின் வழியாகச் சிற்றருவிகள் ஓடுகின்



நீலகிரி இருப்புப்பாதை

றன. இவைகள் ஒன்றாகச் சேர்ந்து கிழக்குப் பாகத்தில் ஒரு ஆறாக மாறுகிறது. அந்த ஆற்றுக்குப் **பவானி** என்றுபெயர். அந்நதியானது தெற்கே சென்று காவேரியாற்றுடன் கலக்கிறது. மாரிக்காலத்தில் இராக்காலங்களில் குளிர்ச்சியின் மிகுதியினால் சில சமயம் ஜலம் உறைந்து போவதுமுண்டு. பகற்காலங்களிலும் சரீரத்தின் உஷ்ணத்தினின்று காப்பாற்றக்கூடிய கம்பள ஆடைகள் தரித்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

மலைகளின்மேல் அவைகளின் உயரத்துக்குத் தக்கபடி மரங்களும், செடி, கொடிகளும் பயிராகின்றன. உச்சியில் பனி அதிகம். ஆகையினால் பச்சை வளர்வதில்லை. அதற்குக் கீழ்ப்பகுதிகளில் புற்கள் உண்டாகின்றன. அங்கிருந்து கீழே இறங்கினால் புதர்களும், நீண்டு வளராத மரங்களும் உற்பத்தியாகின்றன. மலைச் சரிவுகளில் உயர்ந்த பல மரங்கள் வளர்கின்றன. இவைகளில் பலவகைகள் ஆஸ்திரேலியா, ஐரோப்பா கண்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. அவைகளில் முக்கியமானது **நீலப் பசைமரம்.** (Blue Gum Trees) இது விறகிற்கும், கற்பூரத்தைலம் இறக்குவதற்கும் பயன்படுகிறது. தேவதாரு மரங்கள் பலவிடங்களில் பயிரிடப்பட்டிருக்கின்றன. இவைகளின் சிகரங்கள் தேர்போ லிருக்கும். வைத்தியத்துக்கு உபயோகப்படுத்தக் கூடிய **சிங்கோனு** அல்லது **பெரூயின் பட்டை** என்கிற மரங்களும் பயிராக்கப்படுகின்றன. இவைகளின் பட்டைகளிலிருந்து **கொயினு** என்னும் மருந்து செய்யப்படுகிறது.

மலைகளின்மேல் முக்கியமாகப் புல் நிறைந்த இடங்களில் பசுக்களும், எருமைகளும், ஆடுகளும் மேய்கின்றன. இவைகளை ஏராளமாக வளர்த்துவரும் இடையர் ஜாதியினர்க்குத் தோடர்கள் என்று பெயர். அவர்கள் பால், வெண்ணெய், தயிர் முதலியவைகளை விற்று ஜீவிக்கிறார்கள்.

இம்மலைகளின்மேல், சமவெளி நாடுகளில் உற்பத்தியாகக் கூடிய புளி, வாழை, தென்னை, ஆல், அரசு, மூங்கில் முதலிய மரங்கள் பயிராகா. சீமையிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பயிராக்கப்படும் பல குளிர் தேசத்துக் காய்கறிகள் இங்கே உண்டாகின்றன. அவைகள் உருளைக்கிழங்கு, முட்டைக்கீரை (Cabbage), பச்சைப் பட்டாணி, சிவப்பு முள்ளங்கி, சீமைத்தக்காளி, நூல்கோல் முதலியவைகள். வெப்பம் அதிகமுள்ள சில பள்ளத்தாக்குகளில் கேழ்வரகு, சாமை, கோதுமை முதலியவைகள் பயிரிடப்படுகின்றன.

மலையருவிகள் பல விடங்களில் வேகமாக ஓடியும், நீர்வீழ்ச்சிகளாயுமிருக்கின்றன. அவைகளில் மிகப் பெரிய நீர்வீழ்ச்சிக்குப் **பைக்காரா (Paykara) நீர்வீழ்ச்சி** என்று பெயர். இதன் பிரவாகமானது **மோயாறு** என்னும் நதியாக மாறி வடக்குமுகமாகச் சென்று கடைசியில் பவானியில் கலக்கிறது. பைக்காரா நீர்வீழ்ச்சியிலிருந்துதான் இப்பொழுது மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுத் தென்னிந்தியாவின் பல ஜில்லாக்களுக்கு மின்சார சக்தியை அளிக்கிறது.

நீலகிரி இருப்புப் பாதையில் கூனூருக்குச் சமீபத்தில் அரவங்காடு என்னுமிடத்தில் வெடிமருந்து உற்பத்தி செய்யும் யந்திரசாலை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் இம்மருந்து செய்வதற்குக் குளிர்ச்சியான இடமே ஏற்றதாகும். உதகமண்டலத்திற்குச் சமீபத்தில் **தொட்டபெட்டா** என்னும் சிகரம் இருக்கிறது. நீலகிரிமலைகளுக்குப் பொதுவாகத் தென்னிந்திய வீட்டின் கூரை என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

கோடைக்கால வாசத்திற்கு யோக்கியமாக இருப்பதால் இம்மலைகளின்மேல் அனேக பங்களாக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவி லிருக்கும் கோடைக்கால வாசஸ்தலங்களுள் இவ்விடம் மிகவும் நேர்த்தியானது. இங்கே நிஜாம் அரசர், மைசூர் மகாராஜா முதலிய இந்திய சிற்றரசர்கள், பங்களாக்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

5. **தென்னாட்டு ஜில்லாக்கள்:**—இவைகள் முற்காலம் முதற்கொண்டே சிறப்புற்ற நாடுகளாக விளங்கி வந்திருக்கின்றன. சோழமன்னர்களும், பாண்டிய மன்னர்களும் இந்நாட்டைப் பல

துறைகளிலும் சிறப்புறச் செய்திருக்கிறார்கள். இப்பிரதேசம் தமிழுலகத்திற்குத் திலகம் போன்றது. இவைகளின் பெரும் பாகமானது சமவெளியாகவும் தெற்கேயும், மேற்கேயும் மலைப்பாங்காகவும் இருக்கின்றது. பூமியின் மட்டமானது மேற்கிலிருந்து கிழக்கே சரிந்து வருகின்றது. ஆகையால் இங்கு ஓடும் ஆறுகளெல்லாம் கிழக்கு முகமாகவே செல்லுகின்றன. இவைகளில் முக்கியமானவை காவேரி, வைகை, தாமிரபரணி முதலியவைகளே. இவ்விடங்களில் மிதமான மழை பெய்கிறது. சமுத்திரக் கரையோரத்தில் இருப்பதால் வெப்பம் கொஞ்சம் தணிவாகவே இருக்கிறது. தொன்று தொட்டு நாகரிகத்தில் மிகுந்த நாடுகளானதால் க்ஷேத்திரங்கள், வியாபாரஸ்தலங்கள், துறைமுகங்கள் ஆகிய இவைகள் பலவிடங்களில் இருக்கின்றன. இவ்விடங்களில் முக்கியமாக நன்செய்த் தானியமான நெல்லும், புன்செய்த் தானியங்களான கேழ்வரகு, கம்பு, சோளம் முதலியவைகளும், பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும் விளைகின்றன. திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் கரிசல் மண் வாய்ந்த பிரதேசங்களில் பருத்தி விளைகிறது என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். ஆற்றுப் படுகைகளிலும், மலைகளின் தாழ்வரைகளிலும் வாழை முதலியன பயிராகின்றன.

I. **தஞ்சை ஜில்லா:**— இது காவேரியின் முகத்துவாரத்தில் அமைந்திருக்கிறது. இது ஒரு பெரிய சமவெளியாகும். மாரிக்காலத்தில் நாம் இதைப் பார்த்தால் எங்கும் வெள்ளக்காடாக இருக்கும். இந்த ஜில்லாவில் நெற் சாகுபடிதான் மிகுதி. சில இடங்களில் கரும்பும் பயிரிடப்படுகிறது. கிராமங்களில் தென்னந் தோப்புகள் அதிகம். வயல்களுக்கிடையில் உள்ள கரைகளில் பனை மரங்களும், தென்னை, ஈந்து, கருவேல் முதலிய மரங்களும் உற்பத்தியாகின்றன. புளி, மூங்கில், ஆல், வேல், அரசு முதலிய மரங்களும் எல்லா விடங்களிலும் கிராமங்களைச் சுற்றிப் பயிராகின்றன. இது மிகச் செழிப்பான ஜில்லாவாதலால் ஒரு காலத்தில் இதற்குத் தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம் எனப் பெயர் வழங்கி வந்திருக்கிறது. தஞ்சாவூர்தான் இதற்குத் தலைநகரம்.

மதராஸிலிருந்து தென்னாட்டுக்குச் செல்லும் முதன்மையான இருப்புப் பாதை (Main Line) இவ்வூர் வழியாகச் செல்லுகிறது. இங்கிருந்து ஒரு கிளைப் பாதை கிழக்குச் சமுத்திரக்கரையோரத்திலுள்ள நாகப்பட்டணம் என்னும் துறைமுகத்துக்குச் செல்லுகிறது. காவேரியின் முக்கிய கிளையான கொள்ளிடம் என்பது இந்த ஜில்லாவின் வடக்கெல்லையாகும். **மாயவரம், கும்பகோணம், மன்னார்குடி, நாகப்பட்டணம்** முதலியவைகள் இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணங்கள். நாகப்பட்டணம் துறைமுகத்துக்கு வட இந்தியாவிலிருந்தும், ரங்கூனிலிருந்தும் வியாபாரக் கப்பல்கள் வருகின்றன. இத் துறைமுகத்திலிருந்து



தஞ்சாவூர் கோவில்

இந்தஜில்லாவின் அரிசி இலங்கை முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்

படுகிறது. தஞ்சாவூரில் சோழ அரசர்களும், பிறகு நாயக்கர்களும், மகாராஷ்டிரர்களும் ஆண்டுவந் திருக்கிறார்கள். அவ்வூரைச்சுற்றிக்கோட்டையும், அகழியுமிருக்கின்றன. தஞ்சாவூரில் சோழ நாட்டரசர்களுள் கீர்த்திபெற்ற ராஜ ராஜ சோழரால் தென் னிந்தியாவின் முதற் கோபுரமானது சுமார் 1000 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது.

கும்பகோணம் ஒரு பெரிய க்ஷேத்திரமும், வியாபாரஸ்தலமுமாகும். பன்



கும்பகோணம் மகாமகக்குளம்

னிரண்டு வருஷத்துக்கு ஒருமுறை **மகாமகம்** என்னும் திருவிழாவிற்கு இந்தியாவின் பல பாகங்களி லிருந்து ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள்.



மதுரைக் கோவில்

II. **மதுரை ஜில்லா**:—மதுரை என்பது இதன் தலைநகரமாகும். இது ஒரு பழமையான க்ஷேத்திர மானதால் வெகுகாலமாக இங்கே அதிகஜனங்கள் வசித்து வருகிறார்கள். வெகுகாலத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ்ச் சங்கமொன்று இங்கே இருக்கிறது. இது பாண்டிய அரசர்களது தலைநகரமாகும். இதில் பெயர் பெற்ற சிவன் கோவில் ஒன்றிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் திருப்பரங்குன்றம், அழகர் மலை முதலிய ஸ்தலங்களிருக்கின்றன. சென்னபட்டணத்திற்கு அடுத்த படியாக ஜனத்தொகையில்சிறந்தது. இதில் அனேகபள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் உண்டு. இவ்வூரில் ஸௌராஷ்டிர வகுப்பினர் மிகுதியாக வசிக்கிறார்கள். இவ்வூரில் பட்டு, பருத்தி, துணிநெசவு அதிகம். இவ்வூரில் பார்க்கத்தகுந்த கட்



மஹால்

டடங்களாக, **மீனாட்சியம்மன்கோவில், திருமலை நாயக்கர் மஹால், தெப்பக்குளம்** முதலியன இருக்கின்றன. இங்கே செம்பு, பித்தளை முதலிய வற்றாலாகிய பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. திண்டுக்கல் என்னுமிடத்தில் புகையிலை யந்திரசாலை ஒன்றிருக்கிறது. மேற்கே பழனிமலையும், கோடைகாலவசதிக்கேற்ற கோடைக்கானல் மலையும் இந்த ஜில்லாவில் இருக்கின்றன. மேற்கே நாற்பதுமைலுக் கப்பாலுள்ள போடிநாயக்கனூரிலுள்ள மலைகளில் சிறந்த தேயிலை உற்பத்தியாகிறது.

III இராமநாதபுரம் ஜில்லா:— இது ஒரு வறண்ட பிரதேசம். சமுத்திரக் கரை யோரங்களில் தென்னை மரங்கள் பயிரிடப்படுகின்றன. இந்த ஜில்லாவைச் சேர்ந்த முக்கிய உத்தியோகச் சாலைகள் மதுரையில்தான் அமைக்கப் பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் என்னும் ஊரில் **சேதுபதி மஹா ராஜா** வசித்து வருகிறார். தெற்கே சமுத்திரத்திற்கப்பால் **பாம்பன்** என்னும் தீவு இருக்கிறது.



இராமேச்வரம் கோவில்

அத்தீவில் **ராமேச்வரம்** என்னும் புண்ணிய க்ஷேத்திரமும், **தனுஷ்கோடி** என்னும் புண்ணிய தீர்த்தமும் அமைந்திருக்கின்றன.



தனுஷ்கோடி துறைமுகம்

சென்னை பட்டணத்தி லிருந்து வரும் இருப்புப்பாதை தனுஷ்கோடியில் முடிவடைகிறது. இங்கிருந்து புகைக் கப்பல்களின் வழியாக ஜனங்கள் இலங்கைத்தீவுக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள். இந்த ஜில்லாவில் **ஸ்ரீவில்லிபுத்தூர்** என்பது முக்கிய **விஷ்ணு** ஸ்தலமாகும்.

IV திருநெல்வேலி ஜில்லா:— மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் கோடிப் பகுதியானது இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் இருக்கிறது. அதிலிருந்து பூமி சரிந்து சமுத்திரக் கரையோரம் வரை செல்லுகிறது. **தாமிரபரணி** என்பது இந்த ஜில்லாவிலுள்ள முக்கிய நதியாகும். உயரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளினால், தென் மேற்குப் பருவக்காற்றுக் கொண்டு வரும் மேகக்கூட்டங்கள் தடைசெய்யப் படுவதனாலும், வடகிழக்குப் பருவக்காற்றின் வேகம் இங்கேவரும் பொழுது குறைந்து போவதனாலும், இந்த ஜில்லாவில் அதிகமான மழை பெய்வதில்லை. தாமிரபரணிக்கரை யோரங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கரிசல்மண் நிலங்களில் பருத்தி பயிராகிறது. திருநெல்வேலி என்பது இதன் தலைநகரமாகும். இதன் மத்தியில் தாமிரபரணி நதி ஓடுவதால் இது பாளையங்கோட்டை என்



தூத்துக்குடி துறைமுகம்

றும், திருநெல்வேலி என்றும் இரண்டு பட்டணங்களாகப் பிரிக்கப் படுகிறது. இந்த ஜில்லாவின் தென்பாகத்தில் **தூத்துக்குடி** என்னும் துறைமுகம் இருக்கிறது.

இது நமது இராஜதானியிலுள்ள துறைமுகங்களுள் மிகவும் முக்கியமானதாகும். இதன் வழியாகத்தான் தென்னிந்தியாவுக்கும், இலங்கைக்கும் மிகுதியான வியாபாரப் போக்குவரவு ஏற்பட்டிருக்கிறது. தூத்துக்குடியில் பல பருத்தி யந்திர சாலைகள் இருக்கின்றன. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் மூன்று ஜில்லாக்களில் விளையும் பருத்தி இங்கே அதிகமாக அனுப்பப்படுகிறது.

(6) **மேற்குக் கடற்கரை யோரமான ஜில்லாக்கள்:**—தென்னிந்தியாவின் மற்ற பாகங்களுக்கும், நீலகிரி ஜில்லாவுக்கும் பல வகைகளில் வித்தியாசம் இருப்பதுபோல் இந்த ஜில்லாக்களுக்கும், மற்றபாகங்களுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. இதன் பரப்பு மேற்கிலிருந்து கிழக்கே குறுகலாகவும், தெற்கேயிருந்து வடக்கே மிக நீளமாகவும் இருக்கிறது. இந்த ஜில்லாக்கள் கீழ்ப்பாகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளால் சூழப்பட்டிருக்கின்றன. இம்மலைகளில் மிகுதியான மழை பெய்வதால் அநேக சிற்றாறுகள் மிகுந்த வேகமாக இவைகளிலிருந்து மேற்குச் சமுத்திரத்தை நோக்கி ஓடுகின்றன. சமுத்திரக்கரை யோரத்திலுள்ள சமவெளிகளில் அவைகளின் வேகம் குறைவடைவதால் அவைகளின் வழியாகப் பெரும் படகுகளின் போக்கு வரத்துக்கு அவைகள் சாதகமாகின்றன. சமுத்திரக்கரை யோரங்களில் மணல் மேடுகள் இருக்கின்றன. அவைகளுக்கும், கிழக்கேயுள்ள சமவெளிகளுக்கும் மத்தியில் மலைச்சரிவுகளிலிருந்து வரும் ஜலம் முழுவதும் தேக்கப்பட்டு ஏரிகளாகின்றன. அவைகளுக்கும், சமுத்திரத்துக்கும் இடையிடையே சந்திப்புக்களிருக்கின்றன. அவைகளின் வழியாகச் சமுத்திரஜலம் ஏரிகளுக்குள் பாய்வதும், ஏரிஜலம் சமுத்திரத்தில் பாய்



உப்பங்கழி

வதுமாக இருக்கும். இவ்வேரிகளுக்கு உப்பங்கழிகள் (Lagoons) என்றுபெயர்.

இக்கழிகளின் வழியாகப் படகுகளில் சாமான்களின் போக்குவரத்து நடைபெறுகிறது. இம்மாதிரியாகப் பல கழிகள் நடுவில் கால்வாய்களால் சேர்க்கப்படுகின்றன. ஆகையால் தென் கோடியிலிருந்து வடக்கே மங்களூர் வரையில் படகுகளில் இதன்வழியாகப் பிரயாணம் செய்யலாம். கடற்கரை யோரங்களிலுள்ள மணற் குன்றுகளிலும், மற்ற இடங்களிலும் மிகுதியாகத் தென்னந்தோப்புகள் இருக்கின்றன. தென்னைமரங்கள் மிகுதியா யிருப்பதனால் கொப்பறைகள், தென்னங் கயிறுகள், கயிற்றுப்பாய்கள் முதலியவைகள் இங்கிருந்து பல நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

கடற்கரை யோரத்திலுள்ள சமவெளிகள் மிகவும் செழிப்பானதால் அவைகளில் நெற்பயிர் நன்றாக வளர்கிறது. மலைப்பிரதேசங்களில் காப்பிக் கொட்டை, தேயிலை, ரப்பர் முதலியவை உற்பத்தியாகின்றன. மிளகு, ஏலக்காய், பாக்கு முதலியவைகளும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றன. தேக்கு, கருங்காலி முதலிய மரங்கள் நன்றாக வளர்கின்றதால், இவ்விடத்திலிருந்து தேக்குமரம் பலவிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகையால் இந்நாட்டில் பொதுவாக ஜன நெருக்கம் அதிகம்.

மழையின் பெருக்கத்தாலும், சமுத்திரத்தின் அருகாமையினாலும், காடுகள் அடர்ந்திருப்பதாலும் இங்கு வசிக்கும் ஜனங்களின் வாழ்க்கையும், தொழிலும் அவைகளுக்கேற்றபடி பாதிக்கப்பட்டிருக்கின்றன.

I. **மலையாள ஜில்லா**:—பாலக்காட்டுக் கணவாய் வழியாக மேற்கே சென்றால் மலையாள ஜில்லாவுக்கு வரலாம். இக் கணவாயில் **பாலக்காடு** என்னும் பட்டணமிருக்கிறது. இது சிறந்த வியாபார ஸ்தலம். இவ்விடத்தில் **பொன்னானி**, **பேய்ப்பூர்** என்னும் நதிகள் ஓடுகின்றன. அந்நதிகளின் முகத்துவாரத்திலுள்ள ஊர்களுக்கும் அப்பெயர்களே. இந்த ஜில்லாவிலிருக்கும் முக்கியமான பட்டணங்கள் பெரும்பாலும்சமுத்திரக்கரையோரத்தில் அமைந்திருப்பதால் ஒவ்வொன்றும் ஒரு சிறு துறைமுகமாகிறது. அவைகளில் முக்கியமானவை **கொச்சி, தலைச்சேரி, கள்ளிக்கோட்டை, கண்ணனூர்** முதலியவைகள். இத்துறைமுகங்களிலிருந்து கொப்பறை, கயிறு, எண்ணெய், ரப்பர், மிளகு முதலிய சாமான்களும், காப்பிக்கொட்டை, தேயிலை, தேக்கு மரங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எண்ணெயிலிருந்து, சோப்பும், மெழுகுவர்த்திகளும் செய்கிறார்கள். சமுத்திரத்தில் பிடிக்கப்படும் மீன்களை எருவாக்குகிறார்கள்.

கொச்சி யென்னும் துறைமுகம் ஒரு கழியின் முகத்துவாரத்தில் இருக்கிறது. அது இப்பொழுது மிகவும் நேர்த்தியான துறைமுகமாக்கப்பட்டு அவ்விடத்தில் கப்பல்கள் ஏராளமாக வந்து தங்குகின்றன. கூடிய சீக்கிரத்தில் இது தென்னாட்டிலேயே சிறந்த துறைமுகமாகிவிடும்.

II. **தென்கன்னடம் ஜில்லா**:— இந்த ஜில்லா மலையாளம் ஜில்லாவுக்கு வடக்கேயுள்ளது. இந்த ஜில்லாவின் இயற்கை யமைப்புக்கும், மலையாளம் ஜில்லாவுக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆகையால் இவ்விடத்திலுள்ள ஜனங்களின் வாழ்வும், தொழில்களும் ஒரே மாதிரியாகத்தானிருக்கின்றன.

மங்களூர் என்பது இதன் தலைநகரமாகும். இதுவும் ஒரு துறைமுகப் பட்டணம். இது தென்னிந்திய இருப்புப் பாதையின் முடிவிடமாகும். இத்துறைமுகத்தின் வழியாக மைசூர், குடகு முதலான இடங்களிலிருந்தும், சந்தனக்கட்டை, காப்பிக்கொட்டை முதலியவைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விடத்தில் செய்யப்படும் செங்கற்களும், ஓடுகளும் பலவிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதில் **உடுப்பி** என்பது பெரிய **விஷ்ணு ஸ்தலமாகும்**. உடுப்பி என்பது துவைதமத ஸ்தாபகரான **ஸ்ரீமத்வாசாரியார்** அவர்களது அவதாரஸ்தலமாகும். இதன் பக்கத்தில் **சுப்பிரமணியம்** என்னும் சிவக்ஷேத்திரமும் இருக்கிறது. **மால்பே** என்னுமிடத்தில் மீன்சரக்குகள் தயாரிக்கும் யந்திரசாலையுமிருக்கிறது.

மேற்குச் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள ஜில்லாக்களைக் கூறும்பொழுது அவைகளுக்குத் தெற்கே யமைந்துள்ள **கொச்சி, திருவாங்கூர்** என்னும் ராஜ்யத்தைப்பற்றியும் சிறிதுதெரிந்து கொள்ளுவது அவசியமாகும். கொச்சி ராஜ்யத்துக்குத் தலைநகரம் **எர்ணுகுளம்**. இது முற்போக்கான சுதேச ராஜ்யங்களுள் ஒன்று. இதில் படிப்பு அதிகம். ஜனங்களும் நாகரிகம் வாய்ந்தவர்கள். **திருச்சூர்** என்பது இதில் மற்றொரு முக்கிய பட்டணமாகும்.

திருவாங்கூர்:—இது கொச்சி ராஜ்யத்துக்குத் தெற்கே பிரிந்து கன்னியாகுமரிவரையில் பரவியிருக்கிறது. இதில் கலாசாலைகளும், பல கைத்தொழிற்சாலைகளு மிருக்கின்றன. இதற்குத் **திருவனந்தபுரம்** என்பது தலைநகரமாகும். இவ்விடத்தில் மகாராஜாவின் அரண்மனையும், கல்லூரிகளும், கோவில்களு மிருக்கின்றன. இதைச் சுற்றி ஒரு

கோட்டையுண்டு. **கொல்லம், ஆலப்பிழை** முதலிய ஊர்கள் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள துறைமுகங்களாகும். இவ்விடங்களிலிருந்து, கொப்பறைச் சரக்குகள், தேயிலை முதலியவைகள் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தெற்குக் கோடியில் இவ்விராஜ்யத்தைச் சேர்ந்த **கன்னியாகுமரி முனை** இருக்கிறது. அவ்விடத்தில் கன்னியாகுமரியின் ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலுக்கு ஏராளமான ஜனங்கள் யாத்திரை செய்கிறார்கள். தெற்குச் சமுத்திரக்கரையில் மலைகளில்லை. ஆதலின் இங்கே அதிக மழை பெய்வதில்லை.

திருவாங்கூர் ராஜ்யத்தில் சமீபகாலத்தில் அனேகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுத் தேசமுன்னேற்றத்திற்காகப் பலவழிகளிலும் அவ்வரசாங்கத்தார் உழைத்துவருகிறார்கள். சமீபகாலத்தில் ஆதித்திராவிடர்களிடத்துக் கருணைகொண்டமகாராஜா அவர்களும், திவான் அவர்களும், எல்லாக்கோயில்களிலும் அச்சாதியினர் தடையின்றிப் பிரவேசிக்கலாம் என்று உத்தரவளித்ததைப் பலரும் கொண்டாடுகின்றனர். திருவாங்கூரை மற்ற ராஜ்யங்களும் பின் பற்றக்கூடும். திருவாங்கூரில் சர்வகலாசாலையொன்று ஏற்படுத்துவதற்கு முயற்சி நடந்து வருகிறது.

பயிற்சி.

1. இராஜதானிப்படம் ஒன்று வரைந்து அதிலுள்ள ஜில்லாக்களைக் குறிப்பிடுக.
2. மலைநாட்டு ஜில்லாக்கள் யாவை ?
3. உள்நாட்டு ஜில்லாக்கள் யாவை ?
4. சமுத்திரக்கரையோரங்களிலுள்ள ஜில்லாக்கள் எவை ?
5. திருவாங்கூர் அரசர் சமீப காலத்தில் செய்த பெருஞ் சீர்திருத்தம் எது ?

அத்தியாயம் 17.

சுற்றுப்பிரயாணம்.

பிள்ளைகளே ! ஒரு தேசத்தின் பூகோள விவரங்களை நாம் அறிய வேண்டுமானால், அதிலுள்ள பல விடங்களுக்குச் சென்று ஆங்காங்குக்காணும் காட்சிகளை நேரில் கண்டறியவேண்டும். பின்பே அத்தேசத்தின் விஷயங்கள் நமக்கு நன்றாகத் தெரியவரும். எல்லா விடங்களுக்கும் செல்வது முடியாதாகையால் அவைகளைச் சித்திரங்கள் மூலமாகவும், படங்கள் மூலமாகவும் அறிவது இன்றியமையாததாகும். நமது ராஜதானி பூமியில் ஒரு சிறு பூபாகமாகையால் அதை நாம் சுற்றிப்பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். தற்காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதற்கு வாகனவசதிகள் சுலபமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியால் அவைகளின் மூலம் செல்வதுதான் மேலானதாகும். ஒவ்வோரிடத்துக்கும் நடந்து போவதென்பது எல்லோராலும் இயலாத காரியம். நமது ராஜதானியில் இருப்புப்பாதைகள் முக்கியமான எல்லா இடங்களிலும் செல்வதாலும், ஆங்காங்குள்ள முக்கியமான ஸ்டேஷன்களில் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதாலும் நாம் இருப்புப்பாதையின் வழியாகச் செல்வது சுலபமாயிருக்கிறது.

ஆகையால் நாம் இம்மாகாணத்தின் தலைநகராகிய சென்னபட்டணத்திலிருந்து புறப்படுவதாக வைத்துக்கொள்வோம். அங்கே முக்கியமான இரண்டு ரயில்வேஸ்டேஷன்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று எழும்பூர், மற்றொன்று சென்ட்ரல் ஸ்டேஷன். எழும்பூர் ஸ்டேஷன் தென்னிந்திய இருப்புப் பாதையைச் சேர்ந்தது. அங்கிருந்து தென்னிந்தியா முழுவதும் பிரயாணம் செய்யலாம். சென்ட்ரல் ஸ்டேஷனி

சென்னை மாகாணம்
இருப்புப்பாதைகள்.
கல்கத்தாவுக்கு
விஜயநகரம்
வால்டேர்
விசாகபட்டணம்
இராஜமகேந்திர புரம்
சாமலகோட்டை
ஹைதராபாத்துக்கு
பெத்தாபுரம்
காக்கிநாடா
பெஜவாடா
அமலாபுரம்
மசூலிப்பட்டணம்
ரேப்பல்லே
ரேய்ச்சூருக்கு
ஒங்கோல்
வங்காளக்
குடாக்கடல்
ஹூப்ளிக்கு
பெல்லாரி
குடப்பை
ஹரிஹர்
தர்மாவரம்
நெல்லூர்
சித்தலதுருக்
சந்திரகிரி
சென்னை
மங்களூர்
பெங்களூர்
அரக்கோணம்
வேலூர்
செங்கல்பட்டு
ஹோசூர்
ஜோலார்பேட்டை
திருப்பத்தூர்
மைசூர்
கண்ணநூர்
மோரப்பூர்
பாண்டிச்சேரி
விழுப்புரம்
கடலூர்
மாயவரம்
காரைக்கால்
நாகூர்
ஈரோடு
விருத்தாசலம்
போத்தனூர்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
நாகபட்டணம்
திருவாரூர்
புதுக்கோட்டை
பழனி
திண்டுக்கல்
அறந்தாங்கி
எர்ணாகுளம்
கொச்சி
மதுரை
அரபிக்
கடல்
விருதுநகர்
மானாமதுரை
மண்டபம்
பாம்பன்
இராமேஸ்வரம்
இராமநாதபுரம்
தனுஷ்கோடி
கொல்லம்
தென்காசி
மணியாச்சி
தூத்துக்குடி
திருவனந்தபுரம்
திருநெல்வேலி
திருச்செந்தூர்
கன்னியாகுமரிமுனை
இலங்கை
இந்து மகா சமுத்திரம்
M. & S. M. இருப்புப்பாதை
S. I. R. „

லிருந்து வடக்கு வடமேற்கு ஆகிய இப் பிரதேசங்களுக்கு எளிதிற் செல்லலாம்.



எழும்பூர் ஸ்டேஷன்

எழும்பூரிலிருந்து நாம் புறப்படுவோம். இங்கிருந்து முக்கியமான வண்டிகள் பெரும்பாலும் இராக்காலங்களிலேயே செல்லுகின்றன. அவைகளில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும், பகலில் செல்லும் வண்டிகளிலேயே பிரயாணம் செய்வது மேலாகும். எவ்வாறெனில், நம் நோக்கம் எல்லாவற்றையும் பார்த்தறியவேண்டுமென்பதனலேயாம். மதராஸின் படத்தைப் பார்த்தால் எழும்பூர் எப்புறத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். கடற்கரையோரத்தில் செண்ட் ஜார்ஜ் கோட்டை இருப்பதாக முன்னமே தெரிந்துகொண்டிருக்கிறோம். அங்கிருந்து ஹைகோர்ட்டு இருக்குமிடம் வந்தால் அதனெதிரில் டிராம் வண்டிகள், மோட்டார் வண்டிகள், ரிக்ஷா வண்டிகள், குதிரை வண்டிகள் முதலிய பல வண்டிகள் இருப்பதைக் காணலாம்.

டிராம் வண்டியில் ஏறிக்கொண்டால் அங்கிருந்து பிராட்வே, பச்சையப்பன் காலேஜ், பூக்கடை, பாய்க்கடை, பிரம்புச் சாமான்கள் விற்கும் கடை ஆகிய இவைகளைக் கடந்து ஜெனரல் ஆஸ்பத்திரி, சென்ட்ரல் ஸ்டேஷன், மூர் மார்க்கெட் இவைகளின் வழியாக மேற்கே சென்று கடைசியாக எழும்பூரை வந்தடையலாம்.

இந்தஸ்டேஷன் எவ்வளவு நேர்த்தியாகவும், பெரிதாகவும் கட்டப்பட்டிருக்கிற தென்பதைக் கவனியுங்கள். டிக்கட்டு வாங்கிக்கொண்டு ஸ்டேஷனுக்குள் சென்று பார்த்தால் ஏராளமான புகைவண்டித் தொடர்கள் கண்ணுக்குப் புலப்படும். சில வண்டிகள் புகையின்றி ஓடுகின்றன. அவைகளுக்குத் தனியிடங்களும், தனிப்பாதைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வண்டிகள் மின்சாரசக்தியினல் ஓட்டப்படுகின்றன. அவைகள் ஐந்து நிமிஷங்களுக்கு ஒருமுறை வந்துகொண்டும், போய்க்கொண்டு மிருக்கும் காட்சியைப் பாருங்கள். போவதற்கும், வருவதற்கும் வெவ்வேறு பாதைகள் இருக்கின்றன. புகைவண்டிகளுக்கும், இவைகளுக்கும் என்ன வேறுபாடறிகிறீர்கள்? அவைகளை உற்று நோக்கித் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆனல் நாம் இப்பொழுது ஏறப்புகுவது புகைவண்டிதான். அதிலேறிக் கொண்டு தெற்கு முகமாகச் செல்லுகிறோம். போகும் வழியில் இடையிடையே பல ஸ்டேஷன்களிருக்கின்றன. சென்



கிண்டி எலெக்ட்ரிக் ரயில்வே ஸ்டேஷன்

னபட்டணம்முதல் **தாம்பரம்** ஸ்டேஷன் வரையில் மூன்று இருப்புப்பாதைகள் இருப்பதைக் கவனியுங்கள். இவைகளில் ஒன்று புகைவண்டிகளால் உபயோகப் படுத்தப்படுகிறது. மற்ற

இரண்டும் மின்சார வண்டிகளால் உபயோகப்படுத்தப்படுகின்றன. தாம்பரம் ஸ்டேஷன் வருவதற்குள் அநேக மின்சாரவண்டிகளை எதிரில் காண்கிறோம். அவைகளில் ஜனங்கள் போவதும், வருவதுமாயிருக்கிறார்கள். இவ்வாறான சீக்கிரப் போக்குவரத்தால், சென்ன பட்டணத்தில் ஜனநெருக்கம் கொஞ்சம் குறைக்கப்பட்டு, அதில் இருக்கும் உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் தாம்பரம் ஸ்டேஷன்வரையில் வெகுதூரத்திலுள்ள பல விடங்களிலும் வசிக்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் சௌகரியம் ஏற்படுவதுடன், சென்னையில் ஜனநெருக்கமும் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. இது நமக்குத் தற்காலத்தில் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியினாலும், அவ்வாராய்ச்சி நிபுணர்களின் சாமர்த்தியத்தாலும் அளிக்கப்பட்ட நவீன சௌகரியங்களில் ஒன்றாகும். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது சாஸ்திர ஆராய்ச்சியின் பெருமையேயாம்.

தாம்பரம் ஸ்டேஷனை விட்டுத் தெற்கே சென்றால் வழியில் பலகுன்றுகளைப் பார்க்கிறோம். பிறகு பெரிய ஏரியைக் காண்கிறோம். இவ்வேரியிலிருந்து பல கால்வாய்களின் வழியாய் வயல்களுக்கு ஜலம் பாய்வதைப் பாருங்கள். இவ்வேரியின் அருகாமையிலிருக்கும் செங்கற்பட்டு ரயில்வே சந்திப்புக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்தில் ஜனங்கள் வண்டித்தொடர் மாறிக் காஞ்சிபுரத்துக்குப் போக, வேறு வண்டித்தொடரில் ஏறுவதைப் பாருங்கள். பலர் ஸ்டேஷனில் இறங்கி மோட்டார் வண்டிகளிலேறிப் பல இடங்களுக்குச் செல்வதைக் கண்டீர்களா?

இங்கிருந்து நாம் **மகாபலிபுரம்**, **திருக்கழுக்குன்றம்** முதலிய இடங்களுக்கும் செல்லக்கூடும். இங்கிருந்து மறுபடியும் தெற்கே சென்றால் **மதுராந்தகம்**, **திண்டிவனம்** முதலிய இடங்களைக் கடந்து விழுப்புரம் சந்திப்புக்கு வருகிறோம். வழியில் இருபக்கங்களிலும் வயல்களும், தோட்டங்களும் இருக்கின்றன. தூரத்தில் பல மலைகள் தென்படுகின்றன. பல விடங்களில் குடியானவர்கள் ஆங்காங்கே கிணறுகளிலிருந்து ஏற்றங்களின் உதவியால் ஜலம் பாய்ச்சுவதைப் பாருங்கள்.



திருக்கழுக்குன்றம்

விழுப்புரம் சந்திப்பிலிருந்து வடக்கே திருக்கோவலூர், திருவண்ணாமலை முதலிய இடங்களுக்குச் செல்லுகிறது. இவ்விருப்புப்பாதை கடைசியாகக் காட்பாடி சந்திப்புடன் கூடுகிறது. மற்றோர் இருப்புப்பாதை கிழக்கு முகமாகப் பிரஞ்சு இலாகாவான புதுச்சேரிக்குச் செல்லுகிறது. மூன்றாவது இருப்புப் பாதையொன்று மேற்காக விருத்தாசலத்தின் குறுக்குவழியாய்த் திருச்சிக்குச் செல்லுகிறது.

இங்கிருந்து தெற்கே செல்வோம். கொஞ்ச தூரத்திற்கப்பால் இருப்புப் பாதையானது தென்பெண்ணை யாற்றைக் கடந்து செல்கிறதைப் பாருங்கள். அங்கிருந்து **கூடலூருக்கு** வருகிறோம். இது ஒரு துறைமுகம். வழியில் கரும்பு, வேர்க்கடலை முதலியவைகள் சாகுபடி செய்யப்படுவதைப் பார்த்தீர்களா? பலவிடங்களில் கிணற்றுநீரைக் குடி

யானவர்கள் இவ்வயல்களுக்கு இறைக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் ஏற்றத்திற்குக் **கபிலே ஏற்றம்** என்று பெயர். அவைகள் எப்படி உபயோகப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். இவ்விடங்களில் மலைகள் இல்லை. கூடலூர் வருவதற்கு முன் நெல்லிக்குப்பம் ஸ்டேஷனில் இறங்கினால் அவ்விடத்திலுள்ள பேரி அண்டு கம்பெனியார்களின் சர்க்கரை யந்திரசாலையைப் பார்க்கலாம்.

கூடலூரைத்தாண்டித் தெற்கே சென்றால் இருபுறங்களிலும் அமிதமாகச் சவுக்குத்தோப்புகளிருக்கின்றன. **கேப்பர்குவாரி** என்னும் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் பல விடங்களில் கல்தச்சர்கள் பாறைகளைச் செதுக்கி யெடுப்பதைக் கவனியுங்கள். தெற்கே செல்லும்பொழுது **கிள்ளை** என்னும் ஸ்டேஷனுக்கு அருகே ஓடும் நதியைப் பாருங்கள். புகைவண்டியிலிருந்தே பார்த்தாலும் இந்த ஆறு சமுத்திரத்தில் கலப்பது நன்றாகத்தெரிகிறது. இந்த ஆறு எது என்று கூறுங்கள்? பிறகு தெற்கிலுள்ள சிதம்பரம் ஸ்டேஷனுக்கு வருகிறோம். இது மிகவும் பெரிய சிவஸ்தலம். இவ்விடத்தில் சர்வகலாசாலை ஒன்றிருக்கிறது என்பது உங்களுக்கு முன்னமே கூறப்பட்டுள்ளது.

இதற்குத் தெற்கே காவேரியின் வடகிளையாகிய கொள்ளிடப் பாலத்தின் வழியாகப் புகைவண்டி செல்வதைப் பாருங்கள். இதற்கடுத்தாற்போல் நாம் அடையும் ரயில்வே சந்திப்பு **மாயவரம்** என்னும் ஸ்டேஷனாகும். இது ஒரு புண்ணியஸ்தலம்.

இங்கிருந்து கிளைப்பாதை தெற்கு முகமாகத் திருவாரூரின் வழியாய்த் திருத்துறைப்பூண்டி, வேதாரணியம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி முதலான இடங்களுக்குச் செல்லுகிறது.

மற்றொரு கிளைப்பாதை கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகிறது. இங்கிருந்து தென்மேற்காகச் சென்றால் தஞ்சாவூர் ஜங்ஷனுக்கு வரலாம். வழியில் இருப்புப்பாதையானது அளவுகடந்த நன்செய் வயல்களின் நடுவில் செல்வதைக் கவனியுங்கள். மாரிக்காலத்தில் இவ்விடம் பிரயாணம் செய்தால் கண்ணுக்கெட்டின வரையில் பசுமையான வயல்களும், செழிப்பான கிராமங்களும், அடர்ந்த தென்னஞ் சோலைகளும் மிகுதியாகப் புலப்படும். வழியில் பல ஸ்டேஷன்களில் வியாபாரத்துக்காக நெல்மூட்டைகளும், தேங்காய்க் குவியல்களும் அடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பண்டாரவாடை, அய்யம்பேட்டை முதலிய ஸ்டேஷன்களில் வெற்றிலைக்கட்டுகள் ரயிலில் ஏற்றப்படுவதைக் கவனியுங்கள். இப்பிரதேசத்திற்குத்தான் **சோழவளநாடு** என்று பெயர்.

பிறகு தஞ்சாவூர் ஜங்ஷனிலிருந்து கிழக்குமுகமாகக் கிளைப்பாதை நாகப்பட்டினம் துறைமுகத்துக்குச் செல்லு



நாகூர் பள்ளிவாசல்

கிறது. இதன் சமீபத்தில் நாகூர்பள்ளிவாசல் தெரிகிறது. இப்பள்ளிவாசலுக்கு ஏராளமான ஜனங்கள் நாள் தோறும் வந்து போகிறார்கள். மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால் திருச்சிராப்பள்ளிக்குவந்துசேருவோம். வழி

யிலேயே வெகுதூரத்திலிருந்து திருச்சி மலைக்கோட்டையும், கோவிலும் தோன்றுகின்றன. இதற்கருகாமையிலுள்ள **பொன்மலை** என்னும் ஸ்டேஷனுக்கு வரும்பொழுது தெற்கே உயர்ந்த சுவர்களால் சூழப்பட்ட பல கட்டடங்களைக் கவனியுங்கள் இவைகள்தாம் தென்னிந்திய இருப்புப்பாதையின் தொழிற்சாலையாகும்.

திருச்சி ஜங்ஷனிலிருந்து காவேரிக் கரையோரமாக மேற்கே ஈரோடுவரையில் இருப்புப்பாதை யொன்று செல்கிறது. தெற்கில் குறுக்காகப் புதுக்கோட்டை, காரைக்குடி வழியாக இருப்புப்பாதை யொன்று சென்று மானமதுரை ஸ்டேஷனோடு சேர்க்கப்படுகிறது. மற்றொன்று தென்மேற்காகத் திண்டுக்கல், கோடைக்கானல் வழியாக மதுரைபோய்ச் சேருகிறது. திருச்சிக்குத்தெற்கே பிரயாணம் செய்யும் பொழுது இருபுறங்களிலுமுள்ள இயற்கையமைப்பைக் கவனித்துப் பாருங்கள். இது கொஞ்சம் மேட்டுப் பாங்கான பூமியாய் இருக்கிறது. நன்செய் வயல்கள் அவ்வளவாக இல்லை. அடர்ந்த சிறு புதர்கள் இரு பக்கங்களிலும் பலவிடங்களில் காணப் படுகின்றன. **கோடைக்கானல்** ஸ்டேஷனுக்கு அருகாமையில் பல மலைகள் இருப்பதைப் பாருங்கள். இங்கிருந்து மேற்குப்புறம் சாலை வழியாகச் சென்றால் கோடைக்கானல் மலைக்குப் போகலாம். திண்டுக்கல்,கோடைக்கானல் முதலான ஸ்டேஷன்களில் மலைவாழைப்பழங்கள் கூடைகூடையாக வியாபாரம் செய்யப்படுவதைக் கவனியுங்கள். இப்பழங்கள் மேற்கேயுள்ள பழனிமலைச் சாரல்களில் உண்டாகின்றன. இவைகள் வடக்கே சென்ன பட்டணம் வரையிலும் அனுப்பப் படுகின்றன. திண்டுக்கல்லிலிருந்து ஒருகிளைப்பாதை பழனியின் வழியாக வடக்கே பொள்ளாச்சிக்குச் சென்று அங்கிருந்து போத்தனூர்ஜங்ஷனுக்குப் போய்ச் சேருகிறது.

மதுரையிலிருந்து ஒரு இருப்புப் பாதை தென் கிழக்காக ராமேச்வரம் வரையில் செல்லுகிறது. வழியிலுள்ள பிரதேசங்கள் வறண்டு ஜலக்குறைவினால் செழிப்பற்றிருப்பதைப் பாருங்கள். மதுரையிலிருந்து தெற்கு முகமாகச் செல்லும் இருப்புப்பாதை **மணியாச்சி** ஜங்ஷனுக்குப் போய்ச் சேருகிறது. அங்கிருந்து ஒரு கிளைப்பாதை கிழக்கு முகமாகத் தூத்துக்குடி செல்வதைப் பாருங்கள். தென்மேற்காகப் போகும் இருப்புப்பாதை வழியாகச் சென்றால் திருநெல்வேலிக்கு வந்து சேருகிறோம். இங்கிருந்து கிழக்கே முப்பத்தைந்து மைலுக்கப்பால் சமுத்திரக்கரை யோர



திருச்செந்தூர் கோவில்

மாகத் திருச்செந்தூர் என்னும் சுப்பிரமணிய ஸ்தலம் ஒன்றிருக்கிறது. மதுரைக்கும், திருநெல்வேலிக்கும் நடுவேயுள்ள இடத்தை நன்றாகப்பார்த்தீர்களா? அவ்விடத்தில் பல விடங்களில் பருத்தி விளைகிறது. பருத்திச்சாமான்கள் முக்கியமாக ஏற்றுமதி செய்யப் படும் இடம் **விருதுநகராகும்**.

திருநெல்வேலியிலிருந்து மேற்கே சென்றால் அனேக பெரிய மலைகள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. திருநெல்வேலிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசங்கள் தாமிரபர்ணியினால் செழிப்பாக்கப்பட்டிருக்கின்றன. மேற்கே அம்பாசமுத்திரம் என்னும் ஸ்டேஷனுக்கு



பாபநாசம் மில்

அருகாமையில் பருத்தி யந்திரசாலை இருக்கிறது. அங்கிருந்து மேற்கே சென்றால் தென்காசி யென்னும் ஸ்டேஷனுக்கு வருகிறோம். அதிலிருந்து திருக்குற்றாலம்



திருக்குற்றாலம் நீர்வீழ்ச்சி

மலைகளுக்குச் செல்லலாம். அவ்விடத்தில் சித்திராநதியின் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்நீர் வீழ்ச்சியில் நீராடிச் சுகம் பெறுவதற்குக் கோடைகாலத்தில் ஏராளமான ஜனங்கள் வருவார்கள். மேற்கே செங்கோட்டை ஸ்டேஷனிலிருந்து வெகுதூரம் வரையில் மலைகளடர்ந்த பிரதேசமாயிருப்பதை உற்று நோக்குங்கள். இருப்புப்பாதை மலையில் குடையப்பட்ட குகைகளின் வழியாகச் செல்லுகிறது. அங்கிருந்து மேற்கே சென்றால் மேற்குச் சமுத்திரக்கரையோரத்திலிருக்கும் கொல்லத்துக்கு வந்து சேருகிறோம். வழியிலுள்ள மலைப்பிரதேசங்கள் எவ்வளவு உயரமுள்ளவைகளாகவும், நேர்த்தியுள்ளவைகளாகவும் இருக்கின்றன என்பதைக் கவனித்தீர்களா? இம் மலைகளின் மேல் ஏறிப் பார்த்தால் அடர்ந்த பெரிய காடுகளிருக்கின்றன. அவைகளில் ஏலக்காய், சாதிக்காய் முதலிய வாசனைச் சரக்குகள் உற்பத்தியாகின்றன. ஆகையால் தான் இவ்விடத்திலுள்ள மலைகளுக்கு ஏலக்காய் மலை என்று பெயர். இதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். இங்கே புலி, யானை, கரடி முதலிய வன விலங்குகள் வசிக்கின்றன.

இங்கிருந்து தெற்கே சென்றால் திருவாங்கூர் ராஜ்யத்தின் தலைநகரான திருவனந்தபுரத்துக்கு வரலாம். அங்கிருந்து வடக்கு முகமாகச் சமுத்திரக் கரையோரத்தில் செல்வோம். சமுத்திரத்தில் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலங்களில் அதிகக் கொந்தளிப்பினால் அலைகள் எழுந்து கரையில் அடிக்கின்றன. இங்கிருந்து மேற்கே சுமார் நூறு மைல் தூரம் சமுத்திரத்திற் சென்று லட்சத்தீவுகள் இருக்குமிடத்தைக் கவனிப்போம். ஆயிரக்கணக்கான சிறுசிறு தீவுகள் இவ்விடத்தில் சிதறிக்கிடக்கின்றமையால் இவைகளுக்கு லட்சத்தீவுகள் என்று பெயர். இவைகள் பவளத்தீவுகளாகும். இவைகளில் வசிக்கும் ஜனங்கள் மீன் பிடித்துக்கொண்டும், தென்னை மரச்சரக்குக்களைத் தயாரித்துக்கொண்டும், ஆமையோடுகள் முதலிய சாமான்களை விற்று, அவைகளைக்கொண்டு

உணவுப்பொருள்கள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களாகிறார்கள். இவர்கள் நாகரிக மற்ற ஜாதியினர்கள்.

இத்தீவுகளிலிருந்து திரும்பி மறுபடியும் சமுத்திரக்கரை யோரம் வருவோம். இவ்விடங்களிலிருந்து வடக்கே பிரயாணம் செய்யும்பொழுது வழிகளிலிருக்கும் பல உப்பங்கழிகளைக் கவனியுங்கள். இவைகளில் ஏராளமாகப் படகுகள் கொப்பறைச் சரக்கு, கயிறு, கயிற்றுப்பாய்கள், காப்பிக்கொட்டை முதலிய தானியங்களை ஏற்றிக்கொண்டு வியாபாரத்துக்குச் செல்லுகின்றன. வடக்கே கள்ளிக்கோட்டை என்னும் துறைமுகத்துக்கு வந்து சேருகிறோம். அங்கிருந்து இருப்புப்பாதையொன்று வடக்கே செல்வதைக் கவனியுங்கள். இது சமுத்திரக்கரை யோரமாகவே செல்வதால் நாம் படகிலேயே வடக்கே செல்லுவோம். வழியில் தலைச்சேரி, கண்ணனூர் முதலிய துறைமுகங்களைக் கடந்து கடைசியாக மங்களூருக்கு வருகிறோம். இவ்விடத்தில் கப்பலைவிட்டிறங்குவோம்.

நாம் வந்த கப்பல் வடக்குமுகமாகச் சென்று பம்பாய், கராச்சி என்னும் பெரிய துறைமுகங்களுக்குப் போய்த் திரும்பும். நாம் மங்களூரில் மறுபடியும் புகைவண்டியில் ஏறுவோம். அங்கிருந்து தெற்கே கள்ளிக்கோட்டை வரையில் வந்து பிறகு, தென்கிழக்காக ஷோரனூர் ஜங்ஷன் வந்து சேருகிறோம். வழிகளில் உயர்ந்த மலைகளிருக்கின்றன. மலைகளிலிருந்து சமுத்திரக்கரை வரையிலுள்ள சமவெளிப்பிரதேசம் மிகக் குறுகலாயிருக்கிறது. இங்கே பல சிற்றாறுகள் ஓடுகின்றன. அவைகளின் கரைகளில் நன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மலைகளிலிருந்து வரும் அருவிகள் சிறியனவாயிருந்த போதிலும் மிகவேகமாக ஓடிச் சமுத்திரத்தில் கலக்கின்றன. இவ்விடத்திலுள்ள ஜனங்களின் நடையுடை பாவனைகளுக்கும், கிழக்குப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் நடையுடைபாவனைகளுக்கும் வித்தியாசமிருப்பதைக் கவனியுங்கள். இவ்விடத்தில் மழை அதிகமாகப் பெய்வதால் உஷ்ணம் தணிந்திருக்கிறது. ஜனங்களின் வாழ்வும், தொழிலும் அதற்குத் தகுந்தாற்போல் மாறுபட்டிருக்கின்றன. மலையாளிகள் அங்குள்ள ஜலவசதியினால் அடிக்கடி நீரில் மூழ்கிச் சரீரத்தை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆதலின் அவர்களை நீர்வாழும் பிராணிகள் என்று வேடிக்கையாகக் கூறுவதுமுண்டு.

கிழக்கே பாலக்காட்டுக் கணவாய் வழியாகச்சென்று போத்தனூர் ஸ்டேஷனுக்கு வருகிறோம். அங்கிருந்து வடக்கே கோயம்புத்தூர்வழியாக உதகமண்டலத்திற்கு இருப்புப்பாதை செல்லுகிறதென்று முன்னமே தெரிந்து கொண்டிருக்கிறோம். போத்தனூரிலிருந்து சற்று வடமேற்காகச் சென்றால் ஈரோடுக்கு வரலாம். இவ்விடத்தில் இருப்புப்பாதை காவேரியைக் கடப்பதைப் பாருங்கள். இங்கிருந்து புறப்பட்டுச் சேலத்துக்கு வருவோம். இங்கே நாலாபக்கங்களிலும் பல மலைகளிருப்பதைக் கவனியுங்கள். சேலத்திலிருந்து ஒரு கிளைப்பாதை வழியாக மேட்டூர் அணைக்கட்டுக்குச் செல்வோம். அணைக்கட்டின் அழகையும், கம்பீரமான தோற்றத்தையும் நோக்குங்கள். இவ்வணைக்கட்டு உலகத்திலுள்ள சிறந்த அணைக்கட்டுகளில் ஒன்றாகும். காவேரி நதியிலிருந்து ஒரு கால்வாய் அகழ்ந்து இவ்வணைக்கட்டினால் சூழப்பட்ட ஏரியில் ஜலம் தேக்கும் அழகைப் பாருங்கள். இதற்கு மூன்று பக்கங்களிலும் மலைகளினாலேற்பட்ட இயற்கை அணைகளினால் இப்பெருங் காரியம் நிறைவேற்றப்பட்டது என்பதைக் கவனியுங்கள்.

ஜலம், வேண்டும் காலத்தில் பல கணவாய்களின் வழியாய்க் காவேரியில்

விடப்படுகிறது. இக்காட்சியைக்கண்டு திரும்பவும் சேலம் செல்வோம். அங்கிருந்து வடக்கே சென்று **ஜோலார்ப்பேட்டை** ஜங்ஷனுக்கு வந்து சேருகிறோம். நடுவில் ஒரு கிளைப்பாதையின் வழியாக **ஹோசூருக்குப்** போகலாம். திருப்பூர் என்னுமிடத்தில் பருத்தி நெசவு அதிகமாகச் செய்யப்படுகிறது.

ஜோலார்ப்பேட்டையிலிருந்து வடகிழக்காகச் சென்றால் **அரக்கோணம்** ஜங்ஷனுக்கு வந்து சேரலாம். வழியில் பல விடங்களில் மலைகள் சூழ்ந்திருப்பதைக் கவனியுங்கள். ஜோலார்ப்பேட்டையிலிருந்து வடமேற்காகச் சென்றால் **பெங்களூருக்குப்** போகலாம். நடுவழியில் **பௌரங்கிப்பேட்டை** வழியாகக் **கோலார்** தங்கச்சுரங்கத்துக்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. தங்கச்சுரங்கங்களின் யந்திரசாலையைக் கவனியுங்கள். பூமியிலிருந்து பெரும் பெரும் கற்பாறைகள் வெட்டப்பட்டு அவைகள், பெரிய உரல் போன்ற பாத்திரங்களில் போடப்படுகின்றன. பிறகு அவைகளைப் பெரிய பல இரும்புலக்கைகள் இடித்துப் பொடி செய்கின்றன. இப்பொடியின் வழியாக ஜலத்தைப் பாய்ச்சிச் சுத்தப்படுத்தித் தங்கப்பொடிகளைப் பிரித்தெடுக்கிறார்கள். பின்னரே அதை உருக்கிக் கட்டியாக வார்க்கிறார்கள். யந்திரசாலையில் உண்டாகும் சத்தமானது காதைத் துளைக்கிறது. இங்கிருந்து திரும்பவும் அரக்கோணம் வழியாக நம் ராஜதானியின் தலை நகரான **மதராஸ்** வந்து சேருகிறோம்.

அத்தியாயம் 18.

சுற்றுப்பிரயாணத் தொடர்ச்சி.

சிறுவர்களே! நாமிதுவரையில் மதராஸுக்குத் தெற்கேயுள்ள ஜில்லாக்களையும், மேற்குக் கடற்கரையிலுள்ள ஜில்லாக்களையும் நமது சுற்றுப் பிரயாணத்தினால் ஒருவாறு அறிந்துகொண்டோம். இப்பொழுது வடமேற்கிலுள்ள ஜில்லாக்களைப் பார்த்து வருவோம். மறுபடியும் சென்ட்ரல் ஸ்டேஷனில் புகைவண்டியிலேறிச் செல்வோம். முதன் முதலில் மேற்காகச் சுமார் ஐம்பது மைல் தூரம் சென்று அரக்கோணம் ஜங்ஷனுக்கு மறுபடியும் வந்து சேருகிறோம். வழியில் இருப்புப்பாதைகள் இரட்டை வரிசைகளாக இருப்பதைக் கவனித்தீர்களா? அவைகளில் ஒரு வரிசை மதராஸிலிருந்து மேற்கே போவதற்கும், மற்றொன்று மதராஸுக்குத் திரும்பி வருவதற்கும் உபயோகப் படுத்தப்படுகிறது.

அரக்கோணம் ஜங்ஷன் வந்ததும், ரயில் வடமேற்கு முகமாகத் திரும்புகிறது. வழியில் பல மலைகளிருக்கின்றன. இவ்விருப்புப் பாதை பம்பாய்க்குச் செல்லும் பாதையாகும். செல்லச் செல்ல பூமி மலைகளினால் உயர்ந்து வருகிறது. இருப்புப்பாதை மலைகளின் இடையிடையே யுள்ள இடைவெளிகளின் வழியாகத் தட்சிண பீடபூமியை நோக்கிச் செல்லுகிறது. ரேணுகுண்டா என்னும் சந்திப்பில், பல கிளைப்பாதைகள் செல்வதைப் பாருங்கள். ஒன்று தென்மேற்காகப் **பாக்காலா** என்னும் ஜங்ஷன்வரையிற் சென்று, அங்கிருந்து இரண்டு கிளைகள் தெற்கிலும், வடமேற்கிலும் செல்லுகின்றன. இவ்விருப்புப் பாதை குறுகிய தண்டவாளங்களால் (Meter Gauge) ஆகின்றது. இப்பாதையின் வழியாகச் சென்றாலும், **தர்மாவரம்**, **அனந்தப்பூர்** இவைகளைக் கடந்து கடைசியில் **குண்டக்கல்** என்னும் ஜங்ஷனுக்கு வந்து சேரலாம். நாம் இப்பாதையின் வழியாகச் செல்லாமல் அகன்ற இருப்புப்பாதையின் (Broad Gauge) வழியாகவே வடமேற்கேயுள்ள கடப்பைக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்திலுள்ள பூமியின் வித்தியாசத்தைப் பாருங்கள். எங்கே பார்த்தாலும் மலைப்பாறைகளால் மூடப்பட்டிருக்கிறது. மத்தியி

ளுள்ள சமவெளிகளில் பருத்தி முதலிய புன்செய்ப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

கடப்பை ஸ்டேஷனைக் கவனித்துப் பாருங்கள். இங்கே பெருங்கற்பலகைகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இங்கிருந்து பல ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கிருந்து மறுபடியும் வடமேற்காகக் குண்டக்கல் வரையில் செல்வோம். வழியில் **வட பெண்ணையைக்** கடந்து இங்கேவருகிறோம். இப்பிரதேசங்களிலெல்லாம்ஆறுகளின் குறைவாலும், மழையின் குறைவாலும் பூமி வறண்டிருக்கிறது.

குண்டக்கல்லிலிருந்து வடக்கே சென்றால் **துங்கபத்திரையைத்** தாண்டி நிஜாம் ராஜ்யத்துக்குட் செல்லலாம். குண்டக்கல்லிலிருந்து கிழக்கிலும், மேற்கிலும் சிறுவண்டிகள் செல்லுகின்றன. ஒன்று பல்லாரியைக்கடந்து பம்பாய் ராஜதானியிலுள்ள ஹூப்ளி என்னுமிடத்தின் வழியாகப் போர்த்துகீசிய அரசாங்கமாகிய **கோவா** என்னுமிடத்துக்குச் செல்லுகிறது. மற்றொன்று வடகிழக்காகக் கர்நூலுக்கும், கிழக்குமுகமாகக் குண்டூருக்கும் செல்லுகிறது. இவ்விடங்களிலெல்லாம் பூமி ஒரேவிதமாகச் சமுத்திரமட்டத்தைக் காட்டிலும் மிக உயர்ந்தும், மழைக்குறைவினால் நீரில்லாமலும் வறண்டபூமியாக விளையும் பொருள்களைக் கவனித்தீர்களா? சில பள்ளத்தாக்குகளில் புன்செய்த் தானியங்கள் விளைகின்றன. பல்லாரிக்கருகில் பருத்தி விளைகின்றது. பல்லாரி ஸ்டேஷனில் ஏராளமாகப் பருத்திப் பொதிகள் குவித்திருப்பதைப் பாருங்கள். இவ்விடங்களில் ஜன நெருக்கம் அதிகம் இல்லை. ஜனங்கள் மிகவும் பாடுபட்டுத்தான் கஷ்டஜீவனம் செய்யவேண்டியதாகின்றது. இவ்விடங்களெல்லாம் பார்த்து விட்டுத் திரும்பிச் சென்னபட்டணம் வந்துவிடுவோம்.

பிள்ளைகளே! மறுபடியும் கொஞ்சம் இளைப்பாறி சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே மற்றொரு புகைவண்டியிலேறிக் கிழக்குச் சமுத்திரக்கரையோரமாகச் செல்லும் இருப்புப்பாதையின் வழியாகப் பிரயாணம் செய்வோம். வடக்கே சுமார் நாற்பது மைல் தூரம் சென்றவுடன் ஒரு ஏரி கண்ணுக்குத் தெரிகிறது பாருங்கள். அதன் பெயர் ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். அதுதான் **புலிக்கட்டேரி**. அந்த ஏரியின் கரையைக் கவனியுங்கள். அதைச்சுற்றி நன்செய் வயல்கள் ஏராளமாய் இருக்கின்றன. இவ்விடங்களிலுள்ள மணற் குன்றுகளில் சவுக்குத்தோப்புகள் அதிகமாயிருக்கின்றன. இவைகளை வெட்டி விறகாக்கிச் சென்னைக்கு அனுப்புகிறார்கள். உப்பளங்களில் உப்புச் சாகுபடி செய்கிறார்கள். சமுத்திர ஜலம் ஏரியில் பிரவேசிப்பதால் பல விடங்களில் சிப்பிகள் எடுக்கப்பட்டு அவைகளிலிருந்து சுண்ணம்பு செய்யப்படுகிறது. இச்சரக்குகள் சமுத்திரக்கரை யோரத்திலிருக்கும் **பக்கிங்ஹாம் கால்வாய்** வழியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இங்கிருந்து வடக்கே சென்றால் **கூடூர்** என்னும் ஜங்ஷனுக்கு வரலாம். மத்தியில் பல விடங்களில் மலைகளின் சமீபத்தில் செல்லுகிறோம். மலைகளின் சிகரத்தில் செடி கொடிகள் குறைவாயிருக்கின்றன. அவைகளின் தாழ்வரைகளில் குட்டையான பல புதர்கள் இருக்கின்றன. கூடூர் ஜங்ஷனிலிருந்து **நெல்லூர்** என்னும் பட்டணம் வந்துவிட்டோம். இதன் வடக்கே **வடபெண்ணையாறு** ஓடுவதைக் கவனியுங்கள். இதற்கு வடக்கே இருப்புப்பாதை சமுத்திரத்தின் கரையோரத்திலே செல்லுகிறது. இங்கிருந்து **ஓங்கோல், தெனாலி** முதலிய இடங்களைக் கடந்து, பெஜவாடா வந்து சேருகிறோம். இவ்விடத்தில் **கிருஷ்ணா நதி** இருப்பதைக் கவனியுங்கள். **பெஜவாடா** இருப்புப்பாதைகளின் முக்கிய சந்திப்பாகும். கிருஷ்ணாநதியின்

குறுக்கே சுமார் முக்கால் மைல் நீளமுள்ள பாலமொன்றிருக்கிறது. கிருஷ்ணாநதியின் குறுக்கே பெஜவாடாவுக்குச் சமீபத்தில் அணைக்கட்டிருப்பதால், அதிலிருந்து வரும் கால்வாய்கள் பல விடங்களுக்குச் செல்வதைப் பாருங்கள். கிருஷ்ணாநதியில் சிறு படகுகள் இருக்கின்றன. அவைகள் சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதைக் கவனியுங்கள். சமுத்திரக்கரையோரமாக இருப்புப்பாதை வடக்கே செல்லுகிறது. கொஞ்சதூரத்திற் கப்பால் **கோதாவரி நதியை** வந்தடைகிறோம்.

கிருஷ்ணாநதிக்கும், கோதாவரிக்கும் மத்தியிலுள்ள பிரதேசங்களில் பல கால்வாய்களின் வழியாக ஜனங்கள் செல்வதன்றிச் சாமான்களும் கொண்டு போகப் படுகின்றன. இவ்விடங்களில் ரஸ்தாக்களைக் காட்டிலும், கால்வாய்களே போக்குவரத்துக்கு மிகவும் உபயோகப் படுகின்றன. புகைவண்டி கோதாவரி நதியின் பாலத்தைக் கடப்பதை உற்று நோக்குங்கள். இவ்வளவு அகலமுள்ள ஆற்றை நீங்கள் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? இதில் பல படகுகளும், சிறு நீராவிக் கப்பல்களும் ஜனங்களையும், சாமான்களையும் ஏற்றிக்கொண்டு அங்குமிங்கும் செல்லும் காட்சியைக் கவனியுங்கள்.

இவ்வாற்றுப் பாலம் சுமார் ஒன்றரை மைல் நீளமிருக்கிறது. பாலத்தின் மத்தியிலிருந்து பார்த்தால் ஆற்றின் பிரவாகமும், இருபுறங்களிலுமுள்ள கம்பீரமான தோற்றமும் மனத்தைக் கவர்கின்றன. இவ்விருநதிகளின் முகத்துவாரத்திலுமுள்ள பிரதேசங்கள் மிகச் செழிப்பாக இருக்கின்றன. **நெல், கரும்பு** முதலியவைகள் இங்கே சாகுபடி செய்யப்படுகின்றன. தென்னை, பனை முதலிய மரங்கள் வாய்க்கால்களின் கரையோரங்களில் உற்பத்தியாகின்றன.

இங்கிருந்து வடக்கே சென்றால் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள சமவெளி வரவரக் குறுகிவிடுகிறது. பல விடங்களில் மலைகள் மேற்கிலிருந்து வெகுதூரம் சமுத்திரக்கரை வரையில் வந்துவிடுகின்றன. **வால்டேர்** என்னும் ஜங்ஷனில் மலைகள் மிகவும் நெருங்கி வந்திருக்கின்றன. இங்கிருந்து வடக்கே சென்றால் **விஜயநகரம், பர்ஹாம்பூர்** முதலிய இடங்களுக்கு வரலாம். பர்ஹாம்பூர் தான் நமது ராஜதானியின் வடக்கெல்லையாகும். இது **சில்கா** என்னும் ஏரியின் கரையோரத்தில் இருக்கிறது. மதராஸிலிருந்து சுமார் எழுநூறு மைல் தூரம் வந்துவிட்டோம். பர்ஹாம்பூருக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் ஒரு கப்பலில் ஏறுவோம்.

அத்தியாயம். 19

சுற்றுப்பிரயாணம், கடல் மார்க்கம்.



ஸ்டீமர்

வடக்கே கல்கத்தாவிலிருந்து கடலோரமாகத் தெற்கே வரும் கப்பல்களில் நாம் ஏறும் கப்பல் ஒன்றாகும். நாம் கப்பலேறும் துறைமுகத்திற்குக் **கோபாலபுரம்** என்று பெயர். கப்பலிலிருந்து மேற்கே பார்த்தால் **மலயமலையும்,** அதன் சிகரமான **மகேந்திரகிரியும்** கண்ணுக்குப் புலப்படும். கப்பல் வரவரத் தெற்கே சென்று **விஜயநகரத்தைக்** கடந்து விசாகபட்டணத்துக்கு வந்துவிட்டது. இவ்விடத்தில் புதிய துறைமுகம் இருப்பதைப் பாருங்கள். சமுத்


சென்னை மாகாணம்
துறைமுகங்கள். கடல்மார்க்கங்கள்.
பிமிலிபட்டணம்
கல்கத்தாவுக்கு
விசாகபட்டணம்
கல்கத்தாவுக்கு
காக்கிநாடா
மசூலிபட்டணம்
வங்காளக் குடாக்கடல்
இரங்கூனுக்கு
சென்னபட்டணம்
மங்களூர்
பினங்கு
புதுச்சேரி
கூடலூர்
இரங்கூனுக்கு
சிங்கப்பூருக்கு
கள்ளிக்கோட்டை
நாக பட்டணம்
பம்பாய்க்கு
கொச்சி
அரபிக் கடல்
ஆலப்பிழை
பினங்கு
சிங்கப்பூருக்கு
கொழும்புக்கு
தனுஷ்கோடி
தூத்துக்குடி
லண்டனுக்கு
சிங்கப்பூருக்கு
இந்து மகா சமுத்திரம்
கொழும்பு

திரக்கரையிலிருந்து ஒரு மலையானது சமுத்திரத்துக்குள் கொஞ்ச தூரம் வருவதைக் கவனியுங்கள். இதற்கு உட்புறமாகக் கப்பல்கள் அமைதியான ஜலத்தில் தங்கியிருப்பதையும் கூர்ந்து நோக்குங்கள். ஜலம் ஏன் அவ்விடத்தில் அமைதியாயிருக்கிற தென்பதை நீங்களே கூறுங்கள்?

இங்கே ஏராளமாகச் சாமான்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கேயிருந்து தெற்கே சென்றால் கோதாவரி நதியின் முகத்துவாரத்துக்கு வரலாம். இதனருகில் சமுத்திர ஜலம் மஞ்சள் நிறமாக இருக்கிறது. இதன் காரணம் உங்களுக்குத் தெரியுமா? இங்கே **காக்கிநடா** என்பது முக்கியமான துறைமுகம். இங்கிருந்து கரைப்பக்கம் உற்று நோக்கினால் கொஞ்ச தூரத்தில் ஆகாயத்தில் புகை கிளம்புவதைப் பார்க்கலாம். இது சமீபத்தில் **சாமளக்கோட்டை** என்னும் இடத்திலிருக்கும் சர்க்கரை யந்திரச்சாலையிலிருந்து கிளம்புகிறது.

இங்கிருந்து வடக்கே வங்காளத்திற்கும், கிழக்கே பர்மா தேசத்திற்கும் கப்பல் போக்குவரத்து அதிகமாய் நடைபெறுகிறது. இத்துறைமுகத்தில் பர்மாவிலிருந்து வந்திருக்கிற புகைக் கப்பல்களைக் கவனித்தீர்களா? அவைகளிலிருந்து ஏராளமான மண்ணெண்ணெய் டின்கள் இறக்கப்படுகின்றன. சில கப்பல்களிலிருந்து பர்மாவிலிருந்து வந்த தேக்கு மரங்களும் இறக்கப்படுகின்றன.

இதற்குத் தெற்கே சென்றால் கிருஷ்ணாநதிக் கரைக்குச் சமீபத்திலுள்ள **மசூலிப்பட்டணம்** வருகிறோம். இதற்குப் **பந்தர்** என்று பெயர். இந்தப் பந்தர் ஒரு முக்கியத் துறைமுகமாகும். வழியில் **ஏனும்** என்ற பிரெஞ்சு இலாகா ஒன்றிருப்பதைப் பார்த்தீர்களா? இத் துறைமுகங்களில் நமது கப்பலிலிருந்து அனேக வெற்றுச் சாக்குமூட்டைகள் கீழே இறக்கப்படுகின்றன என்பதைக் கவனியுங்கள். இம் மூட்டைகள் கல்கத்தாவிலிருந்து கப்பலில் கொண்டுவரப்படுகின்றன. கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள பலவிடங்களில் சணல்கள் மிகுதியாய் விளைவதால் அவைகளிலிருந்து சாக்குப்பைகள் செய்யப்படுகின்றன. இவைகள் ஏராளமாய் உலகத்தில் எல்லாவிடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இப்பைகளை ஏன் ஏராளமாக இத் துறைமுகங்களில் இறக்குகிறார்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள்?

மசூலிப்பட்டணத்திலிருந்து தெற்கே சென்றால் சமுத்திரக்கரையோரம் மணற்குன்றுகள் அடர்ந்த தட்டைப் பிரதேசமாக இருக்கிறது. அப்பால் மரச்சோலைகள் தென்படுகின்றன. தெற்கே வந்தால் **புளிக்கட்டேரியை** வந்தடைகிறோம். இவ்விடங்களில் கட்டுமரங்களில் செம்படவர்கள் சமுத்திரத்துக்குச்சென்று மீன் பிடிப்பதைக் கவனியுங்கள். புளிக்கட்டேரியானது ஆழமில்லாமல் இருப்பதால் சமுத்திரத்திலிருந்து செல்லும் கால்வாய் வழியாய்க் கப்பல்கள் செல்ல முடிவதில்லை.

இங்கிருந்து தெற்கே செல்லுவோம். தூரத்தில் தோன்றுவது சென்னைத் துறைமுகத்துக்குச் சமீபத்திலுள்ள தீபஸ்தம்பமாகும். இத்துறைமுகம் நமது இராஜதானியிலுள்ள துறைமுகங்களுக்குள் மிகவும் முக்கியமானது. இவ்விடத்தில் பல கப்பல்கள் நிற்பதைக் கவனியுங்கள். தூரத்திலுள்ள அமெரிக்காக் கண்டத்திலிருந்தும், ஆங்கிலேய இராஜ்யத்திலிருந்தும் வியாபாரக் கப்பல்கள் வந்திருக்கின்றன. அமெரிக்காவிலிருந்துவரும் கப்பலிலிருந்து முக்கியமாக மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. இது கடலோரத்திலுள்ள மூடப்பட்ட பல உலோகக் கடாரங்களில் ஊற்றப்பட்டு நெருப்புமுதலியவைகளிலிருந்து உண்டாகும் அபாயத்

திலிருந்து பத்திரப்படுத்தப் படுவதைக் கவனியுங்கள்.

இங்கிலாந்திலிருந்து வரும் கப்பல்களிலிருந்து ஏராளமான துணிகளும், இயந்திரச்சாலைகளுக்கு உபயோகப்படக்கூடிய இரும்புச் சாமான்களும், என்ஜின்களும், மோட்டார் வண்டி முதலியவைகளும், ஆணிகள், கத்திகள், செம்பு, பித்தளைத் தகடுகள் முதலிய சாமான்களும் ஏராளமாய் இறக்கப்படுகின்றன. இவ்வளவு சாமான்களும், இருப்புப்பாதைகளின் வழியாக உள்நாட்டிலுள்ள பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கல்கத்தாவிலிருந்துவந்த சாக்குப்பைகளும், ஏராளமாக இறக்குமதியாகின்றன. சிலகாலங்களில் ஆஸ்திரேலியாவிலிருந்து ராணுவப்படைக்கும், பந்தய ஓட்டங்களுக்கும் ஏற்றதான அழகிய குதிரைகள் இறக்குமதியாகின்றன. இச்சரக்குகளை யெல்லாம் இறக்கிவிட்டுக் கப்பல்கள் நமது தேசத்திலுள்ள மாட்டுத்தோல், வேர்க்கடலை முதலிய பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்கின்றன.

இங்கிருந்து தெற்கே பிரயாணம் செய்வோம். கிழக்குத்தொடர்ச்சி மலைகளின் பாகங்கள் வரவர உட்புறம்



புதுச்சேரித் துறைமுகம்

தள்ளிச் செல்வதைக் கவனியுங்கள். தெற்கே பிரஞ்சு இலாகாவான புதுச்சேரி என்னும் துறைமுகத்தைக்கடந்து கூடலூருக்கப்பால் நாகப்பட்டினம் வந்துசேருகிறோம். வழியிலுள்ள துறைமுகங்களில் முக்கியமாக ஏற்றப்படும் சாமான் வேர்க்கடலையாகும். நாகப்பட்டினத்திலிருந்து அரிசி ஏற்றப்படுகிறது. இப்பிரதேசத்தில்தான் காவேரி யாற்றின் பல கிளைகளின் முகத்துவாரங்கள் இருக்கின்றன. இங்கிருந்து தெற்கே வந்தால் பாக்ஸ்ஜலசந்திக்குச் சமீபத்தில் வருகிறோம். இதன் வழியாகச் செல்வது அபாயமாகையால் கப்பல் இலங்கையின் வடகோடியிலிருந்து கிழ்ப்புறமாகச் சென்று இலங்கையைச் சுற்றிக்கொண்டு வருகிறது. ஏன் பாக்ஸ் ஜலசந்தியின் வழியாகக் கப்பல்கள் செல்ல முடியாவென்று சொல்லுவீர்களா ?

இலங்கையின் தென் பாகத்திலிருந்து மறுபடியும் அதன் மேற்குக் கடற்கரையோரமாக வடக்கே சென்று கொழும்பு என்னும் முக்கிய துறைமுகத்தை அடைகிறது. இவ்விடத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பர்மா முதலிய இடங்களிலிருந்து அனேக கப்பல்கள் வந்திருப்பதைக் கவனியுங்கள். பல கப்பல்கள் வியாபாரத்துக்காகவும், சில பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும் உபயோகப் படுகின்றன. இவ்விடத்தில் முக்கியமாக அரிசி மூட்டைகள், தேயிலை, ரப்பர் முதலிய சாமான்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கிலாந்திலிருந்து வரும் கப்பல்களிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலக்கரி முழுதும் எதற்கு உபயோகப்படுத்தப் படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். சில புகைக்கப்பல்கள் மேற்கிலிருந்து வருவதைக் கவனியுங்கள்.

அவைகள் தூத்துக்குடி என்னும் துறைமுகத்திலிருந்து வருகின்றன. அவைகளிலிருந்து பல கூலியாட்கள் இங்கே இறங்குகிறார்கள். அவர்கள்

இலங்கைத்தீவிலுள்ள ரப்பர், தேயிலை முதலிய தோட்டங்களில் வேலை செய்வதற்காக வருகிறார்கள். விசித்திரமான உடைகளைத் தரித்த பல சில்லரை வியாபாரிகள் இங்கே வியாபாரம் செய்ய வருவதைப் பாருங்கள். அவர்கள் சிங்கள சாதியைச்சேர்ந்தவர்கள். தலையில் சிலர் தொப்பியை அணிந்துகொண்டிருக்கிறார்கள். சிலர் ஆமையோட்டினால் செய்த சீப்புக்களைத் தலையில் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கிருந்து நாம் ஒரு சிறு கப்பலில் ஏறி மேற்கேயுள்ள தூத்துக்குடி என்னும் துறைமுகத்துக்கு வந்து சேருவோம். இங்கிருந்து ரயில்வழியாக நாமிருக்கும் ஊர்களுக்குச் செல்வது சுலபமாகிவிடும்.

அத்தியாயம் 20.

நமது ராஜதானியைச் சேர்ந்த இந்திய அரசாங்கங்கள்.

பிள்ளைகளே ! முன்னமே பதினைந்தாவது அத்தியாயத்தில் **திருவாங்கூர், கொச்சி** முதலிய அரசாங்கங்களைப் பற்றி விவரித்திருக்கிறோம். மற்றவைகளான **மைசூர், புதுக்கோட்டை, பங்கன்பள்ளி, சாந்தூர்** முதலியவைகளுள் முக்கியமானவைகளைப் பற்றி இங்கே விவரிப்போம்.

I. **மைசூர்**:—இந்த ராஜ்யம் தெற்கேயிருக்கும் ராஜ்யங்களுக்குள் பெரிது. மைசூர் யுத்தத்திற்குப் பிறகு இந்த ராஜ்யம் முன்னம் இவ்விடத்தில் அரசு புரிந்து வந்த இந்திய அரசர் வசம் ஆங்கிலேயர்களால் ஒப்புவிக்கப்பட்டது. இதன் விஸ்தீர்ணம் சுமார் 4000 சதுர மைல். இது மேற்குத்தொடர்ச்சி மலையும், கிழக்குத்தொடர்ச்சி மலையும் கூடும் நீலகிரி மலைக்கப்பால் உள்ளது. தட்சிணபீடபூமியின் தென்பாகத்தில் இது அமைந்துள்ளது. இங்கே பல மலைத்தொடர்களிருக்கின்றன. இடையிடையே பல பள்ளத்தாக்குகளும் உண்டு. மலைகளடர்ந்த மேற்குப்பிரதேசத்திற்கு **மலைநாடு** என்று பெயர். இது சமுத்திர மட்டத்துக்குமேல் மிகவும் உயர்ந்தது.

மேற்கேயுள்ள குடகு ராஜ்யத்திலிருந்து காவேரி என்னும் நதி உற்பத்தியாகி இந்த ராஜ்யத்தின் வழியாக ஓடுகிறது. கிழக்கே **சிவசமுத்திரம்** என்னுமிடத்தில் மலையிலிருந்து கீழே விழுந்து சென்னை ராஜதானிக்குள் பிரவேசிக்கிறது. இந்நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டு, விளக்குகள் போடுவதற்கும், கோலார் என்னுமிடத்திலுள்ள தங்கச்சுரங்க யந்திரசாலைகளை இயக்குவதற்கும் உபயோகப்படுத்தப் படுகிறது.

காவேரிக்குக் கண்ணம்பாடி என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதிலிருந்து சமீபத்திலுள்ள மைசூர் ராஜ்யத்தின் பல இடங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வடக்கே **பாலாறு, வடபெண்ணை** முதலிய ஆறுகள் ஓடுகின்றன. சமுத்திர மட்டத்துக்கு மேல் மிகவும் உயரமாய் இருப்பதால் பெங்களூர் முதலிய இடங்கள் வாசத்துக்கு யோக்கியமாயிருக்கின்றன.

காடுகளில் புலி, சிறுத்தை, யானை, கரடி முதலிய விலங்குகள் அதிகமாயிருக்கின்றன. அவைகளைப்பலர் வேட்டையாடுகிறார்கள். தேக்கு, கருங்காலி, சந்தனம் முதலிய மரங்களும் உற்பத்தியாகின்றன. காப்பிக்கொட்டை, தேயிலை முதலிய தோட்டங்கள் அதிகமாயிருக்கின்றன. வடக்கே கரிசல் மண் உள்ள பிரதேசத்தில் பருத்தி விளைகிறது. பெங்களூரில் பட்டு நெய்கிறார்கள். ரயில் மார்க்கங்களின் வழியாக இப்பொருள்களெல்லாம் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இதில் முக்கியமாக ஜனங்கள் பேசுவது கன்னட பாஷையாகும். சில விடங்களில் தெலுங்கும் பேசப்படுகிறது.

மைசூர் என்னும் பட்டணம் இதன் தலைநகரமாகும். சாமராஜபுரம் என்ற பாகமும் இத்துடன் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. பெங்களூர் என்பது கோடைக்கால வாசத்துக்கு ஏற்ற ஸ்தலம். இது ஒரு ராணுவஸ்தலமுமாகும். மைசூர் ராஜ்யத்தில் ஒரு சர்வகலாசாலை யுள்ளது. இங்கே படிப்பு அதிகம். முற்போக்கான இந்திய ராஜ்யங்களுள் இதுவும் ஒன்று. மகாராஜாவினிடத்தில் ஜனங்களுக்குப் பக்தி அதிகம். இங்கே **தசராப்பண்டிகை** வெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது.

ஸ்ரீரங்கப்பட்டண மென்பது **ஹைதர் அலி, திப்புசுல்தான்** முதலியவர்களால் ஏற்படுத்தப்பட்ட தலைநகரமாகும். இது காவேரியாற்றின் இரு கிளைகளுக்கும் மத்தியில் அமைக்கப்பட் டிருக்கிறது. தற்காலத்தில் இது வசிப்பதற்கு வசதியில்லாமல் பாழடைந்திருக்கிறது. கோலார் என்னுமிடத்தில் தங்கச்சுரங்கம் ஒன்றிருக்கிறது. இவ்வூரில்தான் **ஹைதர் அலி** பிறந்ததாகச் சொல்லுகின்றனர்.

II. **புதுக்கோட்டை**:— இது ஒரு சிறிய சுதேச சமஸ்தானம். வடக்கே திருச்சிராப்பள்ளியும், தெற்கே இராமநாதபுரமும், கிழக்கே தஞ்சாவூரும் இருக்கின்றன. இதை யாளும் அரசருக்குத் **தொண்டைமான்** என்று பெயர். இவ்விராஜ்யம் முன்காலத்தில் பல்லவ அரசர்களால் ஏற்படுத்தப் பட்டது. இங்கே மழை மிகக் குறைவு. குளங்களிலிருந்தே நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. **கேழ்வரகு, கம்பு** முதலிய புன்செய்த்தானியங்கள் பயிரிடப்படுகின்றன. இதில் **நவராத்திரி விழா** விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

III. **பங்கன்பள்ளி**:—இது ஒரு சிற்றரசு. இது **கர்நூல்** ஜில்லாவிலுள்ளது.

IV. **சாந்தூர்**:—இதுவும் ஒரு சிற்றரசாகும். இது பல்லாரியிலுள்ளது.

ஆர்க்டிக் மகா சமுத்திரம்
ஆர்க்டிக் மகா சமுத்திரம்
அலாஸ்கா
கனடா
வட அமெரிக்கா
ஐக்கிய நாடுகள்
மெக்ஸிகோ
ஜமைகா
பனமா
அமேஸா நதி
ப்ரேஸில்
தென் அமெரிக்கா
பஸிபிக் மகா சமுத்திரம்
அட்லாண்டிக் மகா சமுத்திரம்
இங்கிலாந்து
ஐரோப்பா
ரஷ்யா
ஜிப்ரால்டர்
எகிப்து
ஸஹாரா
ஆப்ரிக்கா
ஸூயஸ்
பம்பாய்
சென்னை
திபேத்
சீனா
ஜப்பான்
ஸைபீரியா
ஆ சி யா
போர்னியோ
ஜாவா
ஆஸ்திரேலியா
இந்துமகா சமுத்திரம்
புமத்திய ரேகை
தென் சமுத்திரம்

உலகப்படம்.

அத்தியாயம் 21.
உலக விஷயங்கள்

பிள்ளைகளே! ஏற்கனவே நான் காவதுவகுப்பில் நமது ஜில்லாவானது பூமியின் ஒரு சிறுபாகம்தான் என்றும், இதைக்காட்டிலும் இன்னும் அநேக இடங்களிருக்கின்றன என்றும் தெரிந்துகொண்டிருக்கிறோம். இப்பொழுதும் இப்பூகோள சரித்திரத்தை ஆரம்பிக்கும்பொழுது நமது ராஜதானி இந்தியா என்னும் பெரிய தேசத்தின் ஒரு பிரிவென்றும், இந்தியாவானது ஆசியா என்னும் ஒரு பெரிய கண்டத்தின் ஒரு பாகமென்றும், ஆசியாவானது பூலோகத்திலிருக்கும் பல கண்டங்களுள் ஒன்றென்றும் அறிந்துகொண்டோம். ஆதலின் உலகத்தில் பெரிய பாகங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று சற்று ஆராய்வோம்.

கொடுக்கப்பட்டிருக்கும் உலகப் படத்தைச் சற்று, கூர்ந்து நோக்குங்கள். அதில் நமது இராஜதானி எங்கே இருக்கிறது? அதன் தலைநகராகிய சென்னபட்டணத்தைக் காட்டுங்கள்? அங்கிருந்து கிழ்த்திசையை நோக்கிப் பிரயாணம் செய்வதாக வைத்துக் கொள்வோம். கிழக்கே வங்காளக் குடாக்கடலைத் தாண்டி அதற்கப்பால் பர்மா தேசத்தை யடையலாம். பர்மாவானது சென்ற வருஷம் வரையில் அரசாங்க விஷயத்தில் நமது தேசத்தோடு இணைக்கப்பட்டு வைஸிராயின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தது. இப்பொழுது தனியாகப் பிரிந்து விட்டது. இத்தேசம் பெரும்பாலும் மலைகளால் சூழப்பட்டிருக்கிறது. இங்கே **ஐராவதி** என்னும் நதியானது வடக்கிருந்து தெற்கு முகமாக ஓடுகிறது. அதன் கரையோரத்தில் பர்மாவின் தலைநகராகிய ரங்கூன் இருக்கிறது. இங்கிருந்து வடகிழக்காகச் சென்றால் சீனு தேசத்துக்குப் போகலாம். இவ்விடத்தில் பெரிய ஆறுகள் கிழக்குநோக்கி ஓடுகின்றன. சீனவிலிருந்து மேற்கே சென்றால் **திபேத்** என்னும் பீடபூமி இருக்கிறது. அதில் குளிர் அதிகம். ஜனத்தொகை மிகவும் குறைவு.

இதற்கு வடக்கே **ஸைபீரியா** என்னும் ஒரு பெரிய தேசமிருக்கிறது. இங்கே கிழக்கிருந்து மேற்கு முகமாக **ரஷ்யாதேசம்** வரையில் பெரிய இருப்புப் பாதை செல்லுகிறது. இங்கே குளிர் அதிகம். வடக்குச் சமுத்திரக்கரையோரத்தில் பனி நிறைந்த இடங்களில் கலைமான் வண்டிகள் உருளையின்றிச் செல்லுகின்றன. வடக்குச் சமுத்திரம் பெரும்பான்மையான காலங்களில் பனியால் மூடப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் வசிக்கும் ஜனங்களையும், அவர்களின் வாழ்க்கையையும் கவனியுங்கள். இங்கே **ஸீல்** என்னும் சமுத்திரப் பிராணிகளும், வெள்ளை நிறக் கரடிகளுமிருக்கின்றன. சீன தேசத்துக்கு அப்பால் சமுத்திரத்தைத் தாண்டிச் சென்றால் ஜப்பான் தீவுகளுக்கு வரலாம். இவ்விடத்திலுள்ள ஜனங்கள் மிக்க சுறுசுறுப் புள்ளவர்களா யிருக்கிறார்கள். இங்கே கைத்தொழில் அதிகம்.

பிள்ளைகளே! மதராஸிலிருந்து கப்பல் ஏறித் தென்கிழக்காகச் சென்றால் **ஜாவா, போர்னியோ** முதலிய கிழக்கு இந்தியத் தீவுகளைக்கடந்து **ஆஸ்திரேலியா** என்னும் பெரிய தீவுக்கு வரலாம். இது ஒரு தனியான கண்டமாகும். இதன் மத்திய பாகங்களும், வடபாகங்களும் நீரற்ற பாலை வனங்களாயிருந்தபோதிலும் சமுத்திரக்கரை யோரங்களில் நாகரிகமுள்ள ஆங்கிலேயக் குடிகள் வசிக்கின்றனர். இக்கண்டத்தில் தங்கச்சுரங்கங்கள் அதிகம். ஏராளமான ஆட்டுமந்தைகள் மைதானங்களில்மேய்கின்றன.

இதற்குக் கிழக்கே **நியூஸிலந்து** என்னும் பெரிய தீவு இருக்கிறது. இங்கும் ஆங்கிலேயக் குடிகளே வசிக்கின்றனர். இதற்குக் கிழக்கேயுள்ள சமுத்திரத்துக்குப் **பஸிபிக் மகா சமுத்திரம்** என்று

பெயர். இச்சமுத்திரத்தில் ஏராளமான சிறு தீவுகள் நிறைந்து கிடக்கின்றன. அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்றால் அமெரிக்கா என்னும் கண்டத்திற்கு வருகிறோம்.

அமெரிக்கா கண்டமானது இரண்டு பூபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பதைப்பாருங்கள். வடக்கே இருப்பதற்கு **வடஅமெரிக்கா** என்றும், தெற்கே இருப்பதற்குத் **தென்அமெரிக்கா** என்றும் பெயர். இவ்விரண்டும் நடுவில் குறுகிய பூபாகமாகிய **பனமா** பூசந்தியினால் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வட அமெரிக்காவில் மூன்று தேசங்கள் இருக்கின்றன. அவைகளாவன தெற்கே **மெக்ஸிகோ**. அதற்கப்பால் **ஐக்கிய நாடுகள்**, அதற்கப்பால் **கானடா** என்பனவாம். தென் அமெரிக்காவில் பல தேசங்களிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது **ப்ரஸீல்**. இக்கண்டத்தின் வடக்குக் கோடியில் **அலாஸ்கா** என்னுமிடத்திலிருந்து மத்திய அமெரிக்காவின் வழியாகத் தென் அமெரிக்காவின் கோடிவரையில் மலைகள் மேற்குக் கடற்கரை யோரமாகச் செல்லுகின்றன.

வட அமெரிக்காவிலுள்ள மலைகளுக்கு **ராக்கிமலைகளென்றும்**, தென்னமெரிக்காவிலுள்ளமலைகளுக்கு **ஆண்டீஸ் மலைகளென்றும்** பெயர். வட அமெரிக்கா நாகரிகத்திலும், ஐஸ்வரியத்திலும் சிறந்தது. அங்கு உலகத்திலே வெகு நீண்டதான **மிஸௌரிமிஸஸிபி** என்ற நதியானது ஓடுகிறது. தென்னமெரிக்காவில் உலகத்திலே மிகப்பெரிதான ஜலப்பிரவாகத்தோடு கூடிய **அமேஜான்** என்னும் நதி ஓடுகின்றது. அமேஜான் என்னும் நதிக்கரை யோரங்களெல்லாம் மிகக் காடுகள் அடர்ந்திருக்கின்றன. இங்கிருந்து கிழக்கே சென்றால், மேற்கிந்தியத் தீவுகளுக்கு வரலாம். இங்கே ஜமைகா என்னும் தீவில் ஏராளமாகக் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து நேராகக் கிழக்கே பிரயாணம் செய்தால் **ஆப்பிரிக்கா** கண்டத்துக்கு வரலாம்.

ஆப்பிரிக்கா கண்டத்தின் மத்ய பாகத்தில் **பூமத்யரேகை** செல்லுகிறது. ஆகையால் அது உஷ்ணமண்டலத்திலிருக்கிறது. வடக்கே உலகத்திலே பெரிதான **ஸஹாரா** என்னும் பாலைவனமிருக்கிறது. இப்பாலைவனத்தின் கிழக்கே **நீலநதி** என்பது மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து உற்பத்தியாகி, வடக்கு முகமாகச்சென்று **எகிப்து** தேசத்தின் வழியாக மத்தியதரைக் கடலில் விழுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில் அடர்ந்த காடுகள் அதிகம். அங்கே ஏராளமாகக் காட்டு மிருகங்கள் வசிக்கின்றன. ஆப்பிரிக்காவுக்கும், அமெரிக்காவுக்கும் மத்தியிலுள்ள சமுத்திரத்துக்கு **அட்லாண்டிக்** மகா சமுத்திரம் என்றுபெயர். இதன் வடபாகத்தில் சென்றால் பிரிட்டிஷ் தீவுகளுக்கு வரலாம். இவைகளுக்கு எதிரே **ஐரோப்பாகண்ட** மிருக்கிறது. இதில் பல நாகரிகமுள்ள ராஜ்யங்களிருக்கின்றன. இக்கண்டத்தில் குளிர் அதிகம். சமுத்திரக்கரை யோரமாகத் தெற்கே சென்றால் **ஜிப்ரால்டர்** என்னும் முனைக்கு வரலாம். இவ்விடத்தில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்துக்கும், மத்தியதரைக் கடலுக்கும் மத்தியில் ஜலசந்தி இருக்கிறது. அதன் வழியாக, மத்தியதரைக் கடலைத்தாண்டி **ஸூயஸ்** என்னும் கால்வாய் வழியாகப் பம்பாய்த் துறைமுகம் வந்து சேரலாம்.

சிறுவர்களே! உலகத்தின் வடிவம் எப்படி இருக்கிறதென்று இதனால் நீங்கள் சுலபமாய் அறியலாம். மதராஸிலிருந்து கிழக்கு நோக்கிச்சென்ற நாம் மறுபடியும் மேற்குப் பக்கத்திலிருந்து இந்தியாவுக்கு வந்துசேர்ந்துவிட்டோம். ஆகையால் நீங்கள் பூமி உருண்டையாயிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இங்கிருந்து இவ்வாறாகத் தெற்குத் துருவம் வரையில் பிரயாணம்செய்தால், எங்குப்பார்த்தாலும் சமுத்திர மயமாகவே இருப்பதைக் காணலாம்.

சீதோஷ்ண நிலைமையானது வர வர உஷ்ணத்திலிருந்து மித உஷ்ணமாகவும், மித உஷ்ணத்திலிருந்து சம உஷ்ண சீதளமாகவும், பிறகு சீதளமாகவும், அப்பால் அதி சீதளமாகவும் முடிகிறது. தெற்குச் சமுத்திரக் கோடியில் எங்குப்பார்த்தாலும் பனிக்கட்டியாயிருக்கிறது. இதேமாதிரியாக நமது இராஜதானியிலிருந்து வடக்கே சென்றால் சீதோஷ்ணம் மேலே கூறியபடி மாறுபாட்டை அடைகின்றது. இப்பாடத்தின் ஆரம்பத்தில் நாம் தெரிந்துகொண்டது போல வடக்குச் சமுத்திரமும் பனிக்கட்டியினால் மூடப்பட்டிருக்கிறது.

பூலோகத்தை நாம் எதற்குச் சுற்றி வந்தோமென்றால் நீங்கள் மேல் வகுப்புக்களில் நமது தேசத்தின் பூகோளத்தையும், அவ்வாறே உலகத்திலுள்ள பல தேசங்களின் பூகோளத்தையும் படிக்க நேருமானதால் அதனுடைய சாரத்தை இப்பொழுது விளக்கிக்காட்டினோம். அன்றியும் இவ்வகுப்போடு படிப்பை நிறுத்துகிறவர்களும் இதையறிந்து கொள்ளுவது அத்தியாவசியமாகும். நமது ராஜதானியின் பூகோளத்தை யறிவதற்கு ஆறுகள், மலைகள், காடுகள், கடல்கள், சீதோஷ்ண நிலைமை, பருவக்காற்றுகள் முதலியவைகளைத் தெரிந்துகொண்டது போல், பூலோகத்தின் பூகோளத்தைப்பற்றிப் படிக்கும்பொழுது இவ்வாறே படிக்க வேண்டுமென்பதை நீங்கள் உணர வேண்டும். மனிதனது வாழ்விற்கு இவைகளெல்லாம் எப்படி உபயோகப் படுகின்றன என்றும், அவனது வாழ்வை இயற்கைச் சாதனங்கள் எப்படிப் பாதிக்கின்றன என்றும் நீங்கள் நன்றாய் அறிந்தால்தான் பூகோள சாஸ்திரப் படிப்பின் நற்பயன் அடைந்தவர்களாவீர்கள்.

முற்றிற்று.

Printed at the Excelsior Power Press, Madura:—1938.